# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆடி 05 செவ்வாய்க்கிழமை (20-07-2004) UTHAYAN - A Lively National Tamil Daily சுதிர்: 238


## நாடாளுமன்றில் மீண்டும் இன்று அரசு - எதிரணி பலப் பரீட்சை

கொழும்பு,ஜூலை20

அரசு - எதிரணி எம்.பிக்களின் மோதல்களினால் சண்டைக் களமான நாடாளுமன்றம் சுமார் ஆறுவார இடை வெளிக்குப் பின் மீண்டும் இன்று கூடுகின்றது.

இன்று முஷ்டியை முறுக்கிக் கறுவிக்கொண்டு மோதல் களத்தில் இறங்குவதற்கு அரசு, எதிரணி எம்.பிக்கள் தயாராக இருக்கிறார்கள் எனத் தெரிகின்றது.

தென்னிலங்கை அரசியலில் பெரும் குழப்பமான நிலையில் நாடாளுமன்றம் இன்று மீண்டும் கூடுகின்றது.

புதிய அரசின் காலத்தில் இதுவரை இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வுகள் மூன்றும் பெரும் களேபரத்திலேயே முடிவுற்றிருக்கின்றன. நாடாளுமன்றின் வழமையான பணியேதும் இன்னும் நடைபெற ஆரம்பிக்கவில்லை.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாகம் குறித்து நாடாளுமன்று இன்று விவாதிக்காது

கொழும்பு,ஜூலை20

வடக்கு - கிழக்கிற்கான இடைக் காலத் தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான விவாதம் இன்று நாடாளுமன்றத்தில் நடைபெறாது.

சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம். லொக்கு பண்டார தலைமையில் நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் ஆளும் கட்சியின் சார்பில் அமைச்சர்களான மைத்திரிபால சிறிசேன, அநுரா பண்டாரநாயக்க, தினேஷ் குணவர்த்தன ஆகியோருடன் ஜே.வி.பியின் விமல் வீரவன்ஸ எம்.பியும் -

எதிர்க்கட்சிகளின் சார்பில் மஹிந்த

(16 ஆம் பக்கம் பார்க்க)

# யுத்தத்தை அரசு திணித்தால் எதிர்கொள்ளப் புலிகள் தயார்!

## தமிழ்ச்செல்வன் நேற்று அறிவிப்பு

கிளிநொச்சி, ஜூலை20

**சிறிலங்கா அரசு சமாதானச் சூழ்நிலையை சீர்குலைத்து ஒரு போரினைத் திணிக்க முற்படுகின்றது. அப்படி எமது தேசத்தின் மீது ஒரு போர் திணிக்கப்பட்டால் அதனை எதிர்கொள்ளப் புலிகள் எப்போதுமே தயாராகவுள்ளனர்.**

**- இவ்வாறு அறிவித்திருக்கிறார் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.**

நேற்றுக் கிளிநொச்சியில் உலகவங்கியின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசிய பின்னர் ஊடகவியலாளருக்குக் கருத்துத் தெரிவிக்கும்போது 'சிறிலங்கா அரசு சமாதானச் சூழலை சீர்குலைத்து யுத்தத்தை எமது தேசத்தின் மீது திணிக்கின்றபோது அதனை எதிர்கொள்ளத் தமிழீழ விடுதலைப் புலிகள் 'எப்போதுமே தயாராகவுள்ளனர்' என்று சு.ப. தமிழச்செல்வன் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

சிறிலங்கா அரசு சமாதானச் சூழலைச் சீர்குலைத்து ஒரு போரினைத் திணிக்க முற்படு

(16 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லை முகாம் வெற்றிவிழா

புதுக்குடியிருப்பு,ஜூலை20

முல்லைத்தீவு இராணுவமுகாம் விடுதலைப் புலிகளால் வசப்படுத்தப்பட்டதன் 8 ஆம் ஆண்டு நிறைவு விழாவின் விசேட நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

முன்னதாக பெருந்திணைக்களம் சந்தியிலிருந்து பிற்பகல் 5.30 மணிக்கு வெற்றி விழாப் பேரணி புறப்பட்டது. இப்பேரணி பொது விளையாட்டு மைதானத்தைச் சென்றடைந்தது.

அங்கு பொது ஈகச்சுடரை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகமும் தமிழீழத் தேசியக் கொடியை கடற்புலிகளின் தாக்குதல் பிரிவுத் தளபதி மங்களேஸூம் ஏற்றி வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து ஓயாத அலைகள் சமரில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கு மலரஞ்சலி இடம்பெற்றது.

தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.கனகரத்தினம், முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் ஆகியோர் உட்படப் பலரும் சுடரினை ஏற்றி மலரஞ்சலி செலுத்தினர். கலை நிகழ்வுகளாக பண்டாரவன்னியன் நாடகம், தீநடனம் ஆகியவை இடம்பெற்றன.

(ஒ-353)

## இலங்கை அரசு கேட்டால் மட்டுமே இந்தியா தலையிடும் எனத் தெரிவிப்பு

### இருநாட்டுப் பிரதமர்கள் சந்திப்பில் கருத்து

கொழும்பு,ஜூலை20

இலங்கை அரசு கேட்டுக்கொள்ளும் பட்சத்தில் மாத்திரமே இலங்கையின் இனப்பிரச்சினை விடயத்தில் இந்திய அரசு நேரடியாகத் தலையிடும் என்ற தனது அரசின் உறுதியான நிலைப்பாட்டை இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், இலங்கைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் வெளியிட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் கூடிய விரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டும் என இந்தியத் தலைவர்கள், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் வலியுறுத்தியுள்ளனர்.

இருநாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இந்தியா சென்றிருந்த பிரதமர் நேற்றுமுன்தினமும் நேற்றும் இந்தியத் தலைவர்களைச் சந்தித்துப் பேசியபோது அவர்கள் சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், ஜனாதிபதி அப்துல் கலாம், இந்தியக் காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுக்களில் ஈடுபட்டார்.

புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்காக நோர்வே அனுசரணையுடன் இலங்கை அரசு மேற்கொண்டு வருகின்ற முயற்சிகள் குறித்துப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்தியத் தலைவர்களுக்கு விவரித்தார்.

இந்த விஜயத்தின்போது இலங்கையின் வர்த்தக, பொருளாதார, விவசாய, போக்குவரத்து மற்றும் சமூக அபிவிருத்தி தொடர்பாக இந்திய

(16 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சிக்கு ஹெல்கிஸன் ஜூலை 26 ஆம் திகதி வருகை

கிளிநொச்சி,ஜூலை20

தடைப்பட்டுள்ள சமாதான முயற்சிகளை நகர்த்துவது தொடர்பாக ஆராய்வதற்காக நோர்வே சமாதானக் குழுவின் தலைவரும் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சருமான விடர் ஹெல்கிஸன் எதிர்வரும் 26 ஆம் திகதி கிளிநொச்சி செல்கிறார்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (25ஆம் திகதி) இலங்கை வரும் ஹெல்கிஸன், கொழும்பில் அரசுத் தலைவர்களுடன் பேச்சு நடத்தியபின், அங்கிருந்து 26 ஆம் திகதி வன்னிக்குப் புறப்ப

(16 ஆம் பக்கம் பார்க்க)

## வேலூர் அகதி முகாமில் தமிழ் இளைஞர் கைது!

கொழும்பு,ஜூலை20

தமிழ்நாட்டின் வேலூர், வாலாஜாப்பேட்டை அகதி முகாம் பகுதியில் வைத்துக் கருணாவின ஆதரவாளர் ஒருவர் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்.

வாலாஜப்பேட்டை, பாலாறு அணைக்கட்டு எனுமிடத்தில் இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்த தமிழர்கள் தங்கியிருக்கும் முகாம் அமைந்துள்ளது. அங்கு சுமார் 150 குடும்பத்தினர் வசித்து வருகின்றனர்.

சில தினங்களாக இம்முகாமில் இலங்கைத தமிழ்த் தீவிரவாதிகள் நடமாடி வருகின்றனர் எனப் பொலீஸாருக்குக் கிடைத்த தகவலை

(16 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தளபதி சொர்ணம் ஹெலியில் திருமலை வந்தார்

திருகோணமலை,ஜூலை20

விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்டக் கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம் வன்னியிலிருந்து விசேட ஹெலி மூலம் நேற்று திருகோணமலை வந்தடைந்தார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள சேனையூர் மகா வித்தியாலய மைதானத்தில் நேற்றுமுற்பகல் 10.30 மணிக்கு வந்திறங்கிய அவரை பெரும் எண்ணிக்கையான பொதுமக்

(16 ஆம் பக்கம் பார்க்க)



கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற உலக வங்கியின் அபிவிருத்தி அறிக்கையின் தமிழ் பிரதி வெளியீட்டு நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள். (படங்கள்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# காரைநகரில் நெருப்புக்காய்ச்சல் தீவிரமடைந்தும் மருந்துகள் இல்லை

## சுகாதாரத் திணைக்களம் குறித்து மக்கள் விசனம்

காரைநகர்,ஜூலை20

காரைநகரில் நெருப்புக்காய்ச்சல் தீவிரமாகப் பரவிவருவதால் காரைநகர் வைத்தியசாலைக்கு சிகிச்சைபெற வரும் நோயாளர்களின் எண்ணிக்கை என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளது. ஆயினும், இன்றுவரை அவ்வைத்தியசாலைக்கு அரச சுகாதார திணைக்களத்தால் நெருப்புக்காய்ச்சலுக்குரிய மருந்து வகைகள், குளோரின் என்பன அனுப்பிவைக்கபபடவில்லை எனக் கூறப்படுகின்றது.

இந்த வைத்தியசாலையில் ஏரேயொரு வைத்திய அதிகாரியும், மிகக் குறைந்தளவு தாதியர்களும், ஊழியர்களும் கடமையாற்றுகின்றனர். நேற்றையதினம் இரண்டு தாதியர்கள் கடமைக்கு சமுகமளிக்காமையால் விடுதிகளில் தங்கியுள்ள நோயாளர்களும் ஏனைய நோயாளர்களும் பெரும் சிரமங்களையும் அசௌகரியங்களையும் எதிர்நோக்கினர் என்று கூறப்படுகின்றது.

நெருப்புக்காய்ச்சல் காரைநகர் மத்தி கிராமத்தில் தொடங்கி தற்போது ஊரி, தோப்புக்காடு, வலந்தலை போன்ற கிராமங்களுக்கும் பரவ ஆரம்பித்துள்ளது. இவ்வாறு நெருப்புக்காய்ச்சல் தீவிரமாக பரவும் வேளையில் சுகாதாரத் திணைக்களம் பாராமுகமாக இருப்பதாக அப்பகுதிப் பொதுமக்கள் கவலையடைந்துள்ளனர்.

இதேவேளை - தமிழீழ சுகாதார சேவைகள பிரிவால் காரைநகர் அரசினர் வைத்தியசாலைக்கு ஒரு தொகுதி நெருப்புக்காய்ச்சல் மருந்து மற்றும் குளோரின் என்பன வழங்கப்பட்டுள்ளன. அத்துடன், இந்த நோயாளர்களுக்கு நெஸ்ரமோல்ட், தோடம்பழம், செவ்விள நீர் என்பனவற்றையும் அவர்கள் வழங்கியுள்ளனர்.

அத்துடன், கிராமங்கள் தோறும் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளையும் கிணறுகளுக்கு குளோரின் இடும் பணிகளையும் தமிழீழ சுகாதார சேவையினர் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-73)

## நல்லூர் பிரதேச சபையின் புத்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஜூலை20

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட கொக்குவில், நல்லூர், கோண்டாவில் ஆகிய பொது நூலகங்கள் இணைந்து நடத்தும் புத்தகக் கண்காட்சி இன்றும் நாளையும் நாளைமறுதினமும் கொக்குவில் பொது நூலகத்தில் நடைபெறவுள்ளது.

இன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகவிருக்கும் இந்தக் கண்காட்சிக்கு பிரதம விருந்தினராக யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா கலந்து கொள்வார். (4)

# 'கசூரினா'வுக்கு வரும் பொதுமக்கள் உணவு, குடி தண்ணீர் எடுத்துவரவும்

காரைநகர்,ஜூலை20

காரைநகரில் நெருப்புக்காய்ச்சல் தீவிரமாகப் பரவி வருவதால் அங்குள்ள 'கசூரினா' கடற்கரை போன்ற இடங்களுக்கு சுற்றுலா மேற்கொண்டுவருவோர், தமக்கான உணவு குடிதண்ணீர் என்பவற்றை கொண்டுவருமாறும் -

தவறின், பாதுகாப்பான உணவு, குடி தண்ணீர் எனக் கருதும் பட்சத்திலேயே அவற்றை உட்கொள்ளுமாறும் -

தமிழீழ சுகாதார சேவைகள் பிரிவின் யாழ். மாவட்ட இணைப்பாளர் குனாளன் கேட்டுள்ளார்.

இதேவேளை - காரைநகருக்கு வெளியிடங்களில் இருந்து உணவு வகைகள், குளிர்பானங்கள் மற்றும் யூஸ் என்பன விற்பனைக்காக எடுத்துவருவதும் இப்பகுதிகளில் உற்பத்தி மற்றும் விற்பனைகளில் ஈடுபடுவதும் தற்காலிகமாக தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் -

உணவகங்கள், தேனீர்ச்சாலைகள் வெதுப்பகங்கள், உணவு உற்பத்தித் தொழிற்சாலைகள் அதி உச்ச சுகாதாரத்தைப் பேணி பொதுமக்களை இந்நோயில் இருந்து பாதுகாக்க உதவுமாறும் -

அவர் மேலும் கேட்டுள்ளார். (ஒ-73)

# புலிகள் அமைப்புக்குள் முரண்பாடு: அதனாலேயே பேச்சுத் தாமதமாம்

## ஜேர்மன் அமைச்சருக்கு கதிர்காமர் புதிய விளக்கம்

கொழும்பு,ஜூலை20

"விடுதலைப் புலிகள் அமைப்புக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடு சமாதானப் பேச்சுக்கான நகர்வைத் தாமதப்படுத்தியுள்ளது. புலிகள் அந்த முரண்பாட்டைத் தீர்த்துக்கொள்வதில் காலத்தைச் செலவழித்து வருகின்றனர். எனினும் விரைவில் அமையும் பேச்சுக்கு அவர்கள் திரும்புவார்கள் என நம்புகிறோம்."

- இவ்வாறு இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கூறியிருக்கின்றார்.

சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் உறுதியாக இருக்கிறார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வந்துள்ள ஜேர்மன் நாட்டு வெளிவிவகார அமைச்சர் ஜொஸ்காபிஸர் பிரியருடனான சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறினார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அமைதித் தீர்வுக்கான பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கான நிகழ்ச்சி நிரல் தயாரிக்கும் விடயத்தில் அரசு கூடிய கவனம் செலுத்தி வருகிறது எனவும் அமைச்சர் கதிர்காமர் தெரிவித்தார்.

தற்போது தடைப்பட்டிருக்கும் சமாதானப் பேச்சுக்கள் துரிதமாக ஆரம்பிக்கப்படும் என அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

நிகழ்ச்சி நிரல் தயாரிப்பிலும், வேறு சில விடயங்களிலும் அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் இருந்துவருகின்ற முரண்பாடுகள் விரைவில் நிவர்த்திக்கப்படும் எனத்தாம் நம்புகிறார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அனைத்துத் தரப்பினரையும் இணக்கப்பாட்டிற்குக் கொண்டுவரும் முயற்சிகளில் நோர்வே அனுசரணையாளர்கள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார். (க)

# வைத்தியசாலை அபிவிருத்திச் சங்க இணையத்தளம் அங்குரார்ப்பணம்



யாழ்.மருத்துவமனை அபிவிருத்திச் சங்கத் தலைவர் டாக்டர் டி.சி.அம்பலவாணர் மற்றும் மருத்துவமனைப் பணிப்பாளர் டாக்டர் எஸ்.சதுர்முகன் ஆகியோர் இணைந்து இணையத் தளத்தை உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கின்றனர்.

யாழ்ப்பாணம்,ஜூலை

யாழ்ப்பாணம் பொது மருத்துவமனை அபிவிருத்திச் சங்கத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் எஸ்.சதுர்முகன் மற்றும் டாக்டர் டி.சி.அம்பலவாணர் ஆகியோர்களால் இணையத்தளம் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

வைத்தியசாலையின் பிரச்சினைகள், தேவைகள் மற்றும் வைத்தியசாலை பற்றிய தகவல்களை வெளிப்படுத்தும் நோக்கில் இந்த இணையத் தளம ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முகவரி வருமாறு:- www.jathos.org

# ஆபாசப் படம் பார்த்த இருவர் கல்வியங்காட்டில் சிக்கினர்

யாழ்ப்பாணம்,ஜூலை20

யாழ்.கல்வியங்காட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு வீடொன்றில் ஆபாசப் படம் பார்த்த இருவர் பொலீஸாரிடம் சிக்கினர். அவர்கள் இருவருக்கும் தலா 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கோப்பாய் பொலீஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் பேரில் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி அருணகிரி ஸ்ரீசெல்வம் தலைமையிலான பொலீஸ் குழுவினர் கல்வியங்காட்டில் உள்ள வீடு ஒன்றைச் சுற்றிவளைத்தனர்.

அந்த வீட்டில் ஆபாசப் படம் பார்த்துக் கொண்டிருந்த இருவர் பொலீஸாரிடம் அப்போது சிக்கிக்கொண்டனர்.

அவர்கள் இருவரையும் கைது செய்த பொலஸார் ஆபாசப் படம் பார்க்கப் பயன்படுத்தப்பட்ட 'வீடியோ டெக்', தொலைக்காட்சிப் பெட்டி ஆபாசப்பட ஒளிநாடா ஆகியவற்றைக் கைப்பற்றினர்.

அவ்விரு நபர்களும் யாழ்.நீதிபதி ஆர்.ரி. விக்னராஜா முன் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர்.

அவர்கள் இருவருக்கும் தலா 5 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. அத்துடன் இருவரையும் விழிப்புலனற்றோர் இல்லத்திற்கு தலா 2 ஆயிரம் ரூபா வீதம் தர்மப்பணம் செலுத்தும்படியும் நீதிபதி உத்தரவிட்டார்.

அத்துடன் 'வீடியோ டெக்', தொலைக்காட்சிப் பெட்டி' ஆகியவற்றைப் பறிமுதல் செய்யும்படி உத்தரவிட்ட நீதிபதி ஒளிநாடாவைப் பதிவாளர் முன்னிலையில் அழிக்கும்படி உத்தரவிட்டார். (ஒ-3)

# விளையாட்டு விஞ்ஞானத்துறை மாணவர் நேற்றுமுதல் பகிஷ்கரிப்பில் குதித்தனர்

யாழ்ப்பாணம்,ஜூலை20

தமது கற்கைநெறிக் காலத்தை மேலும் ஒரு வருடகாலமாக நீடிக்கவேண்டும் எனக் கோரி யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞானத்துறை மாணவர்கள் இன்றுமுதல் தமது பகிஷ்கரிப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இந்த பகிஷ்கரிப்புப் போராட்டம் காரணமாக நேற்று ஆரம்பிக்கவிருந்த மேற்படி துறையின் இறுதி வருட மாணவர்களுக்கான பரீட்சை தடைபட்டது.

இதற்கிடையில் - எதிர்வரும் 27 ஆம் திகதி நடைபெறவுள்ள பல்கலைக்கழகத்தின் மூதவைச் கூட்டத்தில் எமது பிரச்சினை ஆராயப்பட்டு உரிய தீர்வு கிடைக்கும் எனத் தாம் நம்புவதாக விளையாட்டு விஞ்ஞானத்துறையின் மாணவ ஒன்றியத் தலைவர் வே.முருகதாஸ் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது விளையாட்டு விஞ்ஞானத்துறையின் கற்கைநெறி இரண்டு ஆண்டுகளைக் கொண்டது. தற்போது நாம் எமது கற்கைநெறிக் காலத்தை மேலும் ஒருவருடத்துக்கு நீடிக்க வேண்டும் எனக் கேட்கின்றோம்.

அத்துடன், இதுவிடயமாக பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கு கடிதம் அனுப்பிவைத்திருந்தோம்.

இதற்குத் துணைவேந்தர் தகுந்த ஏற்பாட்டினைச் செய்துதருவதாகக் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

இந்நிலையில், இன்று (திங்கள்) எமக்கான பரீட்சை ஆரம்பமாகவிருந்தது. இப்பரீட்சைக்குத் தோற்றினால் எமக்குரிய தீர்வுகிடைக்காமல் போய்விடும் என்பதற்காக நாம் பரீட்சைக்குத் தோற்றவில்லை என்று அவர் கூறினார். (எ-6)

# சமாதானச் செயற்பாடுகள் விரைவில் ஆரம்பமாக வேண்டும்

## உலக வங்கிப் பிரதிநிதி வற்புறுத்து

கிளிநொச்சி,ஜூலை20

இலங்கையில் சமாதானச் செயற்பாடுகள் துரிதகதியில் ஆரம்பிக்கப்படவேண்டும் என்பதே சர்வதேச சமூகத்தின் அபிலாஷையாகும். அந்த சமாதானச் செயற்பாடுகளின் வெளிப்பாடாக இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு உருவாக வேண்டும்.

- இப்படிக் கூறினார் உலக வங்கியின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட்.

கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் திட்டமிடல் மேம்பாட்டுக்கான செயலகத்தில் 'உலக வங்கியின் உலக அபிவிருத்தி அறிக்கை - 2004' தமிழ் பிரதிகள் வெளியிடும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. அந்நிகழ்வில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேற்படி செயலகப் பொறுப்பாளர் தூயவன தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், ரி.கனகசபை, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு, தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் க.கரிகாலன், மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி ஆகியோரும் -

யாழ்.பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர்களான வி.பி.சிவநாதன், கே.கந்தசாமி, எஸ்.நித்தியானந்தன், டென்மார்க் பல்கலைக்கழகப் பேராசிரியர் என்.சிறீஸ்கந்தராசா, கிழக்குப் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி டாக்டர் திருமதி ஏ.முருகதாஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

உலக வங்கியின் பிரதம பொறியியலாளர் டாக்டர் சந்தயானன். முதன்மைப் பொறியியலாளர் செல்வி நிக்கோ கஸ்ட்ரோ, உலக சுகாதார நிறுவன அதிகாரி டாக்டர் திருமதி டென்ஹொம் போலே, சர்வதேச நாணய நிதிய அதிகாரி டாக்டர் ஜெருமி ஹாட்டர், அகதிகளுக்கான ஐ.நா.தூதரக அதிகாரி நீல்ரைட் ஆகியோரும் இந்நிகழ்வில் பங்குபற்றினர்.

இச்சந்திப்பில் தமிழ் பிரதிகளை வெளியிட்டு உரையாற்றிய பீற்றர் ஹரோல்ட் மேலும் தெரிவித்ததாவது:-

எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவேண்டிய பணிகளுக்காக இந்தச் செயலகம் தன்னைத் தயார்படுத்திக்கொள்ளவேண்டும்; அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கான முழுப்பொறுப்பையும் இந்தச் செயலகம் ஏற்கவேண்டும்.

இந்தச் செயலகத்தின் ஆரம்பக் கட்டப் பணிகளுக்கு வேண்டிய உதவிகளை வழங்கவும், உலக வங்கியின் அறிக்கையின் தமிழ் பிரதிகளை வெளியிடவும் இங்கு வந்துள்ளேன்.

உலக வங்கியின் இலங்கை தொடர்பான முன்னேற்ற செயற்பாடுகளுக்கு அறிக்கைகள் இப்போதுதான் முதல் முதலாகத் தமிழில் வெளியிடப்பட்டுள்ளன - என்றார் அவர். (க-3)

## தலைநகரில் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என எச்சரிக்கை

கொழும்பு,ஜூலை20

கொழும்பு நகரின் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகப் புலனாய்வுப் பிரிவு, அரசை எச்சரித்திருக்கின்றது.

கடந்த ஓரிரு மாதகாலமாகக் கொழும்பு நகரின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருப்பதாக அரசுத் தரப்பு தெரிவித்து வருகின்றபோதிலும், அப்பாதுகாப்பு நடவடிக்கைகள் பூரண திருப்தியளிப்பனவாக இல்லை எனப் புலனாய்வுப் பிரிவு மேலும் தெரிவித்திருக்கின்றதாம்.

தற்போதைய பந்தோபஸ்த்து ஏற்பாடுகளை மேலும் தீவிரப்படுத்துவதன் மூலமே கொழும்பு நகரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு நடவடிக்கைகளில் இருந்து வருகின்ற குறைபாடுகளே கொள்ளுப்பிட்டிக் குண்டு வெடிப்புக்கான தற்கொலையாளி ஊடுருவவும் மற்றும் சில இடங்களில் ஆயுததாரிகளின் நடமாட்டங்கள் அதிகரிக்கவும் காரணமாக அமைந்தன எனவும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. (க)

உதயன்

# மூன்றாம் தரப்புக்கு புது வியாக்கியானம்

இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பதற்காக கடந்த இரண்டு வருடங்களாக மேற்கொள்ளப்பட்டுவரும் முயற்சிகளுக்கு மத்தியில், சர்ச்சைகளைத் தோற்றுவித்த பல்வேறு விடயங்களுள் பேச்சுக்களில் முஸ்லிம் தரப்பின் நிலைப்பாடு பற்றிய விவகாரமும் முக்கியமான ஒன்றாகும்.

இந்த விவகாரத்தில் கிழக்கு மாகாண உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரும் தேசிய முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ஏ.எல்.எம்.அதாவுல்லா புதிய வியாக்கியானம் ஒன்றைக் கொடுத்துவருகின்றார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருந்தபோதும் சரி, பின்னர் அதை உடைத்து அஷ்ரப் காங்கிரஸைத் தோற்றுவித்தபோதும்சரி, அதன் பின்பு அஷ்ரப் காங்கிரஸை நட்ட நடுவழியில் கைவிட்டு தேசிய முஸ்லிம் காங்கிரஸை உருவாக்கிய சமயத்திலும்சரி, முஸ்லிம்களுக்கு மூன்றாம் தரப்பு வழங்கப்படுவது தொடர்பாக அவர் கூறிவந்த கருத்துக்களுக்கு மக்கள் மனதில்பட்ட அர்த்தம் வேறு.

இப்போது அவர் கொடுக்கும் விளக்கத்தின்படி மக்கள் மனதில் தோன்றும் அர்த்தம் வேறு.

அரசு - புலிகள் சமாதானப் பேச்சில் இரண்டு தரப்புக்கள். ஒன்று - அரசுத் தரப்பு; மற்றது - புலிகள் தரப்பு அல்லது தமிழர் தரப்பு.

இந்த இருதரப்பாருடனும் மூன்றாவது தரப்பாக முஸ்லிம்களையும் பேச்சுக்களில் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்ற கோரிக்கை முஸ்லிம்கள் தரப்பில் வலியுறுத்தப்பட்டு வந்தது; வருகிறது.

அரசில் அங்கம் வகித்த அப்போதைய அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் சமாதானப் பேச்சுக்களில் அரசுத் தரப்புப் பிரதிநிதியாகப் பங்குபற்றினார்.

அவரது செயற்பாட்டை ஆட்சேபித்து, முஸ்லிம் காங்கிரஸை பேரியல் அஷ்ரப்பைத் தொடர்ந்து இரண்டாவது தடவையாக அதாவுல்லா அணி உடைத்தபோது, முஸ்லிம்களுக்கு மூன்றாவது தரப்பைப் பெற்றுத்தருவதற்கு ஹக்கீம் தவறிவிட்டார் என்ற குற்றச்சாட்டே முதன்மையானதாக முன்வைக்கப்பட்டது. கடந்த பொதுத் தேர்தல் காலத்தில் அதாவுல்லா குழுவினர் எம்.பிக்களாகத் தெரிவுசெய்யப்பட்டு அமைச்சர் பதவிகளையும் எட்டும்வரை இந்த விடயமே தூக்கியும் பிடிக்கப்பட்டது.

இப்போது அதாவுல்லா அமைச்சராகி விட்டார். அவர் அணியில் தெரிவான மற்றொரு எம்.பியான அன்வர் இஸ்மாயிலுக்கும் பிரதி அமைச்சர் பதவி கிட்டியாகிவிட்டது.

அவர்கள் இருவரும் அங்கம் வகிக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசு புலிகளுடனான சமாதான முயற்சி குறித்து பிரஸ்தாபிக்கிறது. பேச்சை மீள ஆரம்பிப்பதற்கான அடிப்படையாக, புலிகள் முன்வைத்த நான்கு அம்சங்களில், இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை குறித்து மட்டுமே முதலில் பேசவேண்டும் என்ற விடயத்தைத் தவிர ஏனையவற்றுக்கு அரசுத் தலைவி ஜனாதிபதி குமாரதுங்க இணங்கிவிட்டார் என்பது ஊரறிந்த பரகசியம்.

தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகள் புலிகள், புலிகளோடு மட்டும் பேச்சு, அவர்களுக்கு பேச்சில் சமபங்காளி அந்தஸ்து - என்பவையெல்லாம் அதாவுல்லா அணி இடம்பெற்றுள்ள ஐ.ம.சு.கூட்டமைப்பின் அரசுத் தலைவியால் ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டன.

ஆனால், முஸ்லிம்களின் மூன்றாம் தரப்பு விவகாரம் குறித்து மட்டும் முடிவுவேதுமில்லை. இது விடயத்தில் அரசுத் தலைவியோ அரசோ மௌனம் கலைவதாக இல்லை.

இப்போது அரசில் அங்கம் வகிக்கும் அதாவுல்ல சுருதி மாற்றி புதுக்கதை சொல்கின்றார். மூன்றாம் தரப்புக்கு புது வியாக்கியானம் கூறுகின்றார்.

"மூன்றாம் தரப்பு என்பதற்கு மற்றவர்கள் என்ன அர்த்தம் விளங்கிக்கொள்கின்றார்களோ தெரியவில்லை. ஆனால் நான், அரசு - புலிகளிடையில் நடைபெறும் பேச்சுக்களில் முஸ்லிம்கள் மூன்றாம் தரப்பாக பங்குபற்ற வேண்டியது அவசியம் என்பதைக் கூறவில்லை. அரசு - புலிகளுடன் பேசும் அதே சமயம் சமாந்தரமாக முஸ்லிம்களுடனும் பேசவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. தனித் தரப்பு என்று நான் கூறுவதன் அர்த்தம் அதுதான். புலிகளோடு பேசும் அதே சமயம் முஸ்லிம்களுடனும் அரசு பேச வேண்டும் என்பதே எனது கருத்து" - என்று இப்போது புதுவிளக்கம் தருகின்றார் அதாவுல்லா.

இதுதான் முஸ்லிம்கள் கோரும் மூன்றாம் தரப்பு என்றால், அதற்காக முஸ்லிம்காங்கிரஸ் என்ற பெயரில் ஐக்கியபட்டு நின்ற முஸ்லிம்களை இத்துணை துண்டுகளாக உடைத்து சின்னாபின்னமாக்கியிருக்கத்தான் வேண்டுமா என்பதை முஸ்லிம்களே சிந்தித்துப்பார்ப்பது நல்லது.

முஸ்லிம்களின் தரப்பில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமும், தமிழர்களின் சார்பில் அவர்களின் தேசியத் தலைவர் வே.பிரபாகரனும் கிளிநொச்சியில் 2002ஏப்ரல் 13 அன்று கூட்டு அறிக்கை ஒன்றை ஒப்பமிட்டு வெளியிட்டிருந்தனர்.

"அரசுக்கும் புலிகளுக்குமிடையில் ஆரம்பிக்கப்படவுள்ள பேச்சுக்களில் முஸ்லிம் மக்கள் சார்பாக முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகளும் ஒருதரப்பாகப் பங்குபற்றுவர்" என்ற வாசகம் அதில் இடம்பெற்றுள்ளது.

இந்தக் கூட்டு அறிக்கையை வெளியிடுவதற்குக் காரணமான கிளிநொச்சிக் கூட்டத்தில், ரவூப்ஹக்கீமுடன் இதே அதாவுல்லாவும் முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநியாகக் கலந்து கொண்டார் என்பதையும் -

'அரசு - புலிகள் சமாதானப்பேச்சில் முஸ்லிம் மக்கள் சார்பாக முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகள் ஒரு தரப்பாகப் பங்கு பற்றுவர்' என்ற வாசகத்தைக் கூட்டறிக்கையில் சேர்க்க அந்நேரத்தில் வற்புறுத்தியவர் அதாவுல்லாவே எனக் கிளிநொச்சி செய்திகள் தகவல் வெளியிட்டன என்பதையும் -

சுட்டிக்காட்டுவதற்கு விரும்புகின்றோம்.

சிறுபான்மை இனங்களின் இருப்புக்கான வாழ்வியல் போராட்டம் ஆயுத முனையில் முன்னெடுக்கப்படும் காலமிது. இக்கால கட்டத்தில் மிதவாத அரசியல் செய்வோர் - அதுவும் சிறுபான்மையினரின் நலனை முன்னிறுத்தி அரசியல் நடத்துவோர் - சாதாரண அரசியல்வாதிகளின் குதர்க்கத்தனத்தைக் கைவிட்டு, பொறுப்புணர்வோடும், சுயலாபம், பதவியாசை, தனிப்பட்ட குரோதம் ஆகியவற்றைத் துறந்து - தீர்க்க தரிசனம் மிக்க - பொது நன்மைகருதிய - தூய நெஞ்சத்தோடும் பணிபுரிவது அவசியமாகும்.

# மாவைக் கந்தன் வருடாந்தப் பெருவிழா நாளைமறுதினம் வியாழன் ஆரம்பமாகிறது

## ஆலயம் சென்றுவர விசேட போக்குவரத்து ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை20

சரித்திரப் பிரசித்தி பெற்ற மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தின் தாரண வருஷ காம்யோற்ஸவப் பெருவிழா நாளை மறுதினம் வியாழக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 25 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 26ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு ஷண்முகப் பெருமானின் திருநடனமும், அடுத்தமாதம் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆடிக் கிருத்திகை விழாவும், 14ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும், 15ஆம் திகதி ஆடி அமாவாசைத் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்.

உற்சவங்கள் யாவும் தினமும் காலை 8 மணியிலிருந்து மாலை 4.30 மணிவரை நடைபெறும் என மாவையாதீனகர்த்தா மஹாராஜஸ்ரீ சு.து.ஷண்முகநாதக் குருக்கள் அறிவித்துள்ளார்.

உற்சவ தினங்களில் தினமும் விசேட அபிஷேக ஆராதனைகளும், அன்னதானமும் இடம் பெறும் என்றும் - ஆதீனகர்த்தா தெரிவித்தார்.

காம்யோற்ஸவப் பெருவிழாவில் பங்குபற்ற வருகை தரும் அடியவர்களின் நலன கருதி வடபிராந்திய போக்குவரத்துச் சபையினால் விசேட போக்குவரத்துச் சேவைகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வருடம் போன்றே தெல்லிப்பழை சோதனைச் சாவடி ஊடாக சோதனைகளின் பின்னர் ஆலயம் சென்றுவர பக்தர்கள் அனுமதிக்கப்படுவர். (எ)

# வலிகாமம் கல்வி வலயப்பாடசாலைகளுக்கு மலசலகூடம், குடிதண்ணீர் வசதிகள்

வலிகாமம்தெற்கு,ஜூலை20

வலிகாமம் கல்வி வலயத்தில் உள்ள சில பாடசாலைகளுக்கு ஜி.ரி.இசற் நிறுவனத்தின் உதவியுடன் மலசலகூட வசதிகளும், குடிதண்ணீர்வசதிகளும் செய்து கொடுக்கப்படவுள்ளன என வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் தெரிவித்துள்ளார்.

சங்குவேலி அ.த.க.பாடசாலை, ஏழாலை சென்.இசிதோர் வித்தியாலயம். சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலயம், மானிப்பாய் சென்.ஆன்ஸ் றோ.க.பாடசாலை, மூளாய் அ.மி.த.க.பாடசாலை, சண்டிலிப்பாய் வடக்கு அ.த.க.பாடசாலை -

மாதகல் சென். தோமஸ் வித்தியாலயம் சண்டிலிப்பாய் சாந்த சிற்றம்பலம் வித்தியாலயம், வட்டு.மேற்கு அ.மி.த.க. பாடசாலை, நவாலி சென்.பீற்றேஸ் வித்தியசாலை, மாதகல் விக்கினேஸ்வர வித்தியாலயம், ஏழாலை சைவமகாஜனா வித்தியாலயம், வட்டுக்கோட்டை கார்த்திகேய வித்தியாலயம், நவாலி அட்டகிரிவித்தியாலயம், அளவெட்டி தெற்கு றோ.க.த.க.பாடசாலை ஆகியவற்றுக்கே இந்த அடிப்படை வசதிகள் செய்துகொடுக்கப்படவுள்ளன - என்றும் தெரிவிக்கப்பட்டது. (8-152)

# தென்மராட்சி தெற்கில் பிடிக்கப்படும் கால்நடைகளை கமநலசேவை நிலையங்களில் ஒப்படைக்கத் தீர்மானம்

சாவகச்சேரி,ஜூலை.20

தென்மராட்சி தெற்குப் பகுதியில் நெற்பயிர்ச் செய்கையின் போது பிடிக்கப்படும் கட்டாக்காலி மாடுகளை கிராமசேவையாள் ஊடாக கமநலசேவை நிலையங்களில் ஒப்படைக்கவேண்டும் என்று கோரும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

தென்மராட்சி தெற்குப் பகுதியில் மறவன்புலோ, தனங்கிளப்பு, கைதடி, நாவற்குழி பகுதிகளில் கட்டாக்காலியாகத் திரியும் கால்நடைகள் தொடர்பாகவும் -

இப்பகுதி விவசாய நெற்செய்கை தொடர்பாகவும் - ஆராயும் கூட்டம் ஒன்று நேற்றுமுன்தினம் கோயிலாக்கண்டி மகாலஷ்சுமி வித்தியாலயத்தில் நடைபெற்றது.

கால்நடை வளர்ப்போர், விவசாயிகள் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டது.

இங்கு நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:

★ தென்மராட்சி தெற்குப் பகுதியில் கட்டாககாலியாக திரியும் கால்நடைகள் கடந்த 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் பிடிக்கக்கூடாது.

★ இதுவரை யாராவது இப்பகுதிகளில கால் நடைகளை பிடித்து வைத்திருந்தால் இவ்வாறு பிடிக்கப்பட்ட மாடுகள் குறியில்லாத கால்நடைகளாயின் அவற்றை சுயாதீனமாக அவிழ்த்து விட்டுவிடல் வேண்டும்.

★ விவசாய நெற்செய்கைக்காக அனுமதிக்கப்பட்ட பிரதேசத்தில் - கால்நடைகளால் பயிர்கள் அழியாது பாதுகாக்கப்படல் வேண்டும். அதற்காக அனுமதிக்கப்பட்ட வயல் எல்லைகளில் நீட்சியாக வேலி அமைத்தல்வேண்டும்.

தனங்கிளப்பு போன்ற பகுதிகளில் மக்கள் மீளக் குடியமரும்வரை - தமது விவசாயத்திற்கு அவசியமான கால்நடைகள் செய்கைபண்ணப்படாத சொந்த நிலத்தில் - நிற்க அனுமதிக்க வேண்டும் என்றும் -

அத்தகைய கால்நடைகள் எதனையும் உரிமையற்றவர்கள் எவரும் அபகரிக்க அனுமதியளிக்கக் கூடாது என்றும் -

அவை தமது விவசாயத்திற்கு பக்கபலமாக இருப்பவை எனவும் விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (எ-8-31-117)

# அடிப்படை வசதிகள் அற்றநிலையில் கெற்பேலி குடியிருப்பு மக்கள்

தென்மராட்சி,ஜூலை.20

கெற்பேலி கேடில்ஸ் நகர் குடியிருப்பில் மீளக்குடியமர்ந்த குடும்பங்கள் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் வாழ்ந்து வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

1983ஆம் அண்டு வலி. வடக்குப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து கைதடிப் பகுதியில் தங்கியிருந்த 60 குடும்பங்களை அறவழி நிலையத்தினர் இப்பகுதியில் குடியமர்த்தியிருந்தனர்.

2000ஆம் ஆண்டு இடம்பெற்ற இடம்பெயர்வின் பின்னர் தற்போது 18 குடும்பங்கள் தமது காணிகளில் மீளக்குடியமர்ந்துள்ளனர். குடியிருப்பின் பெரும்பாலான பகுதிகள் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ளதால் சில குடும்பங்கள் தமது சொந்த இருப்பிடங்களில் மீளக்குடியமர முடியவில்லை எனவும் -

யுத்த அனர்த்தங்களால் வீடுகள் அனைத்தும் அழிக்கப்பட்ட போதிலும் 18 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன என்றும் - கூறப்பட்டுள்ளது.

அப்பகுதியில் அடிப்படைத் தேவைகளான குடிதண்ணீர், மலசலகூட வசதி, பாலர்பாடசாலை போன்றவை இல்லாத நிலையில் மக்கள் வசித்து வருகின்றனர்.

மீளக்குடியமர்ந்த மக்கள் உடனடியாக நிவாரணக்கொடுப்பனவுக்கு விண்ணப்பித்துள்ளனர் எனினும், குடியிருப்பு அமைக்கப்பட்ட காணி அரசகாணி என்பதனால் உறுதிகளோ, அனுமதிப்பத்திரமோ வழங்கப்படவில்லை. இதனால் உலக வங்கியினால் அமைக்கப்படவுள்ள வீடமைப்புத்திட்ட உதவியை இப் பகுதி மக்கள் பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை - மேற்படி விடயம் தொடர்பாக உரியநடவடிக்கை எடுக்குமாறு இப் பகுதி மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ்சிடம் கோரியுள்ளனர். (எ-117)

# மல்லாகம் 7 ஆம் கட்டை வீதியை புனரமைக்க நீதி ஒதுக்கீடு இல்லை

## அப்பகுதி மக்கள் அதிருப்தி

தெல்லிப்பழை,ஜூலை20

மல்லாகம் 7 ஆம் கட்டை தேவாலய வீதியைப் புனரமைப்பதற்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் அதிகாரிகள் தரபபிலிருந்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையால் இவ் வீதியை மையமாகக்கொண்டு வாழும் பிரதேசமக்கள பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

மேற்படி வீதி சுமார் பதினைந்து வருடங்களாகத் திருத்தப்படாமல் இருந்து வருகிறது. இதன் இன்றைய மோசமான நிலையால் இவ்வீதியை மையமாகக் கொண்டு வாழும் சுமார் 300 குடும்பங்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இதனைவிட மல்லாகம் மேற்கு பகுதியிலுள்ள சில கிராமங்களையும் இவ்வீதியே காங்கேசன்துறை வீதியுடன் இணைக்கிறது. இந்நிலையில் இப்பிரதேச சனசமூக நிலைய நிர்வாகம் இவ்வீதியை திருத்தக்கோரி வலி.வடக்கு பிரதேசசபைச் செயலாளர், பிரதேச செயலர், அரச அதிபர் ஆகியோருக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்திருந்தது. எனினும், இம்முறை புனரமைப்புக்காக தெரிவுசெய்யப்பட்ட வீதிகளின் பட்டியலில் இவ்வீதியின் பெயர் இடம பெறவில்லை. இதனால், இப்பிரதேச மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

இவ் வீதி தொடர்பாகப் பல்வேறு மகஜர்கள் கடந்தகாலங்களில் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு மக்களால் தொடர்ந்து அனுப்பப்பட்டு வந்தபோதிலும் இதுவரை எந்த அதிகாரியும் இவ்வீதியை வந்து பார்வையிடவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (8-150)

## நாளை

ஆடி 06
புதன்கிழமை
(21.07.2004)
திதி : சதுர்த்தி
முன்இரவு 08.40 வரை.
நட்சத்திரம்: பூரம்
பின் இரவு 3.31 வரை.
சுபநேரம்: 04.31 - 06.01
ராகுகாலம்: 12.01 - 01.31
(பழைய நேரப்படி)

# மருதங்கேணி வைத்தியசாலைக்கு வசதிகள் செய்துதரக் கோரிக்கை

வடமராட்சி கிழக்கு,ஜூலை20

மருதங்கேணி அரசினர் கிராமிய வைத்தியசாலையின் கட்டட வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. எனவே, மேற்படி வைத்தியசாலைக்குரிய ஆளணி மற்றும் உபகரணங்களை வழங்கி அதனைத் திறந்து வைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளை, யாழ். மாவட்ட பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் இந்தக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

இது விடயமாக அவர் சுகாதாரப் பணிப்பாளருக்குக் கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

2000ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்தத்தின் போது இந்த வைத்தியசாலை பலத்த சேதமடைந்தது. தற்போது 'நிக்கொட்' திட்டத்தின் கீழ் சுமார் 2கோடி 26 லட்சம் ரூபா செலவில் 9 கட்டடங்களைக் கொண்டதாக சகல வசதிகளுடனும் இது கட்டிமுடிக்கப்பட்டுள்ளது.

இந்த வைத்தியசாலைக்கு 'நிக்கொட்' திட்டத்தின் கீழ் சுமார் 27 லட்சம் ரூபா செலவில் அம்புலன்ஸும் சுமார் 12 லட்சம் ரூபா செலவில் மின்பிறப்பாக்கியும் வழங்கப்பட்டுள்ளன.

வைத்தியசாலை பலத்த சேதமடைந்ததை அடுத்து இவ்வருட முற்பகுதி தொடக்கம் தனியார் கட்டடம் ஒன்றில் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு மட்டும் இயங்கிவந்தமை தெரிந்ததே. (எ-182)

## உதயவாக்கு

கொள்கையைக் கைவிடாதவன் நேர்மையாளன்

## கண்ணீர் அஞ்சலி

பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் ஊழியா திரு.கந்தையா பாஸ்கரன
அவர்களது அன்பு மாமனார்

### சின்னத்தம்பி இராஜசிங்கம்

அவர்கள 19.07.2004 இல் இயற்கையெய்திவிட்டார். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை

(34303)(40)

## துயர் பகிர்கின்றோம்

யாழ்.பிரதேச செயலகத்தின் கிராம உத்தியோகத்தர் (சுண்டுகுழ வடக்கு,ஜே/76) திரு. இ.சிவானந்தன் அவாகளின் அன்புத் தாயார்

### திருமதி இராமலிங்கம் தனலட்சுமி

அவர்கள் காலமானதையிட்டு ஆறாத்துயரில் மூழ்கியிருக்கும் அவா தம குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தக்கின்றோம்.

*நலன்புரிச் சங்கம்,*
*பிரதேச செயலகம்,*
*யாழ்ப்பாணம்.*

பிரதேச செயலாளரும்
அனைத்து உத்தியோகத்தர்களும். (34304)(43)


Dialog டயலொக்

கையடக்க GSM தொலைபேசி அட்டைகளை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

**Sri Murugan**
Tele Communication
& Agency Post Office,
303,K,K.S. Road, Jaffna
T.P.: 021 222 5392 Fax: 222 3214
எந்நேரமும் உன்னுடன்
(சி-36079)


## முதலாவது பிறந்ததின வாழ்த்து

HAPPY BIRTHDAY

துன்னாலை தெற்கு,
கரவெட்டியில் வசிக்கும்
சிறிதரன் - பகீரதி
தம்பதிகளின் செல்வப் புதல்வி
சிறிடிலானி
தனது முதலாவது
பிறந்தநாளை
இன்று (20.07.2004)
செவ்வாய்க்கிழமை
தனது இல்லத்தில்
வெகுவிமரிசையாகக்
கொண்டாடுகிறார்.
இவரை அன்பு அப்பா,
அம்மா,
அண்ணன்மார்கள்,
அப்பம்மா,
அம்மம்மா, மாமாமார்,
அத்தைமார்,
மச்சான்மார்,
மச்சாள்மார்,
உற்றார், உறவினர்கள்
மற்றும் எமது நண்பர்கள்
அனைவரும் கலிகைக் கந்தன்
அருள்பெற்றுப்
பல்லாண்டுகாலம் வாழ்கவென
வாழ்த்துகின்றார்கள்.




துன்னாலை தெற்கு,
கரவெட்டி.

- அப்பா, அம்மா, அண்ணன்மார். (34300)

## வைத்தியர் தேவை

### மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை சங்கம் (வ/து)

மூளாய், சுழிபுரம்

எமது கூட்டுறவு வைத்தியசாலைக்கு முழுநேரமாகவோ, பகுதிநேரமாகவோ பணியாற்றக்கூடிய M.B.B.S./R.M.P. வைத்தியர் உடனடியாகத் தேவை. ஆர்வமுடையோர் எதிர்வரும் 27-07-2004 ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:

**தலைவர்,**
மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை சங்கம் (வ/து),
மூளாய், சுழிபுரம். (C/36074)(42-11-18-32)

## கொழும்பு றோயல் கல்லூரி இந்து மாணவர் மன்றம் நடத்தும் அகில இலங்கை சமயத்திறன் காண் போட்டிகள்-2004

றோயல் கல்லூரி இந்து மாணவர் மன்றம் 49ஆவது தடவையாகக் கலைத்தாய்க்கு மகுடம் சூட்டுமுகமாக நடத்தும் கலைமகள் விழா - 2004 இனை ஒட்டி சமயத்திறன் காண் போட்டிகளை எதிர்வரும் (25.07.2004) ஞாயிற்றுக்கிழமை நவரங்கஹல மண்டபத்தில் நடத்த எண்ணியுள்ளது.

மேற்படி போட்டிக்கான விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப் பெறாத பாடசாலைகள் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு:

செயலாளர்,
றோயல் கல்லூரி இந்து மாணவர் மன்றம்,
றோயல் கல்லூரி, கொழும்பு - 07.
தொலைபேசி:
011271377, 0785 120400

(சி-36062) (24-11-18-32)

# 30பேர் கொண்ட ராணுவக் கும்பல் நடத்திய அட்டகாசம்

## கிராமவாசிகள் பலர் காயம்

கொழும்பு,ஜூலை20

மெத்தகொட பகுதியில் அமைந்துள்ள ராணுவமுகாமைச் சேர்ந்த ராணுவத்தினர் அருகாமையில் உள்ள கிராமங்களில் அட்டகாசத்தில் இறங்கி பலகிராமவாசிகளைக் காயப்படுத்தியுள்ளார்கள் என்ற தகவலைத் தொடர்ந்து அப்பகுதிக்கு விசேட படையொன்று அனுப்பப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பண்டார நாயக்கபுர -மற்றும் மகாமன்ன ஆகிய கிராமங்களில் ராணுவத்தினரின் 30பேர் கொண்ட கும்பல் அட்டகாசத்தில் ஈடுபட்டதாகவும் அதனால் காயமடைந்த பல கிராமவாசிகள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

ராணுவக் கட்டளை தளபதியின் உத்தரவின் பேரில் விசேட படையணி ஒன்று அமைக்கப்பட்டு புலனாய்வுக்காக மெத்தகொடவுக்கு அனுப்பப்பட்டிருப்பதாக ராணுவ பேச்சாளர் கேனல் சமேதபெரேரா கூறியுள்ளார்.

இதேசமயம், மெத்தகொட பொலீஸாரும் தனிப்பட்ட முறையில் புலனாய்வுகளை ஆரம்பித்துள்ளனர். (ப)

# ஆடிப்பூரத் திருவிழா

யாழ்ப்பாணம்,ஜூலை20

நயினாதீவு ஸ்ரீ நாகபூசனி அம்பாள் ஆலய ஆடிப்பூரத் திருவிழா நாளை புதன்கிழமை காலை நடைபெறவுள்ளது.

காலையில் மூலமூர்த்தி அம்பாளுக்கு சங்காபிஷேகமும் அதனைத் தொடர்ந்து எழுந்தருளி அம்பாளுக்கு மகா சங்காபிஷேகமும் ஏனைய மூர்த்திகளுக்கு விசேட அபிஷேகங்களும் நடைபெறும்.

இவற்றைத் தொடர்ந்து பூசை, ருதுசாந்தி, தீபாராதனை, திருவூஞ்சல், தேவதோத்திர திருமுறைப் பாராயணம் என்பன இடம்பெற்று அம்பாள் வீதியுலா வருவார். (10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை20

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் ஆடிப்பூர உற்சவம் நாளை புதன் கிழமை நடைபெறும்.

இதன்போது மஹாலட்சுமி, பூலட்சுமி, மூலவா் அபிஷேகமும் நடைபெறும். நாலாயிரத் திவ்வியபிரபந்தப் படிப்பு நிறைவு வைபவமும் இடம்பெறும். (10-15)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை20

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன மணி அம்பாள் ஆலயத்தில், ஆடிப்பூரத்தை முன்னிட்டு நாளை புதன்கிழமை காலை 8 மணிமுதல் அம்பாளுக்கு அபிஷேகமும், திருமஞ்சள் நீராட்டலும் இடம்பெறும்.

காலை 9 மணிக்கு அம்பாளுக் குருதுசாந்தி உற்சவமும் அதனைத் தொடர்ந்து வசந்த மண்டபப் பூசையும் இடம்பெற்று அம்பாள் வீதியுலா வருவார். (10-202-203)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை20

வட்டுக்கோட்டை, தெற்களிப்பாய் கண்ணகி அம்மன் ஆலய ஆடிப்பூரத் திருவிழா நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 7.30 மணிக்கு சங்குபூசை, விசேட ஹோமம் என்பன இடம்பெற்று 9.30 மணியளவில் சங்காபிஷேகம் நடைபெறும்.

மாலை 6.30 மணிக்கு வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து திருவூஞ்சல் இடம்பெற்று அம்பாள் வீதியுலா வருவார். (10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை20

யாழ்.வண்ணை, கன்னாதிட்டி காளியம்பாள் ஆலயத்தில் நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு ஆடிப்பூரத் திருவிழா நடைபெறவுள்ளது. (10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை20

கந்தர்மடம், அரசடி வீதி செல்வநாகபூசனி அம்பாள் ஆலய ஆடிப்பூரத்திருவிழா நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 8.30 மணிக்கு பால், அறுகு சாத்துதலும் அதனைத் தொடர்ந்து அபிஷேகமும் இடம்பெறும். மாலை 5.30 மணிக்கு விசேட பூசைகள் இடம்பெறும். (10)

★ ★ ★

சுழிபுரம்,ஜூலை20

வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் நாளை புதன்கிழமை ஆடிப்பூரத் திருவிழா நடைபெறவுள்ளது.

காலையில் சங்காபிஷேகம் நடைபெற்று அதன்பின்பு அம்பாள் வீதியுலா வருவார். (10-28)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

கல்வியங்காடு மீன் சந்தைக்கு அருகில் பூங்கனிச் சோலை உரிமையாளரால் தங்க நகை ஆபரணம் ஒன்று கண்டு எடுக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம் காட்டி தங்க ஆபரணத்தைப் பெற்றுக்கொள்ளவும்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி,
பூங்கனிச்சோலை
இராமலிங்கம் வீதி, முடமாவடி. (C/36080)(40)

## சங்கானை ஸ்ரீ காளி அம்மன் தேவஸ்தான 10ஆம் திருவிழா விஞ்ஞாபனம்

அம்பிகை அடியார்களே!

இன்று (20.07.2004) செவ்வாய்க்கிழமை காலை 7.00மணி-12.00மணிவரை சங்காபிஷேகம்
நண்பகல் 1.00மணிக்கு மாகேஸ்வர பூசை (அன்னதானம்)
மாலை 6.00மணிக்கு வசந்த மண்டபப் பூசை
இரவு 8.00மணிக்கு - "காத்தவராயன் கூத்து"
மாவிட்டபுரம் வேலுப்பிள்ளை
சிதம்பரநாதன் (பொன்னர்)
அவர்களின் நெறியாள்கையில்
உருவான காத்தவராயன் சிந்து
நடைக்கூத்து 501ஆவது
தடவையாக மேடை ஏறுகிறது.



அனைவரும்! வருக திருவருள் பெறுக!

*காளி அம்மன் கோயில்,*
*சங்கானை.*
(C36081)(35-14-16-32)
10ஆம் விழா
உபயகாரர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
12 – 06 – 1927



மறைவு
20 – 06 – 2004

### திருமதி பொன்னையா பாக்கியம்

அமரரின் வீட்டுக் கிருத்தியமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (20.07.2004) செவ்வாய்க்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்வுகளில் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திப்பதோடு, மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
பொ.தங்கராஜா
உரும்பிராய் வடக்கு, (மகன் - மக்கள் வங்கி, அச்சுவேலி)
உரும்பிராய்.
(34305)(33-14-16-32)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
16 . 01 . 1942



உதிர்வு
01 . 08 . 2000

### அமரர் த.அருளானந்தசாமி (மெக்கானிக் சாமி)

திதி: திருதியை

எங்கள் குலவிளக்கே! செய்தொழிலில் புகழும்
செல்வமும் சேர்த்து எம்மை வளர்த்து ஆளாக்கிய
எம் தெய்வமே! நம் பாதுகாப்புக்காக இந்தியா
சென்று வாழ்க்கையில் ஓட்டோ வடிவில் வந்த
காலன் தங்களை எல்லோரிடமும் இருந்து பிரித்தானோ?
ஆண்டுகள் நான்கு சென்றாலும் உங்கள் நினைவால் வாடுகின்றோம்.

இன்று (20.07.2004) செவ்வாய்க்கிழமை எமதில்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும:
அ.ஞானசவுந்தரி (மனைவி), பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தீருவில் தெரு,
வல்வெட்டித்துறை.
(34298)(34-11-18-32)

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி கனகசபை



ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டை, ஆறுகால்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கனகசபை அவர்கள் நேற்று (19.07.2004) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி-சின்னம்மாவின் அன்பு மகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் ஜெயலிங்கம், ரட்ணராசா, செல்வராணி, விஜயநாயகி, ஜீவா (ஜேர்மனி), சுமதி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் மனோரஞ்சிதம், பராசக்தி (தேவி), சிவராசா, சிவபாலன் (ஜேர்மனி), றொபேட்பொனிபஸ் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2004) செவ்வாய்க்கிழமை நண்பகல் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புது வீதி,*
*ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை.*
(34302)(43-11-18-32)
தகவல்:
பிள்ளைகள்.

# இரண்டாம் சுற்று ஆட்டங்கள் நாளை

8ஆவது ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் முதற்சுற்று ஆட்டங்கள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமையுடன் நிறைவடைந்து விட்டன. தாம் கலந்து கொண்ட இரண்டு போட்டிகளிலும் தோல்வியுற்ற ஹொங ஹொங் அணியும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணியும் போட்டியிலிருந்து வெளியேறிவிட்டன.

ஜெயஸ்ரீ

"ஏ"பிரிவில் தான் கலந்து கொண்ட இரண்டு போட்டிகளிலும் வெற்றியீட்டிய பாகிஸ்தான் அணியும் ஒரு போட்டியில் வெற்றியீட்டிய பங்களதேஷ் அணியும் இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெற்றுவிட்டன. அதேபோன்று "பி" பிரிவில் தான் கலந்து கொண்ட இரண்டு போட்டிகளிலும் வெற்றியீட்டிய இலங்கை அணியும் ஒருபோட்டியில் வெற்றியீட்டிய இந்திய அணியும் அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றுவிட்டன. இரண்டாவது சுற்று ஆட்டங்கள் நாளை புதன்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இலங்கை ஐக்கிய அரபு எடமிரேட்ஸ் அணிகளுக்கு இடையிலான போட்டியில் இலங்கை அணி 116 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50ஒவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 239 ஓட்டங்களைப் பெற்றது. அணியின் சார்பில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய அதிரடி வீரர் அவிஷ்க குணவர்த்தன 73 ஓட்டங்ளையும், ஜயசூரிய, நுவன் சொய்ஸா ஆகியோர் தலா 2விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். பந்து வீச்சில் எமிரேட்ஸ் அணியின் சார்பில் குரம்கான் 32ஓட்டங்களுக்கு 4விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

240 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றிபெறலாம் என்ற இலக்குடன் களமிறங்கிய ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணியின் விக்கெட்டுக்கள் சொற்ப ஓட்டங்களுடன் வீழ்ந்தபோதும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ராம்வீராய் நீண்டநேரம் துடுப்பெடுத்தாடி 39 ஓட்டங்களை எடுத்தார். இதனால் 47.5 ஓவர்களில் அந்த அணி 123 ஓட்டங்களை மாத்திரமே எடுத்தது. பந்துவீச்சில் உப்புல் சந்தன 22ஓட்டங்களுக்கு 4விக்கெட்டுக்களையும் முரளிதரன் 21 ஓட்டங்களுக்கு 3விக்கெட்டுக்களையும் நுவன்சொயஸா 11ஓட்டங்களுக்கு 2விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக எமிரேட்ஸ் அணியின் குரம்கான் தெரிவானார்.

அதேதினம் நடைபெற்ற பாகிஸ்தான்-பங்களதேஷ் அணிகளுக்கு இடையிலான போட்டியில் பாகிஸ்தான் அணி 76 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 50ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 257ஓட்டங்களைப் பெற்றது. அணியின் சார்பில் யசீர்ஹமீட் 102 ஓட்டங்களையும் அணித்தலைவர் இன்சமாம் 59ஓட்டங்களையும் எடுத்தனர்.பங்களாதேஷ் அணியின் சார்பில் ரசாக் 31ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை எடுத்தார்.

பின்னர் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி45.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 181 ஓட்டங்களை மாத்திரம் எடுத்தது. அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஜாவிட்ஓமர் 62ஓட்டங்களை எடுத்தார். பந்து வீச்சில் சொஹைப்அக்தர் 28ஓட்டங்களுக்கு 3விக்கெட்டுக்களையும் முகமட்அமி 30 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் சொகைப்மாலிக் 41ஓட்டங்களுக்கு 2விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக பாகிஸ்தான் அணியின் யசிர்ஹமிட் தெரிவானார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற மற்றை இரு ஆட்டங்களில் இலங்கை அணியும் பாகிஸ்தான் அணியும் வெற்றியீட்டியுள்ளன.

பாகிஸ்தான் - ஹொங்ஹொங் அணிகளுக்கிடையே நடைபெற்ற போட்டியில் பாகிஸ்தான் அணி 173ஓட்டங்களால் வெற்றியீட்டியது. அணியின் சார்பில் யூனுஸ்கான் 144ஓட்டங்களையும் சொஹைப் மாலிக் 118ஓட்டங்களையும் எடுத்தனர். 50ஓவர்கள் நிறைவில் பாகிஸ்தான் அணி 5விக்கெட்டுக்களை இழந்து 343 ஓட்டங்களை எடுத்தது.

தொடர்ந்து 344ஒட்டங்கள் என்ற மிகப் பெரிய இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய



ஹொங்ஹொங்அணி 44.1ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 170ஓட்டங்களை மாத்திரம் எடுத்தது.

கிரிக்கெட் ரசிகர்களால் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட மற்றொரு ஆட்டத்தில் இந்திய அணியை 12ஓட்டங்களால் இலங்கைஅணி வெற்றியீட்டியது. இரு அணிகளும் மிகவும் பலம் வாய்ந்த நிலையில் இருந்ததால் எந்த அணி வெற்றியீட்டும் என்று தீர்மானிக்க முடியாத நிலையே இருந்தது. ஆயினும் சொந்த மைதானத்தில் விளையாடும் இலங்கை அணிகு வெற்றிவாய்ப்பு அதிகமாகவே இருந்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்கள் நிறைவில் 4விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 282 ஓட்டங்களை எடுத்தது. இந்திய அணியின் சார்பில் 7 பந்து வீச்சாளர்கள் பந்துவீசியபோதும் ஓட்டக்குவி...க் கட்டுப்படுத்தவோ அல்லது விக்கெட்டுக்களை விரைவாக வீழ்த்தவோ முடியவில்லை. இலங்கை அணியின் சார்பில் மஹேல ஜெயவர்த்தன 58 ஓட்டங்களையும் சங்ககார 57 ஓட்டங்களையும் அணித்தலைவர் அத்தப்பத்து 50 ஓட்டங்களையும் எடுத்தனர். ஜயசூரிய இப போட்டியில் பங்கேற்கவில்லை என்பது இந்திய அணிக்கு ஒரு மகிழ்வானவிடயமாக இருந்தபோதும் ஆட்டம் ஆரம்பமான பின்னர் அந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை. அந்த அளவிறகு இந்தியப் பந்துவீச்சாளர்களைத் துவம்சம் செய்தனர் இலங்கை அணியினர்.

பின்னர் 283 என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய இந்திய அணிக்கு ஆரம்பம் அதிரடியாக அமைந்தாலும் அது நீடிக்கவில்லை. 12 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் டெண்டுல்கர் ஆட்டமிழந்ததும் இந்திய அணியின் வெற்றி வாய்ப்பு தள்ளாடத் தொடங்கியது. தொடர்ந்து பட்டேல், கங்குலி, ஷேவாக் ஆகியோர் ஆட்டமிழக்க நான்தான் ஆபத்பாந்தவன் என்று ஆ... வந்த ட்ராவிட் அதனை நிரூபித்தபோதும் இறுதிவரைதாக்குப்பிடிக்க அவரால் முடியவில்லை. அவர் ஆட்டமிழந்ததை அடுத்து இலங்கை அணியின் வெற்றிவாய்ப்பு நிச்சயமானது. இறுதியில் 270 ஓட்டங்களுக்கு 8விக்கெட்டுக்களை இழந்து பரிதாபகரமாக தோல்வியைத் தனதாக்கியது இந்திய அணி. ட்ராவிட் 82 ஓட்டங்களையும் யுவராஜ்சிங் 47 ஓட்டங்களையும் எடுத்தனர். இலங்கை அணியின் சார்பில் நுவான் சொய்சா 49 ஓட்டங்களுக்கு 3விக்கெட்டுக்களையும் சமிந்தவாஸ் 51 ஓட்டங்களுக்கு 2விக்கெட்டுக்ளையும் கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக சொய்சா தெரிவானார்.

**இரண்டாம் கட்டப் போட்டிகள்**

*நாளை புதன்கிழமை:* பங்களாதேஷ்-இந்தியா (எஸ்.எஸ்.சி), பாகிஸ்தான் - இலங்கை (ஹெத்தாரம)

*23 ஆம் திகதி:* பங்களாதேஷ் - இலங்கை (ஹெத்தாராம)

*25 ஆம்திகதி:* பாகிஸ்தான் - இந்தியா (ஹெத்தாராமா)

*27 ஆம் திகதி:* இலங்கை - இந்தியா (ஹெத்தாராம)

*29 ஆம் திகதி:* பாகிஸ்தான் - பங்களாதேஷ் (ஹெத்தாராம)

*ஓகஸ்ட் முதலாம் திகதி:* இறுதிப்போட்டி

# பாடசாலைகள் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி சம்பியனானது

யாழ்ப்பாணம்,ஜூலை20

யாழ்ப்பாணப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் வர்த்தக வங்கியின் அனுசரணையுடன் நடத்திய 16வயதுக்குட்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி யாழ் மாவட்ட சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இச்சுற்றுப்போட்டியில் இறுதியாட்டம் கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத் தலைவரும் கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபருமான பொ.கமலநாதன் தலைமையில் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய யாழ்.இந்துக் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 98 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அவ்வணி சார்பாக கஜேந்திரன் 24 ஓட்டங்களையும் வி.நவயுகன் 21 ஓட்டங்களையும் கே.பிரசாந்தன் 13 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் சென்.பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த ஜே.ஜெனன்ராஜ், சி.பெ.கொலின், டபிள்யூ.ஜக்சன் மற்றும் ஆர்.வி.ரெக்னோ ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

அடுத்துத் தனது முதல் இன்னிங்ஸிற்காக களமிறங்கிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி தனது முதல் இன்னங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 143 ஓட்டங்களைப் பெற்றது. இதில் எ.ஜெயேந்திரன் 34 ஓட்டங்களையும் கே.யதீஸ்வரன் 21 ஓட்டங்களையும், எஸ்.ஜெனனராஜ் 19 ஓட்டங்களையும் பெற்றனர்.



பந்து வீச்சில் ரி.மயூரப்பிரியன் 4விக்கெட்டுக்களையும் கே.சிந்துஜன் 3 விக்கெட்டுக்களையும் எஸ். கௌசிகன் 2விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். அதனைத் தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த யாழ்.இந்துக் கல்லூரி அணி 101 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. அவ்வணி சார்பாக ரி.மயூரப்பிரியன் 34 ஓட்டங்களையும் கே.பிரசாந்தன் 14 ஓட்டங்களையும் என்.கௌசிகன் 11 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி சார்பாக எஸ்.பத்மமுரளி 5விக்கெட்டுக்களையும், ஜே.ஜெனன்ராஜ் 3 விக்கெட்டுக்களையும் ஆர்.வி.றெக்னோ ஒரு விக்கெட்டையும் கைப்பறறினர்.

வெற்றி பெறுவதற்கு 57 ஓட்டங்கள் எடுக்கவேண்டிய நிலையில் களமிறங்கிய சென். பற்றிக்ஸ் அணி ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களின் அதிரடி ஆட்டத்தினால் விக்கெட் இழப்பின்றி வெற்றி இலக்கை அடைந்தது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான கே.ஜெனன்ராஜ், எஸ்.ஜெயந்திரன் ஆகியோர் முறையே 44 , 9 ஓட்டங்களைப் பெற்றனர்.

இப் போட்டித் தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரனாக வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.யதுர்சனும் சிறந்த பந்து வீச்சாளரான மானிப்பாய் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.வினோத்தும் தெரிவு செய்யப்பட்டனர்.

இறுதியாட்டத்தில் சிறந்த களத்தடுப்பாளராக யாழ்.இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ரி.மயூரப்பிரியனும் சிறந்த பந்து வீச்சாளராக சென. பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.பத்மமுரளியும் சிறந்த துடுப்பாட்ட வீரராக சென் பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த என்.ஜெயந்தராஜ"ம் தெரிவுசெய்யப்பட்டனர்.

வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ்கள், கேடயங்களை பிரதம விருந்தினராக கலந்து கொண்ட ஈ.எஸ்.பி. நாகரத்தினம் வழங்கிக் கௌரவித்தார். (10-5-86)



யாழ்.வர்த்தக வங்கியின் அனுசரணையுடன் நடைபெற்ற 16 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் பரிசளிப்பு விழா கடந்த சனிக்கிழமை நடைபெற்ற போது ஈ.எஸ்.பீ. நிறுவனத்தைச் சேர்ந்த நாகரத்தினம் வெற்றிபெற்ற சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணித்தலைவருக்கு வெற்றிக் கேடயத்தை வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# யாழ்ப்பாணத்துப் பத்திரிகைத் துறையில்...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையிலேயே கடதாசிக் கூட்டுத்தாபனம் தகுந்த, திறமையானவர்களைத் தேடியது. அன்றைய அரசியல் சூழலில கூட்டுத்தாபனத்தின் தலைவர் பதவியை பொறுப்பேற்ற அமரர் தங்கராஜா அவர்கள் இந்நிறுவனத்தை திறம்பட நடத்தியமைக்காக நாடாளுமன்றத்தில் கலாநிதி என்.எம். பெரேரா மற்றும் அமைச்சர் இரியகொல்ல ஆகியோரின் பாராட்டுக்களைப் பெறக்கூடியதாக இருநதது.

எனினும், யாழ்ப்பாணப் பழம் பெரும்பகுதியில் கொண்ட தீராப்பற்றுக் காரணமாக ஒரு தமிழ் நாளேட்டின் தேவையை அவர் மனதார உணர்ந்ததன் உந்துதலால் ஈழநாடு உதயமாயிற்று. தமிழ் பேசும் மக்களின் பெருமையையும் உரிமையையும் கலாசாரத்தையும் உலகம் அறியச் செய்யவேண்டும் என்ற ஆழ்ந்த எண்ணத்தின் நோக்கம், தீர்க்கதரிசனம் என்பவற்றால் ஈழநாடு அவரது கருப்பொருளாயிற்று; செயற்பொருளாயிற்று. ஈழநாட்டின் முதற்பிரதியை சிவயோக சுவாமிகளின் திருவடிகளில் சமர்ப்பித்த போது, அவர் தெரிவித்த கருத்துக்கள் இன்றும் எல்லோர் மனதிலும் பதிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

"ஏசுவார்கள், எரிப்பார்கள்; உண்மையை உண்மையாக எழுதுங்கள்'' என்று யோகர்சுவாமிகள் கூறியிருந்தார். 'ஈழநாடு' பத்திரிகை நிறுவனத்தை அரச படைகள் எரித்த போதிலும் அதனை சில நாள்களின் பின் மீண்டும் பிரசுரிக்க திரு ப.சிவானந்தனின் பெருமுயற்சி உதவியாக இருந்தது. ஆனால், இன்று, ஈழநாடு நாளேடு இல்லை எனினும். அந்தப்பத்திரிகையின் பணியையும் மக்கள் சேவையையும் மக்கள் பேசுவது அமரர் தங்கராஜா அவர்களின் தீர்க்கத் தரிசனத்துக்கு ஓர் எடுத்துககாட்டு.

'ஈழநாடு' பத்திரிகையின் முதல் ஆசிரியராக அமரர் இராஜ அரியத்தினமும் அதனைத் தொடர்ந்து அமரத்துவம் அடைந்த K.P.ஹரன் ஐயா அவர்களும் பத்திரிகைச் சீராகவும் சிறப்பாகவும் நடத்திவந்தனர். மாதமொரு முறை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரும் அமரர் தங்கராஜா அவர்கள், ஈழநாட்டின் நிலைமைகளை ஆராய்ந்து ஆலோசனை வழங்குவார். அவ்வேளைகளில் எப்பொழுதேனும் இப்படித்தான் செய்யவேண்டும் என்று திரு.தங்கராஜா அவர்கள் கூறுவதில்லை. இப்படிச் செய்தால் நல்லாயிருக்கும் என்று தான் கூறுவார். எச்சந்தர்ப்பத்திலேனும், தனது அதிகாரத்தைப் பிறரில் திணிக்க முன்வந்ததில்லை. நிறுவனத்தின் சகல பகுதிகளும் சுயமாகவும் சுதந்திரமாகவும் இயங்கக் கூடிய ஒரு தந்திரோபாயத்தைக் கையாண்டு அதில் வெற்றியும் கண்டவர்தான் திரு.தங்கராஜா அவர்கள்.

பத்திரிகை திறம்பட நடக்க வேண்டும் என்ற எண்ணத்தினால் எம்.வைரமுத்து ஐயா அவர்கள் ஈழநாட்டுடன் இணைக்கப்பட்டார். அக்காலத்தில் நான் அந்தப் பெரியவரிடம் கற்றுக் கொண்ட விடயங்கள் பல. சேர் ஒலிவர் குணத்திலகாவின நிரந்தரச் செயலாளராகக் கடமையாற்றிய எம்.வைரமுத்து அவர்கள் ஒரு நிர்வாகத்தைத் திறமையாக நடத்த வேண்டுமானால் அதனை எவ்வாறு செய்யலாம் என்பதனைத் தனது செயற்பாட்டின் மூலமே எங்களுக்குப் பயிற்றுவித்தார், உணர்த்தினார்.

காலையில் நேரத்துக்குத் தவறாது வரும் அவரின் கடமை உணர்வு எங்கள் எல்லோரையும் வியக்க வைத்தது. தனக்குக் கீழ் உள்ளவர்களை அவர் எப்பொழுதும் அழைப்பதில்லை. தானாகவே எங்கள் மேசைக்கு வந்துவிடுவார். இதனால் நிர்வாக இயந்திரம் திறம்படச் செயற்பட்டது. இக்காலத்தில் ஈழநாடு நிறுவனம் இலாபம் ஈட்டியது.

இன்று எங்கள் சமுதாயத்தில் பலவகையான தொடர்புகளை மற்றும் பல வகையானோரை நினைவில் வைத்து விழாக்கள் எடுக்கின்றோம். அமரர் தங்கராஜா போன்றோரின் தீர்க்கதரிசனததையும் செயற்றிறனையும் பாராட்டுவது தான் நாம் அவருக்குச் செய்யும் கைமாறாகும்.

**அவரது பண்ணையில் பணிபுரிந்தவர்கள்**

புகழை விரும்பாத, எந்நேரத்திலும் பெருமையும் கொள்ளாத ஈழநாடு நிறுவுநரின் காலத்தில் பணியாற்றியவர்களே இன்று யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்து கொண்டிருக்கும் நாளேடுகளின் முக்கிய பதவிகளில் இருக்கிறார்கள. அது தங்கராஜா அவர்களுக்கு பெரும் புகழை ஈட்டிக்கொடுத்திருக்கிறது என்றால் மிகையாகாது.

ஈழநாடு ஆசிரியப் பகுதியில் கடமையாற்றிய நண்பன் ம.வ.கானமயில்நாதன் 'உதயன்' நாளேட்டில் பிரதம ஆசிரியராகப் பணிபுரிந்து வருகின்றார். 'வலம்புரி' பத்திரிகையில் திரு.க. வாமதேவன் பணிபுரிகின்றார். ஈழநாட்டின் ஆசிரியராக இருந்து அதனைப் பெருமையுடன் வளர்த்த மதிப்புக்குரிய எஸ்.எம்.கோபாலரட்ணம் 'ஈழமுரசு' பத்திரிகையின் ஆசிரியராகப் பணியாற்றியிருந்தார். திரு.எஸ்.திருச்செல்வம் முரசொலி பத்திரிகையில் ஆசிரியராகச் செயலாற்றினார். எஸ்.பெருமாள் தற்போது உதயனில் இணைந்துள்ளார். அவர்கள் மட்டுமின்றி அண்மையில் கொழும்பில்பத்திரிகை ஆசிரியர்கள் அவையால் கௌரவிக்கப்பட்ட திரு. ரி.எம்.முருகையா அவர்களும் ஈழநாட்டின் திறமை மிக்க அனுபவம் கொண்ட சிறந்த ஆசிரியராவார். இவ் விவரங்கள் யாவும் எனது உடன் நினைவில இருந்து எழுதுவதால் இக்கட்டுரை முழுமையான விரங்களை உள்ளடக்கியதாக இருக்கும் என நான் கருதவில்லை.

இறுதியாக பெருமைமிக்க தீர்க்கதரிசியை புகழ் விரும்பாத பேராசானை நான் ஒரு குருவாகவும் எனக்கு வழி காட்டிய ஒரு பெருமகனாகவும் மனதில் நிறுத்தி, அவரின் செயற்பாடுகளைப் போற்றி என்றும் தமிழ் பேசும் மக்களின் மனதில் நிலைநிற்க வேண்டும் என மனதார வேண்டுகின்றேன்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக அமரர் தங்கராஜா அவர்களின் நிறுவனத்தில் அடியேன் பணிபுரிந்த காரணத்தினாலேயே, அந்தப் பின்புலத்துடனேயே இன்று கம்பீரமாகவும் பெருமையுடனும் வெளிவந்து கொண்டிருக்கும் 'உதயன்' பத்திரிகையை நிறுவும் பணியில் ஏனையோருடன் இணைந்து - என்னுடன் நெருங்கியவர்களுடன் இணைந்து - செயலாற்றமுடிந்தது என்பதனையும் இத் தருணத்தில் குறிப்பிட்டு அமரர் தங்கராஜாவை அவரது அமரத்துவம் அடைந்த நாளில் நன்றியுடன் நினைவு கூருகின்றேன்.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## திருமணசேவை

1973ஆம் ஆண்டு பிறந்த, இந்து கௌரவ குடும்பம், 8இல் செவ்வாய், 43½ பாவம், மக நட்சத்திர,கனடா பிரஜாவுரிமைபெற்ற மணமகனுக்கும் மற்றும் பட்டதாரிகள், டாக்டர்கள் பொறியியலாளர், வர்த்தகர்கள், லிகிதர்கள் வெளிநாட்டில் பிரஜாவுரிமைபெற்ற மணமகன்களுக்கும் அழகிய, படித்த மணமகள்கள் தேவை. தொடர்பு: கமலக்கண்ணன் திருமண சேவை, 361, கோயில் வீதி, நல்லூர்.

(34266)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான, பகிரா இன புறொயிலர் குஞ்சுகளும், பிறீமா இன சிவப்பு, வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகளும் 21.07.2004 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொளளவும். றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P.No.: 3529, 2867. P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (34221)

## தவறிவிட்டது

புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த தி.வாசுகி என்பவருடைய தே.அ.அட்டை (817473148V), மருத்துவபீட மாணவியினுடைய புத்தகங்கள் அடங்கிய கறுப்புநிற பாக் (16-07-2004) வெள்ளிக்கிழமை நல்லூர்ச்சூழலில் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் T.P:021 222 6313 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

(34281)

## மணமகள் தேவை

கொழும்பில் வசிக்கும் பிரபல தொழில் அதிபர் (வயது 48) ஒருவருக்கு இந்து, கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, நற்குணம் கொண்ட, படித்த, அழகிய மணப்பெண் தேவை. தொடர்பு: 0777630445, 021- 2285748. (34260)

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1962, புநர்பூசம், செவ்வாய் 2இல் பாவம் 37, **U.K. Multiple Visa** இல் **Consulting Engineer** ஆக இலங்கையில் தற்காலிகமாகப் பணிபுரிபவருக்கு ஏற்ற 35 வயதுக்குட்பட்ட விஞ்ஞானப் பட்டதாரிக்கு மேல், அழகான மணமகளைத் தாயார் தேடுகின்றார். தொடர்பு: துரை விமலா இலகு திருமண சேவை, நாச்சிமார் கோயிலடி.

(34262)

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 33 வயது, அனுஷம் 3 ஆம் பாதம், 8¾ பாவம், எட்டில் செவ்வாய் லண்டனில் வதியும் மணமகனுக்கு லண்டனில் அல்லது கனடாவல் வதிவிட உரிமையுள்ள படித்த, அழகிய மணமகள் தேவை. தொடர்பு:Dr.K.V.துரைராஜா, இல.29, மூத்தவிநாயகர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

(34295)

**Spoken English and Grammer**
By: BRITTO
செவ். வியா. - 2.45 p.m.
வகுப்புகள் மீள ஆரம்பம், புதிய அனுமதிகளும் வழங்கப்படும்
N.E.I. நல்லூர். (34289)

## வெளிச்ச வீடுகளை இயக்கக் கோரிக்கை

பருத்தித்துறை,ஜூலை20

யாழ். குடாநாட்டிலுள்ள முக்கிய மூன்று வெளிச்சவீடுகளையும் மீண்டும் இயங்கவைக்க நடவடிக்கை எடுக்குமாறு மீனவர் சங்கங்களின் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை, காங்கேசன்துறை, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டு நீண்டகாலமாக இயங்கிய வெளிச்சவீடுகள் யுத்த அனர்த்தங்களால் இயங்காமற் போனமை தெரிந்ததே.

இது தொடர்பான கடிதம் ஒன்றும் யாழ். அரச அதிபருக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளது.

(எ-118)

## 10 குடும்பங்களுக்கு கொடுப்பனவு

வடமராட்சி,ஜூலை20

வடமராட்சி கிழக்கில் ஆயிரத்து 64 குடும்பங்கள் மீள்குடியமர்வுக் கொடுப்பனவு 25 ஆயிரம் ரூபாவைப் பெற்றுள்ளன.

25 ஆயிரம் ரூபாவை இதுவரை பெறாதவர்களின் விவரங்கள் பட்டியற்படுத்தப்பட்டு யாழ். செயலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுளளன.

(10-182)

## கெற்பேலியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு மினிபஸ்சேவை

தென்மராட்சி,ஜூலை20

தென்மராட்சி தனியார் சிற்றூர்திச் சேவைகள் சங்கத்தினர் கெற்பேலியிலிருந்து கச்சாய், சாவகச்சேரி ஊடாக யாழ்ப்பாணத்திற்கான மினிபஸ்சேவையினை விரைவில் ஆரம்பிக்கவுள்ளனர்.

கெற்பேலி அமரசிங்கம் கடையடியிலிருந்து தினமும் காலை 7.30மணிக்குப் புறப்பட்டு யாழ்ப்பாணம் வரும் மினிபஸ், பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு இதே மார்க்கமாக கெற்பேலிவரை செல்லும்.

தற்போது கொடிகாமத்திலிருந்து புறப்படும் மினிபஸ் கெற்பேலி ஊடாக சேவையில் ஈடுபடுவது குறிப்பிடத்தக்கது. (-8-117)

## சாவகச்சேரி மீனவர்களுக்கு சுழற்சிமுறையில் கடன்

தென்மராட்சி,ஜூலை20

சாவகச்சேரி கடலேரியில் அண்மையில் மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டதை அடுத்து சாவகச்சேரி விகோரியார் கடற்றொழிலாளர் சங்கத்தினர் அங்கத்தவர்களுக்கு சுழற்சிமுறைக் கடன்களை வழங்கிவருகின்றனர்.

கடற்றொழில் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கென அங்கத்தவர்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா வீதம் கடன்களை வழங்கிவருவதாகவும் இதுவரை 22 அங்கத்தவர்களுக்கு இக்கடன் வழங்கப்பட்டுள்ளதாகவும் சங்கச் செயலாளர் தெரிவித்தார்.

இதேவேளை -

கடலேரியில் மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்ட பகுதியில் இறால் கூடுகள் தொழிலாளர்களால் வைக்கப்பட்டு வருவதாகவும் அங்கத்தவர்களின் நலன்கருதி ஒருவர் 7 இறால் கூடுகள் வீதம் அமைக்க சங்கத்தினால் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (8-1..)

**கார் விற்பனைக்கு**

13ஸ்ரீ தொடரிலக்கமுடைய Mitsubishi Mirage Full A.C., Economic gear, auto shatter நல்ல நிலைமையில் உடன்விற்பனைக்கு.

தொடர்புகளுக்கு: 021-226 3575

(சி-36052)

**இந்தியப் பரம்பரை ஜோதிடர்**
**மணிசாமி அவர்கள் யாழ்ப்பாணம் வருகை**
ஸ்ரீ சோட்டாநிக்கரை, பகவதி அம்மன் அருள்பெற்ற ஸ்ரீ வெட்காளியம்மாவின் அருந்தவப் புதல்வன் மீண்டும்
**P.T.R., சாமி** இரட்டையர்கள்

யாழ்ப்பாணம் புண்ணியபூமிக்கு வருகை. கைரேகை, ஜாதகம், எண்கணிதம், நினைத்த காரியம் பார்க்கப்படும். திருமணத் தடங்கலா? காதல் தோல்வியா? தீராத வியாதியா? உயர்கல்வியில் தடங்கலா? கடன் தொல்லையா? தொழில்முன்னேற்றத் தடங்கலா? புதிய தொழில் தொடங்க வேண்டுமா,? குழந்தைப் பாக்கியம் இல்லையா? வெளிநாடு செல்லத் தடையா?

**ஸ்ரீ பாலாஜி வீடுதி,**
293, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் (கன்னாதிட்டிச் சந்தி அருகில்).
(33885) (26-14-34) தொலை. பே. 222-2841
(பார்வையிடும் நேரம் 9 மணி முதல் 5 மணிவரை).

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அவனியில் 10 - 09 - 1919

ஆண்டவரில் 20 - 06 - 2004

அருட்சகோதரி

**மேரி சிறில் மத்தயாஸ்**

(இளைப்பாறிய ஆசிரியர், திருக்குடும்ப கன்னியர் சபை)

இறை மகிமைக்குள் சங்கமமாகி விட்ட
எம் அன்புக்கும் மதிப்புக்குமுரிய
அன்னையாய், ஆசானாய்
ஆன்மீக வழிகாட்டியாய் விளங்கிய
எம் தாய் எம்மை விட்டுப் பிரிந்து 31 ஆம் நாளும் ஆயிற்றே!
இன்றைய தினத்தில் எம் உள அஞ்சலியையும்
ஆன்மீக இளைப்பாற்றிக்காக
இறைவேண்டுதலையும் செய்து பிரார்த்திக்கின்றோம்.

ஆன்ம இளைப்பாற்றுத் திருப்பலி இன்று (20-07-2004) செவ்வாய்க்கிழமை காலை 8.30மணிக்கு யாழ். புனித அடைக்கலஅன்னை ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும்.

யா/சென்மேரிஸ் வித்தியாலயம் (OLR).
4 ஆம் குறுக்குத்தெரு. யாழ்ப்பாணம்.

சகோதரன், சகோதரிகள், பெறாமக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(34288) (26-34-14)

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 19 – 01 – 1906

மறைவு 31 – 07 – 2003

அமரர்

**அருணாசலம் வேலும்மயிலும்**

திதி: 20.07.2004

எமது நல்வாழ்வுக்காக அயராது பாடுபட்டு
ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து உதவிய எமது
குடும்பத் தலைவர் அமரர் அருணாசலம் வேலும் மயிலும்
அவர்களை அன்னார் சிவபதமடைந்த ஓராம்
ஆண்டில் நினைவு கூருகின்றோம்.

நீங்காத நினைவுகளுடன்:
- குடும்பத்தினர்.

வீரகத்தி விநாயகர் கோயிலடி,
இமையாணன், உடுப்பிட்டி.

(சி-36050)(34-14)

## VACANCIES
## UNIVERSITY OF JAFFNA, SRILANKA

University of Jaffna will entertain applications from suitably qualified persons for the undermentioned Posts.

**FACULTY OF SCIENCE**

Professor of Organic Chemistry */Physical Chemistry/ Statistics /Computer Science /Mathematics/ Botany/ Zoology/ Marine Biology /Physics.

Senior Lecturer Grade / Lecturer (Probationary) in Inorganic Chemistry/ Physical Chemistry/Physics**/Computer Science

Instructor in Computer Technology.

*Note:*

* Those who applied for the Post of Professor of Organic chemistry in response to our advertisement of 18-06-2002 need not apply again as those applications will be considered along with the new applications.

** Preference will be given to those who have B.Sc.(Eng.) degree with specialisation in Electronics, to Post of Senior Lecturer/Lecturer in Physics.

Closing date:

| | |
|---|---|
| Post of Professor | 15-10-2004 |
| Other Posts | 01-09-2004 |

| POST | SALARY SCALE |
|---|---|
| Professor | Rs.28050-8x605-32890 p.m. |
| Senior Lecturer Grade I | Rs.23650-8x525-27850 p.m. |
| Senior Lecturer Grade II | Rs.20160-5x525-27875 p.m. |
| Lecturer (Probationany) | Rs.13070-1x375;9x415-17180 p.m. |
| Instructor in Computer Technology | Rs.12050-3x300-12950(EB)14210-13x415-19605 p.m. |

In addition to the above salary, an academic allowance of 30% of salary (except for the Post of Instructor in Computer Technology) and other allowances approved by the University Grants Commission will also be paid.

Application forms and other details may be obtained from the office of the Assistant Registrar/Establishments, University of Jaffna, SriLanka, either in person or by post on a payment of Rs.20/= for each form. Those who wish to obtain application forms by post are requested to send a Money order/Postal order drawn in favour of the "Bursar, University of Jaffna" together with a self-addressed stamped envelop 23x30 cm in size.

Applicants from the University System/Government Departments/Coporations and Statutory Boards shoulds channel their applications through the Head of respective Institutions.

Those who wish to apply for more than one Post should apply in separate forms for each post.

Applications received after the closing date will be rejected without intimation

VICE-CHANCELLOR

UNIVERSITY OF JAFFNA, SRILANKA.
14-07-2004.

(C/36072)(42-34-14)


**நாளை யாழ்ப்பாணத்தில்....!**
நடன ஆசிரியையும் Moon Beauty Care
நடத்துநருமான திருமதி B.அகிலா
அவர்களின் அழகுக் கலை வகுப்புகள்
ஆரம்பமாகின்றன.

இடம்: 94, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி (இந்து சமய குருகுலம் அருகில்)
காலம்: 21.07.2004 புதன்கிழமை காலை 11.00 மணி

* எடிசன் அக்கடமியில் பதிவை மேற்கொண்டவர்களும் புதிதாகச் சேரவிரும்புபவர்களும் சமுகமளிக்கவும்.
* ஒவ்வொரு பிரிவிலும் 10 மாணவர்கள் மட்டும் சேர்த்துக்கொள்ளப் படுவார்கள்.
* பருத்தித்துறை, உடுப்பிட்டி, தென்மராட்சியில் கற்கவிரும்புவோர் தொடர்புகொள்ளவும்.

தொடர்புகளுக்கு: 021-2263365, 0777-570138
(34270)(34-14)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 10 - 11 - 1926

உதிர்வு 21 - 06 - 2004

**இரத்தினசாமி துரைராசா**

எங்கள் துயர் நீக்கப் பிறந்த எம் குலவிளக்கே!
நீங்களில்லாத ஒவ்வொரு கணமும்
ஏங்கித் தவிக்குதையா எம் இதயம்
எம் வாழ்க்கை சிறப்படைய
எத்தனை பாடய்யா தினம் பட்டாய்
ஊரார் புகழ்ந்து பேச வாழ்ந்த உத்தமனே!
எங்கள் தேத்தாப்பாவே எங்கே சென்றீர்கள்?
'தேத்தாப்பா தேத்தாப்பா' என்று குழந்தைகள் கூவி அழ
எமையெல்லாம் தவிக்கவிட்டு இறைவனடி சேர்ந்தீரோ?
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தகவல்:
மனைவி, மக்கள்,பெறாமக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கொண்டல்கட்டு,
வல்வெட்டித்துறை. (34100)(34-14)

# மலசலகூடச் சுத்திகரிப்பில் மாணவரை ஈடுபடுத்தலாமா?

**செய்திக் கட்டுரை**
**வலி.மேற்குச் செய்தியாளர்**

சங்கானைக் கல்விக் கோட்டத்தில் ஆண்டு ஒன்று தொடக்கம் ஆண்டு ஐந்து வரையான வகுப்புக்கள் உள்ள பாடசாலைகளே அதிகம் உள்ளன. இந்தப் பாடசாலைகளுக்கு நவீன முறையில் மலசலகூடங்கள் ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தினரால் அமைத்துக்கொடுக் கப்பட்டுள்ளன.

மலசலகூடங்களை அமைத்துக் கொடுத்த வர்கள் அவற்றைப் பயன்படுத்த வசதிகள் தேவை என்பதைக் கவனத்தில் கொள்ளவில்லை. தண்ணீர் வசதி இல்லாத பாடசாலைகளிலும் சுகாதாரத் தொழிலாளர்கள் இல்லாத பாட சாலைகளிலும் மலசலகூடங்களைப் பரா மரிப்பது குறித்து அவர்கள் கவனமெடுக்க வில்லை என்றே கருதவேண்டியுள்ளது. சில பாடசாலைகளில் அமைத்துக்கொடுக்கப்பட்ட மலசலகூடங்கள் பூட்டப்பட்ட நிலையில் இருப் பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

சங்கானைக் கோட்டப் பிரிவிலுள்ள ஒரு சில பெரிய பாடசாலைகளிலேயே சுகாதாரத் தொழிலாளர்கள் கடமையாற்றுகின்றனர். சுகாதாரத் தொழிலாளர்கள் கடமையாற்று கின்ற பாடசாலைகளை விரல்விட்டு எண்ண முடியும்.

இந்த நிலைமையில் சில பாடசாலைகளில் மாணவர்களே சுழற்சிமுறையில் மலசலகூடங் களை சுத்தப்படுத்துகின்றனர். மாணவர்கள் சரியானமுறையில் மலசலகூடங்களை சுத்தப் படுத்துகின்றனரா? என்பதைப் பார்வையிடுவதற்கு அதிபர்களினால் ஆசிரியர்களும் சுழற்சிமுறை யில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கல்வி கற்பதற்குச் செல்லுகின்ற மாணவர் கள் கழிவறைகளை சுத்தப்படுத்துவது எந்த வகையில் நியாயமானது? என்று பெற்றோர் தரப்பில் கேள்வி எழுப்பப்படுகின்றது. காலை யில் எழுந்து தமது அன்றாடக் கடமைகளை முடித்த பின்னர், நீராடி சுத்தமான உடையுடன் பாடசாலைகளுக்குப் படிப்பதற்காகச் செல்லுகின்ற மாணவர்களை கழிவறைகளைச் சுத்தப்படுத் தும் பணியில் ஈடுபடுத்தலாமா? என்று [illegible]வர்கள் கேட்கின்றார்கள்.

கழிவறைகளைச் சுழற்சி[illegible]ல் சுத் தப்படுத்தும் பணியையே பாடசாலைகளுக்கு சென்றவுடன் மாணவர்கள் செய்கின்றனர். சுத் திகரிப்புப் பணி முடிந்த பின்னர், அவர்கள் வகுப்பறைகளுக்கு அப்படியே செல்கின்றனர். அப்போது அவர்களது சுகாதார நிலைமை குறித்தே தற்போது கவலை தெரிவிக்கப்படு கிறது. கழிவறையைச் சுத்தம் செய்துவிட்டு, வகுப்பறையில் அமரும் மாணவர்கள் நோய்த் தொற்றுக்கு ஆளாகும் அபாயம் உள்ளது.

சிறுவர்களின் உரிமைகள் தொடர்பாகக் குரல் எழுப்பும் நிறுவனங்கள் மிகப்பெரிய அளவில் சிறுவர்களின் உரிமைகள் மீறப்படும் இச்செயல் குறித்து அக்கறை காட்டாதமை கவலைக்குரியதாகும்.

ஆகவே, பாடசாலைகளில் சுத்திகரிப்புத் தொழிலாளர்களை நியமிப்பதற்குக் கல்வித் திணைக்களத்தினர் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியமாகும்.

கல்வித் திணைக்களத்தினர் நிதி இல்லை என்றால் பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் வளமான வாழ்வுக்குப் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் மூலம் சுத்திரிகரிப்புத் தொழிலாளர் களை நியமிக்கவேண்டியது அவசியமாகும்.

யாழ். மாவட்டத்தில் தற்போது சுத்திரி கரிப்புத் தொழிலாளர்களுக்குப் பற்றாக்குறை நிலவுவதாகவும் தெரியவருகின்றது. இந்தத் தொழிலை இவர்தான் செய்யவேண்டும் என்ற மனோநிலை நம்மவர் மத்தியில் இருந்து அகல வேண்டும். சகலரும் சகல தொழிலும் செய் வோம் என்ற மனநிலை தோன்றுமானால் எந் தத் தொழிலாளர்களுக்கும் பற்றாக்குறை நில வாது.

எது எப்படியிருப்பினும் பாடசாலைகளி லுள்ள கழிப்பறைகளைச் சுத்தப்படுத்தும் மாணவர்கள் அதிலிருந்து விடுபடுவதற்கு சம் பந்தப்பட்ட அனைவரும் காலந்தாழ்த்தாது உட னடியாக நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசி யம் ஆகும்.

இதேவேளை, பூட்டப்பட்டுக் கிடக்கும் கழி வறைகளும் மாணவர்களின் பாவனைக்குத் திறக்கப்படவேண்டும். ★

# நாடாளுமன்றத்தில் இன்று ஆறு பேர் எம்.பிக்களாகச் சத்தியப்பிரமாணம்

கொழும்பு,ஜுலை20

இன்று நாடாளுமன்றம் கூடும்போது ஆறு பேர் எம்.பிக்களாக சத்தியப்பிரமாணம் செய்து கொள்ளவிருக்கின்றனர்.

அவர்களில் மூவர் ஐக்கிய தேசியக்கட்சி சார்பிலும், மற்ற மூவர் ஐக்கிய மக்கள் சுதந் திரக் கூட்டமைப்பு சார்பிலும் எம்.பிக்களாக நியமிக்கப்பட்டவர்களாவர்.

ஐ.தே.கட்சியின் தேசியப் பட்டியல் எம்.பிக் களாக மயோன் முஸ்தபா, பஷீர் சேகுதாவூத், எஸ்.நிஜாமுதீன் ஆகியோர் பதவி ஏற்கின்ற னர்.

கருணா விவகாரத்தில் சர்ச்சைக்குள்ளான அலிஸாகிர் மௌலானாவின் ராஜினாமாவைய டுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு மயோன் முஸ் தபா எம்.பியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

கடந்த நாடாளுமன்றத்திலும் ஐ.தே.க. தேசியப்பட்டியல் எம்.பியாகப் பதவிவகித்த மயோன் முஸ்தபா தற்போது புதிய கட்சி யொன்றை ஸ்தாபிக்கும் முயற்சிகளில் தீவிர மாக ஈடுபட்டிருக்கின்றார்.

இந்நிலையில் ஐ.தே.கவின் தேசியப்பட்டி யல் எம்.பி பதவியை ஏற்பதா? இல்லையா? என்ற திரிசங்கு நிலையில் புனித மக்காவுக் குச் சென்று உம்றா கடமையை நிறைவேற்றி விட்டுத் திரும்பிய மயோன் முஸ்தபா தனது முடிவைத் தற்போது அறிவித்திருக்கிறார்.

அம்பாறை மாவட்ட மக்களின் கோரிக் கைகளுக்கு மதிப்பளித்து எம்.பி. பதவியை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் அவ ருக்கு ஏற்பட்டிருப்பதாக மயோன் முஸ்தபா வின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

எனினும் ஐ.தே.க. எம்.பியாக இருந்து கொண்டே புதுக்கட்சி அமைக்கும் வேலைகளி லும் அவர் ஈடுபடுவார் என மேலும் தெரிவிக் கப்படுகிறது.

பஷீர் சேகுதாவூத், நிஜாமுதீன் ஆகியோர் முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் ஐ.தே.கட்சியின் தேசியப்பட்டியல் எம்.பிக்களாக நியமிக்கப் பட்டிருக்கின்றனர். மு.கா.சார்பில் முன்னர் எம்.பிக்களாகப் பதவி வகித்த புஸ்பகுமார, இஸ்மாயில் குத்தூஸ் ஆகியோரின் இராஜி னாமாவையடுத்து ஏற்பட்ட வெற்றிடங்களுக்கு கட்சி இவர்களது பெயர்களை சிபாரிசு செய் திருந்தது.

பஷீர் சேகுதாவூத் எம்.பி. பதவி ஏற்ற உட னேயே அதனை இராஜினாமாச் செய்வார் என முன்னர் தெரிவிக்கப்பட்ட போதிலும், தற் போது நாடாளுமன்றத்தில் அவரது பிரதி நிதித்துவம் அவசியம் என்பதால் பஷீர் இராஜி னாமாச் செய்யமாட்டார் என்று மு.கா.தேசிய அமைப்பாளர் கே.ஏ.பாயிஸ் எம்.பி. தெரிவித் துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பில் எம்.எம்.முஸம்மில், நிர்மல கொத்த லாவெல, எம்.ஆர்.மித்திரபால ஆகியோர் எம்.பிக் களாகப் பதவி ஏற்கின்றனர்.

இவர்களில் மாத்தளை, பூஜாப்பிட்டியைச் சேர்ந்த எம்.எம்.முஸம்மில் ஜே.வி.பி. சார்பில் கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் எம்.பியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இம்முறை மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டு முதலமைச்சர்களான முன்னாள் ஊடகத்துறை அமைச்சர் ரெஜினோல்ட் கூரே (களுத்துறை), முன்னாள் பிரதி அமைச்சர் மஹிபால ஹேரத் (கேகாலை) ஆகியோரின் இடங்களுக்கு முறையே நிர்மல கொத்தலா வெல, எம்.ஆர்.மித்திரபால ஆகியோர் விருப்பு வாக்கு அடிப்படையில் எம்.பிக்களாக நியமிக் கப்பட்டிருக்கின்றனர்.

இன்று நாடாளுமன்றம் கூடியதும் சபாநாய கர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார முன்னி லையில் இந்த ஆறுபேரும் எம்.பிக்களாகச் சத்தியப் பிரமாணம் செய்து கொள்வர் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

(க)



வலி.கிழக்குப் பிரதேச சபையின் ஏற்பாட்டில் அண்மையில் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் சுற்றுச்சூழல் பாதுகாப்புக் கருத்தரங்கும், மரநடுகையும் நடைபெற்றன. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பிராந் திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். அருகில் மேற்படி பிரதேச சபையின் முன்னாள் செயலாளர் க.வெங்கடாசலம், வலி.கிழக்கு உதவிப் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.
(படம்: நீர்வேலிச் செய்தியாளர்)

# கிராமிய பண்பாட்டு ஊர்வலத்தில் பல நூற்றுக்கணக்கானோர் பங்கேற்பு

யாழ்ப்பாணம்,ஜுலை20

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத் தின் 10ஆவது ஆண்டு நிறைவையொட்டி நல் லூரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதி நாள் நிகழ்வில் சிறப்பு நிகழ்வாக கிராமியக் கலை பண்பாட்டு ஊர்வலம் இடம்பெற்றது. இதில் பல நூற்றுக்கணக்கானோர் பங்கேற்ற னர்.

பிற்பகல் 4 மணியளவில் நல்லூர் சட்டநா தர் ஆலய முன்றிலில் இருந்து மங்கள வாத் தியம் முழங்க ஊர்வலம் ஆரம்பமானது. இந்த ஊர்வலத்தில் சுமார் 300 இற்கும் அதிகமான பாரம்பரிய கலைஞர்கள் பங்கு பற்றியிருந்த னர். காவடி, கரகம், சிலம்படி, புரவிநடனம், வேடுவநடனம், கும்மி, நடனம், கோலாட்டம், என 50இற்கும் மேற்பட்ட கலைவடிவங்கள் இந்தப் பண்பாட்டுப் பேரணியில் இடம்பெற்றன.

ஊர்வலம் பருத்தித்துறை வீதி, முத்திரைச் சந்தி ஊடாக நல்லூர் கோயில் முன்றிலைச் சென்றடைந்தது.

இந்த ஊர்வலத்தைக்காணப் பெருமளவு மக்கள் வழி நெடுகிலும் குவிந்து காணப்பட் டனர். ஊர்வலத்தை அடுத்து விழா நிகழ்வு கள் துர்க்கா மணி மண்டபத்தில் இடம்பெற் றன.

(எ-9-6-31)

# சட்டவிரோதமாக மின்பெற்ற 15 பேர் ஏழாலை, ஊரெழுப் பகுதிகளில் சிக்கினர்

ஏழாலை,ஜுலை20

ஏழாலை, மயிலங்காடு, குப்பிளான், ஊரெழு ஆகிய பகுதிகளில் சட்டவிரோதமாக மின்சாரம பெற்ற 15 பேர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப் பட்டனர்.

சுன்னாகம் மின்சாரசபை அதிகாரிகளும், பொலீஸாரும் இணைந்து பெரும் தேடுதல் நட வடிக்கையை மேற்கொண்டனர்.

இந்த நடவடிக்கையின் போது கைதுசெய்யப் பட்ட 15 பேரும் சுன்னாகம் பொலீஸ் நிலையத தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் மல்லாகம் நீதிவான் முன் இன்று ஆஜர் செய்யப்படவிருக்கின்றனர்.

இந்தப் பகுதியில் சட்ட விரோத மின் பாவனை அதிகரித்து இருப்பது கண்டுபிடிக்கபட்டதை அடுத்தே இந்தத் தேடுதல் நடவடிக்கை நடத் தப்பட்டதாகக் கூறப்பட்டது.

(எ-3-45)

# புறக்கோட்டையில் கடத்தப்பட்ட பஸ் ஹப்புத்தளையில் மீட்கப்பட்டது

கொழும்பு,ஜுலை20

புறக்கோட்டை பஸ் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போக்குவரத்துச் சபை பஸ ஒன்றை கடத்தி ஓட்டிச்சென்ற நபர் ஒருவரை ஹப்புத்தளையில் வைத்துப் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

புறக்கோட்டை பஸ் நிலையத்தில் பஸ்ஸை நிறுத்திவிட்டு ஊழியர்கள் தேநீர் அருந்தச் சென்றிருந்த சமயம் பஸ்ஸிற்குள் ஏறிய ஒரு நபர் அதனைக் கடத்திச் சென்றுள்ளார். உட னடியாகவே பொலீஸாருக்கு விடயம் அறி விக்கப்பட்டு சகல வெளியூர் பொலீஸ் நிலை யங்களுக்கும் தகவல் கொடுக்கப்பட்டது.

கடத்தப்பட்ட பஸ்ஸை ஹப்புத்தளையில் வைத்து பொலீஸார் கைப்பற்றியதுடன் கடத்தி யவரையும் கைது செய்தனர். அவர் பாணந் துறையைச் சேர்ந்தவர் என்றும் வாகனங்க ளைக் கடத்தி விற்கும் கூட்டத்தைச் சேர்ந்தவ ரென்றும் பொலீஸார் கருதுகின்றனர்.

(ப)

# ஆரியகுளத்திலுள்ள சல்பீனியாவை அழிக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

**மாநகரசபை ஆணையாளருக்குக் கடிதம்**

கொக்குவில்,ஜுலை20

சுகாதாரச் சீர்கேட்டை ஏற்படுத்தும் யாழ். ஆரியகுளத்திலுள்ள சல்பீனியா பூண்டுகளை அழிக்கவிரைந்து நடவடிக்கை எடுக்குக.

- இவ்வாறு யாழ். ஆரிய குளம் முற்போக்கு வாலிபர் கழகம் யாழ். மாநகரசபை ஆணையா ளரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது விடயமாக மேற்படி கழகம் மாநகர் ஆணையாளருக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளது.

அந்தக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட் டிருப்பதாவது:-

மேற்படி குளத்திலுள்ள சல்பீனியா பூண்டு களை அழிப்பது சம்பந்தமாக முன்னரும் பல தடவைகள் தங்களிடம் கோரிகை விடுத்திருந் தோம். ஆனால், ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

இதனால், யாழ்நகரின் மத்தியில் உல்லாசப் பயணிகள் சங்கமிக்கும் யாழ். ஆரியகுளம் பகுதியில் பெரும் சுகாதாரச்சீர்கேட்டை ஏற் படுத்துவதாக இந்த சல்பீனியாப் பூண்டுகள் வளர்ந்துள்ளன. இது இந்தப் பகுதியில் நுளம்பு கள் பெருகிப் பல்வேறு நோய்கள் பரவும் காரண மாக அமைந்துவிடுகின்றது.

எனவே, எமது கிராமத்தைச்சேர்ந்த மக்க ளின் நலன் கருதியும், பொது நோக்கம் கருதி யும் ஆரியகுளத்திலுள்ள சல்பீனியா பூண்டு களை அழித்து அனைவரது சுகாதார வாழ்விற் கும் உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-76)

தென்மராட்சி கிழக்கு
**பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - கொடிகாமம்**

**பொது முகாமையாளர் பதவிவெற்றிடம்**

01. சம்பள அளவுத்திட்டம்:
- 5250 - 7750 (கூ.வே.ஆ.சுற்று நிருபம் 31/99 இன்படி)
120/10-130/10
(குமிழ்மீட்டு இல.101/8 168/81 இன்படி)

02. வயது:- 25 தொடக்கம் 50 வரை (சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை பொருந்தாது)

03. விண்ணப்ப முடிவு திகதி:- 05.08.2004

04. பிணைப்பணம்:- ரொக்கம் 15000/= ஆதனம் 25000/=

05.1. சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
2. சங்கத்தில் ரூ.10/-செலுத்திப் பெற்றுக்கொண்ட விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பிக்கவேண்டும்.
3. கணனி அறிவும், திறனும் அவசியமாக இருத்தல் வேண்டும்.
4. மேலதிக விவரங்களைச் சங்கப் பணிமனையில் அறிந்துகொள்ளலாம்.

06. வேறு சங்கங்களில் இருந்து விண்ணப்பிப்பவர்கள் தங்களுடைய சங்கத்தினூடாக விண்ணப்பிக்கவேண்டும்.

07. விண்ணப்பங்கள் 'தலைவர், தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் வரையுள்ளது, பருத்தித்துறை வீதி, கொடிகாமம்' என்ற முகவரிக்கு 'பொது முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம்' எனக் கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல்வேண்டும்.

08. அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:
(அ) கூட்டுறவுச் சங்க ஊழியர் 9 ஆம் சம்பளத்திட்ட பதவி ஒன்றில் மூன்று (3) வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க 10 ஆம் சம்பளத்திட்ட பதவி ஒன்றில் ஆறு (6) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.
அல்லது
(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டதாரிச் சான்றிதழ் அல்லது அதற்குச் சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமைமட்டப் பதவியொன்றில் நான்கு (4) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.
அல்லது
(இ) கூட்டுறவுச் சங்க ஊழியர் (உயர்தரம்) சான்றிதழ்/க.பொ.த. (உயர்தரம்) மூன்று பாடங்களில் சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமைமட்டப் பதவியொன்றில் ஆறு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

- தலைவர்.

**தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம், பருத்தித்துறை வீதி, கொடிகாமம்.**
(சி-36046)(34-14)

## மாடுகளுக்குத் தடுப்பூசி

கோப்பாய் பிரதேச கால்நடைகளுக்கு கோப்பாய் மத்தி - வடக்கு விவசாய சமமேளனத்தின் ஏற்பாட்டில் தொண்டையடைப்பானுக்குரிய தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

இதனடிப்படையில், இன்று செவ்வாய்க்கிழமை கோப்பாய் மத்தி பகுதியிலுள்ள கோப்பாய் அம்மன் கோயிலடி, கோப்பாய் கிளுவானை ஒழுங்கை, கோப்பாய் மருத்துவமனை பின்பகுதி ஒழுங்கை ஆகிய இடங்களில் வைததுத் தடுபபூசி ஏற்றப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-72)


**கோடைகால ஜில் சொப்பிங்**

✦ முகூர்த்தப்பட்டுச் சாறி வகைகள்
✦ வெளிநாடுகளில் இருந்து உடனுக்குடன் இறக்குமதி செய்யப்பட்ட நவீன டிசைன்களில்
✦ சாறி வகைகள் ✦ சேட், T.சேட் ✦ சூட் வகைகள்
✦ ஜம்பர்வகைகள் ✦ ரவுசர் துணிவகைகள் ✦ கவுண் வகைகள்
✦ டெனிம், சோக்கோ ரவுசர் வகைகள் ✦ கோட் சூட்
✦ ஸ்கேட் & பிளவுஸ் வகைகள் ✦ பேபி கவுண் வகைகள்
போன்றவற்றை

தரமாகவும் மலிவாகவும்

பெற்றுக்கொள்ள,

**மிலேனியம் பெஷன் & பொம்பே பஜார்**

T.P.: 0214590174

இல.10, மின்சார நிலைய வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம்.
(சி-36658) (24-14-34)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்.

"எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு – மீளாத்துயில் கொண்ட – எம் காவிய நாயகியே,
"உன் வீட்டினுள் விளக்கில்லை – எம் இதயத்துள் ஒளி இல்லை"



தாயின் மடியில் 13 01 1964
இறைவன் மடியில் 20 06 2004

**திருமதி வசந்தராணி சிவபாலசுப்பிரமணியம்**

**20.07.2004**

ஈரைந்து மாதங்கள் எம்மைச் சுமந்து
பாலூட்டி சீராட்டி வளர்த்த - தாயே
நடுவீதியில் நீ பெற்ற பிஞ்சுச் செல்வங்கள்
நான்கையும் - தவிக்கவிட்டு
இடைநடுவில் - எங்கு சென்றாய் - அம்மா?

அன்பை வாரிவழங்கி எமை
அரவணைத்த தெய்வமே - உன்
இன்முகம் தேடியலைகின்றோம்.
எமை ஏங்கவிட்டுப் போனதெங்கே?

காலனவன் கண்பட்டு விட்டதோ - எம்
களிப்பான வாழ்வு கண்டு - உன்
கருணையான அரவணைப்பை - இனி
என்று நாம் பெற்று மகிழ்வோம்?

எனினும் எம் இதயமதை மலராக்கி - உன்
பாதமதில் பணிகின்றோம்.
இறுதிவரை எம் மனதில்
உன் நினைவு தொடருமம்மா?

இன்று (20.07.2004) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அமரரின் ஆத்மாசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

லயன் சிவபாலசுப்பிரமணியம் (கணவர்) பிள்ளைகள், குடும்பத்தினர்.
மாதகல் வடக்கு, மாதகல். (C/36033)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



## அமரர் ஜெயராணி வரதராஜா

(ஆசிரியர், கீரிமலை நகுலேஸ்வர வித்தியாலயம்)

| பூலோகத்தில் | மேல்லோகத்தில் |
| --- | --- |
| 01-07-1965 | 01-08-2003 |

**திதி: 20-07-2004**

ஆண்டொன்று ஆனதம்மா
ஆறவில்லை என் மனம்
ஆறுதல் சொல்ல ஆயிரம் உறவிருந்தும்
உமைப்போல் வருமா ஜெயா!
தேடுகின்றேன் இப்பூவுலகில் உனை
உன் திருமுகம் காண தினமும் வேண்டுகின்றேன்
உம்மோடு வாழ்ந்த நாள்களை
எண்ணித் தினமும் கலங்குகின்றேன் - ஜெயா
என்றென்றும் தங்கள் நினைவுகளுடன்....

- கணவர் இ.வரதராஜா.

தபாற்கந்தோர் அருகில்,
தெல்லிப்பழை. (K.K.S.)
(34238) (26-34-14)

# மூவின ஆசிரியர்களும் பங்குகொண்ட சிந்தனைக்கு விருந்தான வாண்மைவிருத்தி தினம்

கடந்த 10ஆம், 11ஆம் திகதிகளில் காலை 8.30மணி தொடக்கம் பிற்பகல் 4.30மணிவரை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் பயனுறுதி வாய்ந்த செயலமர்வுகளுடன் ஆசிரிய வாண்மை விருத்தித் தினம் கொண்டாடப்பட்டது. வடக்குக் கிழக்கு மாகாண ஆசிரிய நிலையங்கள் இணைந்து நடத்திய இந்நிகழ்வு இணைப்பின் இன்றியமையாமையையும், நிறைபயனையும் தெளிவுறுத்தியது.

மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பித்த விழாவை உரிய வேளையில் உரியமுறையில் நடத்த கல்விசார் உத்தியோகத்தர்கள் முழுமையாகச் செயற்பட்டனர்.யாழ்வலயக் கல்விப் பணிப்பாளர் மண்டப வாயிலில் நின்றே விருந்தினர், ஆசிரியர்கள்அனைவரையும் இன்முகத்துடன் வரவேற்று உரிய ஆசனங்களுக்கு வழிகாட்டினார். விழாவிற்கு தலைமை தாங்கி இரத்தினச் சுருக்கமாக விருந்தினர் உரைகளை நிகழ்த்த, யாழ். வலயக் கல்விப் பணிப்பாளரே வழிசமைத்தார். கலை நிகழ்ச்சியையும் கச்சிதமாக முடித்து ஆசிரியர்களின் செயலமர்வை உரிய வேளையில் அவர் ஆரம்பித்து வைத்தார்.

செயலமர்வுகளின் ஒழுங்கமைப்புகள் உண்மையில் மிக உன்னதமாக அமைந்தன. எப்பிரதேச ஆசிரியரும் எந்த அறையையோ மண்டபத்தையோ தேடி அலையாது நேர ஒழுங்கு தவறாது மணிக்குப் பணிந்து அனைத்து அமர்வுகளையும் அனுபவிக்க முடிந்தது. 11பிரிவு களாக நடைபெற்ற அமர்வுகளிலும் 11 வகையில் ஆசிரிய வாண்மை விருத்தி தூண்டப்பட்டது. ஒவ்வொரு மண்டபத்திலும் செயலமர்வுகளை நடத்திய கல்வியாளர்கள் இன் முகத்துடனும் இறுதிவரை உற்சாகத்துடனும முன்மாதிரியான ஆசிரியர்களாகவே பங்குபற்றுவது போல தம்மைமறந்து லயித்தனர்




செயலமர்வு இல.I இல் யாழ். பல்கலைக்கழக கல்வியியற்துறையினரின் ஒழுங்கமைப்பில் ஆசிரிய வாண்மை விருத்தியும் தொழில் வழிகாட்டலும் என்ற தலைப்பிலான விடயம் இடம்பெற்றது. செயலமர்வை உயிர்ப்புடன் நடத்தவிருந்த யாழ். பல்கலைக்கழக கல்வியல்துறைத் தலைவர் பேராசிரியர் என். சின்னத்தம்பி அவர்கள் நேரில் கலந்து கொள்ளமுடியாமையால் தொலைக்காட்சியில் அவரது ஆழமான கருத்துரையைக் கேட்டோம். அவரது முது கல்விமாணிக் கற்கை நெறி மாணவர்கள் எம்மவரின் சந்தேகங்களிற்கு சில விளக்கங்களை அளித்தனர். எனினும் பேராசிரியர் சின்னத் தம்பி அவர்களை நேரில் கண்டு தெளிவுபெற முடியாத சூழ நிலை ஆசிரிய குழாத்திற்கு ஆதங்கத்தை ஏற்படுத்தியது கண்கூடு.

## உத்திகள் கூறிய செயலமர்வு

செயலமர்வு இல. II இல் விளையாட்டு மூலம் ஆரம்ப கணிதம் கற்றல் உத்திகள் என்ற விடயம் மிகச் சிறப்பாக இடம்பெற்றது. வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த ஆர்வம் நிறைந்த செல்வி உதயா மிக வேகமாகவும் விளக்கமாகவும் அமர்வை நடத்தினார். கணிதத்தை கசப்பாகவே கருதும் மாணவர் குழாத்தை இலகுவில் வசப்படுத்தி எளிமையாக கற்பிக்கத்தக்க உத்திகளை அவர் ஒழுங்கமைத்துத் தந்தார். இந்த அமர்வை நடத்தியவர்கள் அனைவரது பாராட்டுக்கும் உரியவர்களே.

செயலமர்வு இல. IIIஇல் செயல்நிலை ஆய்வும் செயறபாடுகள் சார் பாடத்திட்டமும் என்ற விடயத்தை யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியினர் ஒழுங்கமைத்து இருந்தனர். கல்வியியல் கல்லூரியின் உப பீடாதிபதி ப.தனபாலன் செயல் நிலை ஆய்வு பற்றிய தெளிவான விளக்கத்தை எளிய நடையில் எடுத்துக் கூறினார். தமது மாணவர்களினால் மேற்கொள்ளப்பட்ட செயல் நிலை ஆய்வு வெளியீடுகளையும் காட்சிப்படுத்தினார். உப பீடாதிபதி அவர்களுடன் அவரது மாணவர்களும் உற்சாகமாக இணைந்து அமர்வை நடத்தினர். யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி நிறைந்த வள ஆளணியினரைக் கொண்ட கல்லூரி இச்செயலமர்வில் வளஆளணியினர் பலர் இணைந்து இன்னமும் மெருகூட்ட முடிந்திருக்கும். எனினும் உப பீடாதிபதியின் தனித்துவமான ஆளுமை, ஆற்றல் பாராட்டத்தக்கதே.

செயலமர்வு இல. IV இல் ஜி.ரி.இசற் நிறுவனத்தினர் ஆசிரிய வாண்மைவிருத்திக்கான தமது பங்களிப்பைச் சிறப்பாக விளக்கினர். கல்வி அமைச்சின் முன்னாள் செயலாளர் சுந்தரம் டிவகலாலாவும் அவரது சகாக்களும்,ஜி.ரி.இசற் நிறுவனம் ஆசிரிய வாண்மைக்காற்றும் பல்வேறு பணிகளை விளக்கினர். அது மட்டுமன்றி என்றும் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் தாம் உதவக் காத்திருப்பதையும் கூறி உற்சாகப்படுத்தினர். பயன்பாடு மிக்க நூல்களையும் காட்சிபடுத்தினர். அந்நூல்களை ஆசிரியர்கள் தனித்தனி பெற்றுப் பயன்பெற உதவும்படி வேண்டினோம். உதவுவதாக அவர் வாக்களித்துள்ளார். அவர்கள் வார்த்தை தவறாதிருக்கக் கல்வித் திணைக்களமும் இணைந்துதவ வேண்டுகிறோம்.

செயலமர்வு இல. V இல் அம்பாறை/தெகிஅத்தகண்டிய ஆசிரியர் மத்திய நிலையத்தினர்களால் "பின்னோக்கு சிந்தனைத்திறன் ஊக்கல்" என்ற செயற்பாடு வழிப்படுத்தப் பட்டது. தமிழ்/சிங்களம் ஆகிய இருமொழிகளிலும் பின்னோக்கு சிந்தனைத் திறனை ஊக்குவிக்கும் உத்திகள் விளககப்பட்டன. எதிர்கால செயற்பாடுகளை ஆசிரியர் ஒழுங்கமைக்க பின்னோக்குச் சிந்தனையின் முக்கிய பங்களிப்பை சிங்களச் சகோதரர்கள் உற்சாகமாக விளக்க இலகு தமிழில் அம்பாறை முகவர் மொழிபெயர்த்தார். விளக்கமும் மொழிபெயர்ப்பும் கவர்ச்சியாகவும் தெளிவாகவும், இடம் பெற்றமை சிறப்பம்சங்களே.

செயலமர்வு இல. VI இல் கல்முனை/வாழைச்சேனை ஆசிரியர் மத்திய நிலையத்தினர்களால் "குழுச் செயற்பாடும் குழுமுறைக் கற்றலும்" என்ற விடயம் நெறிப்படுத்தப்பட்டது. குழுக்களை வகுக்கும் பல்வேறு கவர்ச்சிகரமான வழிகளும் குழுக்களை இயங்கவைக்கும் வினைத்திறன் மிகு உத்திகளும் ஆசிரிய மத்திய நிலைய முகவர்களால் இலகுவாக விளக்கப்பட்டன. விளக்கங்கள் உத்திகள் விசேடமாக ஒழுங்கமைக்கப்பட்டு வழங்கப்பட்டன.

செயலமர்வு இல. VII இல் வலிகாமம்/வடமராட்சி ஆசிரிய நிலையங்கள் இணைந்து மாணவர் "எதிர் கொள்ளும் உளம் சார்ந்த சவால்கள்" என்ற உளவியல் பிரச்சினைகள் பற்றிய ஆய்வும் விளக்கமும் வழங்கினர். சீர்மியத் துறையில் துறைபோன உளவியலறிவு மிக்க திருமதி கோகிலா மகேந்திரன் அவர்கள் சிறந்த முறையில் விளக்கங்களைத் தந்தார். அவரோடு இணைந்து செயலாற்றிய நிலைய முகாமையாளர்களும், மாணவரை வழிப்படுத்தும் வழிமுறைகளை இலகுவாக இன்முகத்துடன் விளக்கினர். மாணவரை அணுகவேண்டிய அனுசரணையான முறைகள் ஆசிரியர்களுக்கும் இதமாக விளக்கப்பட்டமை சிந்தித்துச் செயற்பட வைக்கும் செயற்பாடுகளே.

## கற்பித்தல் சூழலுக்கு வழிசமைத்த செயலமர்வு

செயலமர்வு இல. VIII இல் வவுனியா, மன்னார், மடு, முல்லைத்தீவு, வவுனியா வடக்கு ஆசிரிய நிலையங்கள் இணைந்து நடத்திய "மகிழ்ச்சிகரமான கற்றல்" என்ற விடயம் இடம்பெற்றது. உண்மையில் ஆசிரியர்கள் அனைவரும் மகிழ்ச்சிகரமாகச் செயலமர்வில் இயங்க முடிந்தது. மாணவரை நாம் எவ்வாறு மகிழ்ச்சிகரமான சூழலுக்கு உட்படுத்திக் கவர்ச்சியாகக் கற்பிக்கலாம் என்ற உத்திகள் சிறப்பாக வழங்கப்பட்டன.

செயலமர்வு இல. IX இல் அக்கரைப்பற்று / பட்டிருப்பு ஆசிரிய மத்திய நிலையங்கள் இணைந்து வழங்கிய "புத்துணர்வூட்டல் நுட்பங்கள்" என்ற தலைப்பிலான அமர்வு இடம்பெற்றது. புத்துணர்வூட்டவல்ல புதிய எண்ணக் கருக்கள், புதுப்புது விடயங்கள் மாணவரை அணுகச் செய்யும் கவர்ச்சியான நுட்பங்கள் சிறப்பாக விளக்கப்பட்டன.

செலயமர்வு இல. X கற்றல் கற் பித்தல் ஊடகமாக "பொம்மலாட்டம்" என்ற தலைப்பில் திருகோணமலை சிங்கள மத்திய மகாவித்தியாலய ஆசிரிய நிலையத்தினரின் ஒழுங்கமைப்பு இடம் பெற்றது. மழலைத், தமிழிலும், ஆங்கிலத்திலும் பொம்மை செய்யும் முறையும், பொம்மலாட்ட மூலம் இலகுவாகக் கற்பிக்கும் முறையும் முகாமையாளர் **J.W.M.Borham** என்பவரால் விளக்கப்பட்டன. மிகக் கவர்ச்சிகரமாகவும், தெளிவாகவும் பொம்மலாட்டப் பயன்களை இன்முகத்துடன் விளக்கிய சிங்களச் சகோதரர்கள் எல்லோரதும் பாராட்டுக்கு உரியவர்கள்.

செயலமர்வு இல. XI இல் யாழ்.மாவட்ட கல்வியாளர் பலர் இணைந்து தீவக, யாழ்ப்பாண ஆசிரிய வள நிலைய ஒழுங்கமைப்பில் கனகாத்திரமான செயலமர்வை நடத்தினர். "நவீன கற்றல் கற்பித்தல் துணைச் சாதனங்கள்" என்ற தலைப்பிலான அமர்வில் பல தரப்பட்ட துணைச் சாதனங்களும் பயன்படு முறைகளும் தெளிவுபடுத்தப்பட்டன. மிக ஆவலாக ஆசிரியர்கள் பங்குகொண்டனர் எப்பொழுதும் முதன்மை ஆசிரியர்களின் கடமையை முதன்மைப் படுத்திச்செயற்படும் அனுபவ அறிவு மிக்க நா.சுவாமிநாதன் மிகச் சிறப்பாக துணைச் சாதனங்கள் பற்றி விளக்கினார்.

திருமதி கு.விஜயரகுநாதன்
(ஆசிரியை) B.A.,P.G.D.E, M.Ed.

அவரோடு இணைந்து செயற்படும் முதன்மையாசிரியர் ஞா.இரத்தினசிங்கமும் தன் பொறுப்பை முழுமையாக நிறைவேற்றினார். கணனிப் பயன்பாட்டை கல்வித் திணைக்களம் சாராத இளைஞர் (இயக்குநர் - **Mouse** கணனி நிறுவனம்,இணுவில்) மிகத் தெளிவாக விளக்கினார். இவர்களோடு இணைந்து யாழ்ப்பாண, தீவக, வலிகாம உதவிக் கல்விப்பணிப்பாளர்களும் இச்செயலமர்வை வழிப்படுத்தினர். இங்கு விளக்கப்பட்ட கற்பித்தல் சாதனங்களில் ஒரு சிலவற்றையேனும் அனைத்துப் பாடசாலைகளும் பயன்படுத்த வலயக் கல்விப்பணிப்பாளர்கள் ஆவன செய்யுமிடத்து செயலமர்வின் பயன்பாடு உறுதி செய்யப்படும். பார்த்தோம், இரசித்தோம் என்றிராது பயன்படுத்த உதவுங்கள்.

செயலமர்வுகளின் நிறைவில் பொதுக்கூட்டம் சுருக்கமாக இடம்பெற்று சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. அனைத்து நிகழ்வுகளும் சிறப்பாக அமைய அர்ப்பணிப்புடன் கடமையாற்றிய ஆசிரிய நிலைய முகாமையாளர் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள். இருமொழிச் சகோரதர்களையும் இணைத்து ஒழுங்கமைத்த இருமொழிப் பாண்டித்தியமும், இணைப்பாற்றலும் மிக்க மாகாணக் கல்வித் திணைக்களத்தைச் சார்ந்த முருகுப்பிள்ளை அனைவர் மதிப்புக்கும் பாராட்டுக்கும் உரியவர்.

மொத்தத்தில் "ஆசிரிய வாண்மைத் தினம் - 2004" சிறந்த முறையில் கொண்டாடப்பட்டது. கேளிக்கை விழாவாகவன்றி சிந்தனைக்குரிய, செயற்பாடுமிகு விழாவாக இது அமைந்தது. செயலமர்வுகளைச் சிறப்பாக நடத்தியதோடு சிறந்த கையேடுகளும் வழங்கியமை தொடருறு செயற்பாட்டைத் தூண்டுவதாயமைந்தன. அனைத்து ஆசிரியர்களும் இத்தகைய செயலமர்வுகளில் ஈடுபட எதிர்காலத்தில் வாய்ப்புக்கள் வழங்கப்படவேண்டும். முதன்மை ஆசிரியர்களும் இத்தகைய செயலமர்வுகளில் இணைவதால் தாம் நடத்தும் செயலமர்வுகளையும் சிறந்த முறையில் ஒழுங்கமைக்க உந்தப்படுவர்.

## கல்விச்சாலைக் காட்சிகள்



வலவை சிதம்பராக் கல்லூரியில் புதிதாக வடிவமைக்கப்பட்ட கழுத்துப்பட்டி வழங்கும் வைபவம் அண்மையில் இடம் பெற்றது. வல்வை வைத்தீஸ்வர தேவஸ்தான பிரதமகுரு சிவஶ்ரீ ப.மனோகரக்குருக்கள், மாணவி ஒருவருக்குப் புதிய கழுத்துப்பட்டி அணிவிப்பதைப் படத்தில் காணலாம். அருகில் கல்லூரி அதிபர் ந.அரியரத்தினமும் காணப்படுகிறார்.

*(படம்: கரவெட்டிச் செய்தியாளர்)*




யாழ். சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலையின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். கேட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.எஸ்.தங்கராஜா மற்றும் குருநகர் புனிதயாகப்பர் ஆலய முன்னாள் உதவிப் பங்குத்தந்தை அருட் திரு. க.அருட்செல்வன் ஆகியோர் பாடசாலை அதிபர் திருமதி லூ.மகேஸ்வரன் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் இணைந்து 'பாண்ட்' வாத்தியம் சகிதம் அழைத்து வருவதைப் படத்தில் காணலாம்.

*(படம்: குருநகர்ச் செய்தியாளர்)*



யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்கள், நவாலி மகாவித்தியாலயத்தில் அண்மையில் தமது கல்வியியற் செயற்றிட்டத்தை நிறைவேற்றிக் கொண்டனர். மகாவித்தியாலய அதிபர் பி.விக்னேஸ்வரன், கல்வியியற்கல்லூரி உப பீடாதிபதி பி.தனபாலன் ஆகியோருடன் ஆசிரிய, மாணவர்கள் இணைந்து எடுத்துக்கொண்ட படம் இது.

*(படம்: வலி.தெற்குச் செய்தியாளர்)*



சாவகச்சேரி, கல்வயல் டெனுஜா முன்பள்ளியின் மெய்வன்மைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவனுக்கு கல்வயல் சி.க.வ.கூ. சங்கத்தலைவர் பி.சின்னத்துரை பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

*(படம்: தென்டராட்சிச் செய்தியாளர்)*

நெஞ்சை நெருடும் நினைவுகளுடன்
## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணிற்கு மகுடமாய் 02 - 08 - 1953



விண்ணிற்கு விருட்சமாய் 20 - 06 - 2004

அமரர்
### கந்தையா றஞ்சித் B.A.(Hons)
(ஆசிரியர், யா/புனித பத்திரிசியார் கல்லூரி)

20-06-2004 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தீபம் கந்தையா - றஞ்சித் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (20-07-2004) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். தொடர்ந்து நண்பகல் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

59, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். (34277) (26-14) - குடும்பத்தினர்.

## 3ஆம் ஆண்டு நினைவு நாள்

மண்ணில் 1944 - 05 - 29



விண்ணில் 2001 - 07 - 20

### அமரர் ஜோ.ச.சத்தியநாதன்
(ஓய்வுபெற்ற கணக்குப்பதிவாளர் - பனை அபிவிருத்திச் சபை)

எங்கே சென்றீர்கள் அப்பாவே!
அனலிடை புழுவாய் மூன்றாண்டுகள்
ஏங்கித் தவிக்கின்றோம் நாமிங்கே
வந்து எம் வேதனையைப் போக்கிட
ஆவலுடன் காத்திருக்கின்றோம் அப்பாவே!

"மடத்துக்கடவை",
அல்வாய் மேற்கு,
அல்வாய். (34265) (26-14) - மனைவி, மகன்.

## முத்தமிழ் விழா

நீர்வேலி,ஜூலை20

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் ஓகஸ்ட் மாதம் 14ஆம், 15ஆம் திகதிகளில் முத்தமிழ் விழா நடத்தப்படவுள்ளது.

ஆவரங்கால் சிவசக்தி மண்டபத்தில் இவ்வருடம் இந்த விழாவை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி விழாவிற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கென கலாசாரப் பேரவை ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது. (எ-110)

## பிரதேச சபைக்குப் புதிய செயலாளர்

நீர்வேலி,ஜூலை20

வலி.கிழக்கு பிரதேச சபையின் செயலாளராகக் கடமையாற்றிய க.வெங்கடாசலம் ஓய்வு பெற்றுச் சென்றதையடுத்து 01-07-2004இல் இருந்து சபையின் புதிய செயலாளராக ஆர்.இராசதுரை நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் இதற்கு முன்னர் நல்லூர் பிரதேச சபையில் கடமையாற்றியிருந்தார். (எ-110-11)

## சேதமடைந்த நிலையில் மதகு

வலி.தெற்மேற்கு,ஜூலை20

பண்டத்தரிப்பு - மாதகல் பிரதான வீதியிலுள்ள மதகு ஒன்று நீண்டகாலமாகச் சேதமடைந்த நிலையில் உள்ளது.

பண்டத்தரிப்பு தவிட்டுக் குளத்திலிருந்து மழை காலத்தில்வரும் மிதமிஞ்சிய வெள்ள நீர் இந்த மதகு வழியாகவே சில்லாலைப் பகுதிக்குச் செல்கின்றது.

அத்துடன், பஸ் மற்றும் கனரக வாகனங்களும் இவ்வீதி வழியாகவே பயணம் செய்கின்றன.

இந்த மதகினைப் புனரமைத்துத் தருமாறு இப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கடிதமூலம் கேட்டுள்ளனர். (எ-135)

## விண்ணப்பம்

தென்மராட்சி,ஜூலை20

கிளிநொச்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த பளை, கண்டாவளை, பூநகரி ஆகிய கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கு கோட்டக் கல்வி அலுவலர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (எ-117)

## வீதி திருத்தப்படுகின்றது

நீர்வேலி,ஜூலை20

வலி.கிழக்கு பிரதேச சபைக்கென மாகாண சபையினால் குறித்தொதுக்கப்பட்ட நன்கொடை நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யபட்ட சுமார் மூன்று லட்சத்து எழுபதினாயிரம் ரூபாவிலிருந்து உரும்பிராய் கிருஷ்ணன் கோயில் வீதி புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இவ்வீதி முன்பு பெரும் குண்டும் குழியுமாகக் காணப்பட்டது. (எ-110)

நீர் சுரக்கும் விழிகளால் நாம் செலுத்தும்
## ஓராண்டு நினைவு அஞ்சலிகள்



திருமதி
### ஜெயராணி வரதராஜா
(ஆசிரியர், யா/கீரிமலை நகுலேஸ்வரா மகாவித்தியாலயம்)

*திதி: 20-07-2004*

பூமி அணைத்தது 01-07-1965 வானம் அழைத்தது 01-08-2003

*பொத்தா!*
*உனது இறப்பு இறப்பல்ல! நம் இதய ஆழத்தில்*
*முளை பிறந்து வளர்கின்ற விதைதான் அது!*
*இறைவா!*
*பழுத்திட்ட உயிர்கள் பல இருக்கென்று தெரிந்தும் – நீ*
*இழுத்திட்டாய் இளம் உயிரை! பழுத்தோர்களை ஏன் மறந்தாய்?*

150, ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம் மேற்கு,
யாழ்ப்பாணம். (34263) (26-14) - குடும்பத்தினர்.


## வரலாறு காணாத மலிவு விற்பனையும் புத்தகக் கண்காட்சியும்

*கொழும்பு ஜெயா புக் சென்ரரின் அனுசரணையுடன் யாழ்.பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தினால் பல்கலைக்கழகத்தில் இரண்டாவது தடவையாக வரலாறு காணாத மலிவு விற்பனை நடைபெறுகிறது.*

**காலம்: 2004 ஜூலை 19 முதல் 29 வரை**
**நேரம்: தினமும் காலை 9.00 மணிமுதல் 6.00 மணிவரை (புதிய நேரம்)**
**இடம்: யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரை மண்டபம்**

* சகலருக்கும் இலங்கை நூல்களுக்கு 10% கழிவு வழங்கப்படும்.
* பிறநாட்டு வெளியீடுகளுக்கு 15% கழிவும் வழங்கப்படும்.
* மொத்தமாகக் கொள்வனவு செய்யும் அனைவருக்கும் இலங்கை வெளியீடுகள் தவிர பிறநாட்டு வெளியீடுகளை (ஒவ்வொன்றிலும் ஆகக் குறைந்தது 10 பிரதிகள்கொள்வனவு) செய்வோருக்கு விஷேட கழிவாக 20% வழங்கப்படும்.

பாடசாலைகள், பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரிகள், கல்வியியற் கல்லூரி, பொதுநிறுவனங்கள், பிரதேசசபை நூலகங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் ஆகிய நிறுவனங்களிற்கு கடன் அடிப்படையில் புத்தகங்கள் கொள்வனவு செய்வதற்குரிய ஒழுங்குகள் செய்து தரப்படும்.

*தொடர்புகளிற்கு:* **வணிக மாணவர் மன்றம், யாழ்.பல்கலைக்கழகம்.**

(C/36016)(43-14-26)


அம்பாள் துணை
## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்



### ஆடிப்பூர (ருதுசாந்தி) திருவிழா
21.07.2004 புதன்கிழமை

அம்பிகை அடியார்களே!

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயிலில் நாளை (21.07.2004ஆம்) புதன்கிழமை ஆடிப்பூரத்திருவிழா (ருதுசாந்தி) மிகவும் சிறப்பான முறையில் நடைபெறத் திருவருள் கிட்டியுள்ளது. நாளை காலை மூலமூர்த்தி அம்பாளுக்கு 108 சங்காபிஷேகமும் எழுந்தருளி அம்பாளுக்கு நவோத்தர மகா சங்காபிஷேகமும் (1008 சங்குகள்), ஏனைய மூர்த்திகளுக்கு விசேட அபிஷேகங்களும் நடைபெறும். அதனைத் தொடர்ந்து பூஜை, பூரகர்மா (ருதுசாந்தி), தீபாராதனை, திருவூஞ்சல், வேதஸ்தோத்திர திருமுறைப் பாராயணம் ஆகியனவும் அம்பாள் அழகிய தாமரைப்பூ வாகனத்தில் ஆரோகணித்து வீதியுலா வரும் அலங்காரக் காட்சியும் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து அருட்பிரசாதமும், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தினரால் கல்யாண மண்டபத்திலும் நயினை அமுதசுரபி அன்னதான சபையினரால் "அமுத சுரபி அன்னதானசபை" மண்டபத்திலும் அன்னதானம் சிறப்பான முறையில் வழங்கப்படும்.

உற்சவச் சிவாச்சாரியார்கள்
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்
ஆதீன சிவாச்சாரியார்கள்

மங்கள இசை
இ. சுந்தரராசன் குழுவினர்
(நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோயில்)


விசேட மங்கள இசை
நாதஸ்வர வித்துவான் நாதஸ்வர கலாரெத்தினம்
இணுவில் K.R.சுந்தரமூர்த்தி குழுவினர்

*அடியார்கள் உரியகாலத்தில் அம்பாளின் சந்நிதானத்துக்கு வருகை தந்து நிகழ்வுகளைக் கண்டு அன்னையை வழிபாடுசெய்து இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.*

நயினாதீவு
ஸ்ரீ நாகபூஷணி அம்மன்கோயில்
ஆடிப்பூரத்திருவிழா உபயகாரர்கள்.

(34224)(34-14-26)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



"அம்பாள் அகம்"
சரசாலை மத்தி, சாவகச்சேரியைச் சேர்ந்த
**விசாகன் - ஜெயகௌரி**
தம்பதிகளின் ஏகபுத்திரி

### செல்வி சயந்தவி [சஞ்சிகா]

தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று (20.07.2004) செவ்வாய்க்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

செல்வி சயந்தவியை அன்பு அம்மா, அப்பா, அப்பம்மா, பிரான்ஸிலுள்ள மாமா குடும்பத்தினர், சரசாலையிலுள்ள பெரியம்மா, சித்தப்பா, சித்தி, மாமாமார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், அத்தான்மார், அண்ணாமார், அக்காமார் மற்றும் உற்றார், உறவினர்கள், அயலவர்கள், எமது நண்பர்கள், அன்பர்கள் அனைவரும் இராமாவில் பிள்ளையார், மட்டுவில் கிழக்கு புதரன்கேணி மாகாளி அம்பாள் அருள்பெற்றுச் சகல செல்வங்களும்பெற்றுப் பல்லாண்டுகாலம் நீடூழி வாழ்க வாழ்க என மனமார வாழ்த்துகின்றார்கள்.

"அம்பாள் அகம்",
சரசாலை மத்தி, சாவகச்சேரி.

(34232)(34-14-18)

# குடாநாட்டின் நீர்வளத்தைப் பாதுகாப்போம்...

யாழ்ப்பாண குடாநாட்டு மக்களை அச்சுறுத்தி வரும் பல்வேறு விடயங்களுள் இன்று முக்கியமாகக் கருதப்படுவது நன்னீர் வளமாகும்.

அண்மைக்காலமாகப் பல்வேறு காரணங்களால் யாழ்ப்பாணக் குடாநாடு பாலைவனம் போல மாறிக்கொண்டுவரும் நிலையில், தரைக்கீழ் நீர்வளமும் உரிய முறையில் பேணப்படாமையால் அது நஞ்சுத் தன்மை அடையும் தன்மையும் காணப்படுகின்றது. தரைக்கீழ் நன்னீர் வளம தொடர்ந்து பாதுகாக்கப்படுமா? அல்லது அடுத்த சந்ததி அதனைப்பாவிக்க முடியாத நிலை ஏற்படுமா? என்ற கேள்விக்கு எம் ஒவ்வொருவருடைய செயற்பாட்டிலும் தான் சாதகமான விடை தங்கியுள்ளது.

### நிலத்தடி நீர் வடிவமைப்பு

வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் நீண்ட பெரிய நிலப்பரப்பு இருந்தும் கூட குடாநாட்டில் தான் மக்கள் அதிகளவில் செறிந்து வாழ்கின்றனர். அதற்கு குடாநாட்டில் காணப்படும் தரைக்கீழ் நீர்வளமே முக்கிய காரணமாகின்றது.

தரையின் கீழ் காணப்படும் நர் சில இடங்களில் உப்புத்தன்மையைக் கொண்டிருக்கின்றது. நிலத்தின் அடியில் உள்ள பாறைகள் நீரை உட்புக விடும் இயல்புடையனவாக விளங்குவதே இதற்குக்காரணம்.

அத்துடன், இடத்தின் தன்மை, அதிகரித்த நீர்ப்பாவனை போன்றவற்றாலும் நீரின் அளவு மட்டம் குறைவடைய உப்பு நீர் உட்சென்று விடுகின்றது. பெரும்பாலான தரைக்கீழ் நீர் தடைகளின்றிக் கடலைச் சென்றடைந்தாலும் சில இடங்களில் உப்பு நீர் நன்னீருடன் கலந்து விடுகின்றது.

நன்னீரைத் தேவைக்கு அதிகமாகப் பயன்படுத்துவது குடாநாட்டின் நகராக்கம், நிலக்குழி மலசலகூடங்கள், திட்டமிட்டு அமைக்கப்

## கமமும் புலமும்

தயாரிப்பு: ஜெயஸ்ரீ

படாத கழிவு நீர் வாய்க்கால்கள், போர் நடவடிக்கைகள் போன்றவற்றால் குடாநாட்டு நீர் வளம் மாசடைந்து வருகின்றது. பெருமளவு கிணறுகள் உவர் நீராக மாறிவருகின்றன.

இலங்கையின் வடமேற்குப் பகுதி கடல் நிலப்பரப்பில் இருந்து, அதாவது புத்தளத்தில் இருந்து கிளிநொச்சியூடாக முல்லைத்தீவு வரை முறிவுக்குட்பட்ட பாறைகளாக சுண்ணாம்புக கற்பாறைகள் அமைந்துள்ளன. இப்பாறைகளுள் மழை நீர் உட்புகுந்து நிரம்பி, அவை நன்னீர்த்தாழியாக அமைந்துள்ளன.

பரந்தன், முல்லைத்தீவு, மன்னார் போன்ற இடங்களிலும் குடாநாட்டின் வலிகாமம், தென்மராட்சிப் பகுதிகளிலும் செறிவான நீர்வளம் கொண்டு விளங்குகின்றது. வடமராட்சிப்பகுதி ஊடறுக்கப்பட்ட இடைக்கிடையே உப்பு நீர் கொண்ட தொடர்ச்சியற்ற ஊடுபுகவிடும் பகுதிகளைக்கொண்டது.

யாழ்ப்பாணக் கடலேரியோரங்கள், தென்மராட்சி கிழக்கு, மேற்கு, வடக்கு கரையோரங்கள் வலிகாமத்தைச் சுற்றிய கரையோரங்கள், தீவகக் கடலோரப்பகுதிகள் இடைக்கிடையே உப்பு நீரைக் கொண்ட தொடர்ச்சியற்ற ஊடுபுகவிடும் இயல்பு கொண்ட தரைகளாக விளங்குகின்றன.

யாழ். குடாநாட்டில் காணப்படும் சுண்ணாம்புக்கல்லும், மண்ணும் நீர் உட்புகுந்து தங்கி நிற்க காரணமாகின்றன. சுண்ணாம்புப் பாறையின் கரைசல் தன்மையால் அதிக நீர் உட்புக முடிகின்றது. மணல் பிரதேசங்கள் சிறந்த நீர் வளப்பகுதிகளாக உள்ளன. செம்மண்கொண்ட வலிகாமம் பகுதியும் நீரை உட்புகவிடும் தன்மை கொண்டது.

இட உயரங்களுக்கு ஏற்ப தரைக்கீழ் நீர் மட்டமும் வேறுபடுகின்றது. நன்றாகச் சுண்ணாம்புக்கல் கரைந்த இடங்களில் நிரந்தரமாக நீரைக் கொண்டுள்ளது.

நிலாவரை, குரும்பசிட்டி, பொக்கணை போன்ற இடங்களில் உள்ள வற்றாத கிணறுகள் மானிப்பாய் இடிகுண்டுக்கிணறு, நல்லூரில் ஜமுனாரி, பொந்துக்கிணறு, தொண்டைமானாறு ஊரிக்காட்டுக்கிணறு, சாவகச்சேரி மாயக்கைக்குளம், வல்வை வியாவைக்குளம், சங்குவேலி பொக்கணை போன்றவை இவற்றுக்குச் சில உதாரணங்களாகும்.

### நீர்ப்பாவனை

பெய்யும் மழையின் அளவுக்கேற்ப தரைக்கீழ் நீரின் சேமிப்பு அளவு வேறுபடுகின்றது. வீட்டுத் தேவைகளுக்காகவும் விவசாயத் தேவைகளுக்காகவும் தரைக்கீழ் நீர் வெளியேற்றப்படுகின்றது. புள்ளி விவரங்களின்படி வீட்டுத் தேவைகளுக்கு 17ஆயிரம் ஏக்கர் அடியும், விவசாயத் தேவைகளுக்கு 28 ஆயிரம் ஏக்கர் அடியும் தரைக்கீழ்நீர் வெளியேற்றப்படுகின்றது.

அண்மைக்காலமாக இவ்வாறு தேவைகளுக்குப்பயன்படுத்தப்படும் நீரின் அளவு இரட்டிப்பாகியுள்ளதாகத் தெரியவருகின்றது. இதனால் நன்னீர் மட்டம் குறைவடைகின்றது. அத்துடன் உவர்நீரும் உள்வருகின்றது.

யாழ். குடாநாட்டில் சராசரியாக 145 ஆயிரம் ஏக்கர்ப் பரப்பில் நன்னீர் காணப்படுகின்றது. 84 ஆயிரம் கிணறுகள் பாவனையில் உள்ளன. இவற்றில் 66 ஆயிரம் கிணறுகள் வீட்டுப் பாவனைக்கும் 18 ஆயிரம் கிணறுகள் பயிர்ச் செய்கைக்காகவும் பயன்படுத்தப்படுகின்றன. அத்துடன், ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறிய குளங்களும் உள்ளன. யாழ். குடாநாட்டில் மூன்று அல்லது நான்கு மாதங்களே மழைகாலமாக இருப்பதால் குளங்களில் பெரும்பாலானவை கோடையில் நீர் வற்றிக்காணப்படும்.

### நிலத்தடி நீர் வளம் மாசடைதல்

குடாநாட்டில் மக்கள் நெருக்கமாக வாழும் இடங்களிலும் விவசாயப் பிரதேசங்களிலும் விரைவாக நீர் மாசடைந்துவருகின்றது.

நிலக்குழிமலசல கூடங்கள் அதிகளவில் கட்டப்படுகின்றன.

கைத்தொழில் ஆலைகளின் கழிவுகள், கழிவு நீர்வாய்க்கால்கள், குளங்களுக்கும் ஏரிகளுக்கும் நேரடியாக விடப்படுகின்றன. அண்மையில் இடம்பெற்ற யுத்தகாலத்தில் அளவுக்கதிகமாக இடம்பெற்ற மனிதப் புதைகுழிகள், நச்சுவாயுக்களைக் கொண்ட ஆயுதங்களின் பாவனை, போராட்டகாலத்தில் அணைக்கட்டுக்கள், நீர் நிலைகள் சிதைக்கப்பட்டு நீர் சேமிக்கப்படாமல் கடலுடன் கலககவிட்டமை போன்ற பல காரணங்களால் நீர் மாசடைவதோடு நீரின் மட்ட அளவும் குறைந்துவருகிறது.

இவை மட்டுமல்ல, நீர் நிலைகளில் குப்பைகள் போடுதல், நச்சுப்பொருள்களை வீசுதல், கிணறுகளுக்குள் தேவையற்ற கழிவுப் பொருளகளைப் போடுதல், தேவைக்கதிகமான கிருமிநாசினி, உரவகைகளைப் பயன்படுத்தல், கடற்கரையோர மண் அகழ்வு போன்ற பல செயற்பாடுகளாலும் நீர் மாசடைவதோடு உவர்த்தன்மையையும் பெறுகின்றது.

### நடவடிக்கைகள்

நிலத்தடி நீரைத் தொடர்ந்தும் மாசடையாமல், உவர்நீராக மாறாமல் இருக்கச் செய்வதற்கு நாம் அனைவரும் ஒன்றுபட்டுச் சில செயற்பாடுகளை மேற்கொள்வது அவசியம் முக்கியமாக

★ குளங்களைக் கோடைக் காலத்தில் துப்புரவு செய்தல்.

★ குளங்களில் படிந்துள்ள வண்டல் மண்களை அகற்றுதல்.

★ நீரின் உட்புகவிடும் துவாரங்களைச் செவ்வனே இயங்க வைத்தல்.

★ குளவாய்க்கால்களைத் துப்புரவு செய்தல்,

★ குளங்களுக்கு அணைகட்டுதல்,

★ குளங்களை ஆழமாக்கல்,

★ பழைய - தூர்ந்துபோன - கிணறுகளைத துப்புரவுசெய்தல்,

★ கடற்கரையில் அணைகட்டல், புனரமைதல் போன்ற வேலைகளை மேற்கொள்ள வேணடியது குடாநாட்டு மக்கள் ஒவ்வொருவரினதும் கட்டாயத் தேவையாகவுள்ளது.

கடந்த காலங்களில் குள புனரமைப்பு, உவா நீர்த்தடுப்பு அணைகட்டல், வாய்க்கால்களைத் துப்ரவு செய்தல் போன்ற செயற்பாடுகள் 'ஊற்று'

**ஏராவன்**

நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டன. அண்மைக்காலங்களில் இத்திட்டங்களை 'நியாப்' அமைப்பினர் மேற்கொண்டுவருகின்றனர்.

### கூரைச் சாய்வுகளில் தொட்டிகள்

மழை காலத்தில் கூடியளவு நீரை நாம் தேக்க வேண்டும். நீர்வளத்தைப்பேண நீரின் பாவனையைக் குறைக்க வேண்டும். மழை இல்லையாயின் நன்னீர்ப் பற்றாக்குறை ஏற்படும். இவை எல்லாம் மக்களுக்குச் சுட்டிக்காட்டப்பட வேண்டும்.

கோடைகாலத்தில் நீர் இறைப்பதைக் குறைக்கவேண்டும். தரை நீர்ப்பாவனையைக் குறைத்து மழை நீர்ப்பாவனையை அதிகரிக்கச செய்யவேண்டும்.

தற்போது புங்குடுதீவு, ஊர்காவற்றுறை வைத்தியசாலை போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் கூரைச் சாய்வுகளில் தொட்டிகட்டி நீரைச் சேகரிக்கும் போன்ற செயற்பாடுகள் குடாநாட்டின் ஏனைய இடங்களுக்கும் பரவச் செய்ய வேண்டும்.

பாலைவனமாக மாறிவரும் குடாநாட்டைச் சோலைவன மாக்குவது எமது கடமையல்லவா? எமது எதிர்கால சந்ததியினர் நன்னீர் வளத்தைப் பயன்படுத்தக் கூடிய வகையில் தரைக்கீழ் நீர் சேமிக்கப்பட்டும் நீர் வீண்விரயமாகாமல் பாதுகாக்கப்பட்டும் பயனடையவைக்க வேண்டும. எவ்வளவுக்கு மழை நீரைச் சேமிக்க முடியுமோ அவ்வளவுக்கு தரைக்கீழ் நீர் வளம் பேணப்படும். அப்போதுதான் யாழ்ப்பாணக் குடாநாட்டின் வளம் பாதுகாக்கப்பட்டு அடுத்த சந்ததியினரை மகிழ்வோடு அனுபவிக்கச் செய்யமுடியும். குடாநாடும் சோலைகள் நிறைந்த பிரதேசமாகக் காட்சி தரும். ❑

# யாழ்ப்பாணத்துப் பத்திரிகைத் துறையில் சாதனை படைத்த தீர்க்கதரிசி கே.ஸி.ரி.



கொழும்புக்கு வெளியே இருந்தும், குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இருந்தும் நாளேடு ஒன்றினை வெற்றிகரமாக வெளியிட முடியும் என்ற சாதனையை முதலில் நாட்டிய வரலாற்றுப் பெருமை 'ஈழநாடு' வையே சாரும்.

அதன் மூலவேராக இருந்து, பல சோதனைகளையும் தாண்டி, தீர்க்க தரிசனத்துடன் செயலாற்றிய திறமையும் பெருமையும் கொண்டிருந்தவர் பெரியார் கே.ஸி.தங்கராஜா.

அவரது பதினேழாவது நினைவு தினம் இன்று ஜூலை இருபதாம் திகதியாகும்.

'ஈழநாடு' பத்திரிகையின் ஆசிரியர் பகுதியிலும், பின்னர் நிர்வாகப் பிரிவிலும் நீண்ட காலம் பணிபுரிந்தவர் கட்டுரையாளர் சி.க.திருச்சிற்றம்பலம்.

அமரர் தங்கராஜா குறித்து, தமது மனதில் எழுந்த சில நினைவுத் துளிகளை இங்கே தந்திருக்கிறார் அவர்.

ஈழத்தமிழ் மக்களால் விசேடமாக யாழ்ப்பாணத்து மக்களால் இன்றும் என்றும் நினைவில் நிறுத்தப்படவேண்டியவர் அமரர் கே.ஸி. தங்கராஜா அவர்கள்.

1960 இன் பிற்பகுதிகளில் கொழும்பில் சரஸ்வதி மண்டபம அமைந்துள்ள லோறன்ஸ் வீதி வழியாக வெள்ளவத்தைக் கோயிலுக்குச் செல்லும் போதெல்லாம் சரஸ்வதி மண்டபத்தில் நிகழும் விழாக்களைப் பார்ப்பதற்காக நான் செல்வதுண்டு. அப்பொழுது அங்கே யாழ். "ஈழநாடு" பத்திரிகையின் கிளை அலுவலகம் ஒன்று நிர்வகிக்கப்பட்டுவருவதை அவதானிக்க முடிந்தது. ஒரு நாள் எனது நண்பர் ஒருவர் அங்கு கடமையாற்றிய திரு. முருகானந்தத்தை அறிமுகம செய்து வைத்தார். இதனைத் தொடர்ந்து திரு. முருகானந்தம் என்னை அமரர் கே.ஸி.தங்கராஜா அவர்கள் வசிக்கும் நியூ புல்லேர்ஸ் இல்லத்துக்கு அழைத்துச் செல்வதற்கு ஏற்பாடாகியது. குறித்த தினத்தில் நாங்கள் இருவரும் அப்பெரியாரின் இல்லத்துக்குச் சென்றபொழுது எங்களை உபசரித்து பத்திரிகைத் தொழில் பற்றிப் பல விடயங்களை எங்களுடன் கலந்துரையாடினார்.

அப்பொழுது எமக்கு ஆச்சரியம் தரும் விதத்தில் "கொஞ்சும் சலங்கை" என்ற படத்தைப் பார்த்தீர்களா? என்று ஒரு வித்தியாசமான வினாவைத் தொடுத்தார். அந்தளவுக்கு அவர் ஒரு கலாரசிகன். நான் ஆம் எனத் தெரிவித்த பொழுது, அப்படத்தின் தரத்தையும் நடிப்பினையும் பாராட்டினார். இது தான் அமரர் அவர்களுடன் ஏற்பட்ட முதல் சந்திப்பு.

அதன் பின்னர் நான் "ஈழநாடு" கொழும்புக் கிளையிலும் பின்னர் யாழ்ப்பாணத்திலும் கடமையாற்றச் சந்தர்ப்பம் கிடைத்தது. இக்காலப் பகுதியில்தான் அமரர் அவர்களுடைய வழிகாட்டல், ஆலோசனை, செயலூக்கம் என்பவற்றை அவரிடமிருந்து நேரடியாகப் பெறமுடிந்தது.

தமிழர் பிரதேசத்தில் முதலாவது தமிழ் நாளேட்டை ஆரம்பித்து வளர்த்த பெருமை பெருந்தலைவர் திரு.கே.ஸி.தங்கராஜா அவர்களுக்கே உரியதாகும். அவரது வாழ்க்கையில் நீங்காத அளவில் பெரும் செல்வாக்கைச் செலுத்திய, பெரியார்கள் கொழும்புததுறை சிவயோக சுவாமிகளும், சிதம்பரத்திலிருநது தமிழ்ப் பணியாற்றிய (அவரது தாய்வழி மாமனார்) இலக்கணச் சுவாமிகள் என்னும் முத்துக்குமாரத் தம்பிரானும் ஆவர்.

கந்தப்பர் சிற்றம்பலம் தங்கராஜா, என்றும் அவருடைய நெருங்கிய நண்பர்களால் அன்புடன் 'தங்கா' என்றும் அவர் அழைக்கப்படுவது உண்டு. இன்னும் சிலர் அவரைப் பாசத்துடன் 'K.C' என்றும் அழைப்பதுண்டு.

திரு.து.சீனிவாசகம் அவர்கள் அமரரின் மிக நெருங்கிய நண்பர். அவர்கள் இருவரும் யோகர் சுவாமிகளிடம் ஒருநாள் சென்றபொழுது - ஆச்சிரமத்தின் படலையைத் திறந்த பொழுது -

## சில நினைவுத் துளிகள்

சுவாமிகள் 'யாரடா அது? என உரத்த சத்தத்தில் கேட்டார். அதற்கு அமரர் தங்கராஜா, 'நான் தங்கராஜா வந்திருக்கின்றேன்' என்றார். அதற்குச் சுவாமிகள் 'நீ தங்கராஜா அல்ல தியாகராஜா' என்றார். அதன் பின்னர் சுவாமிகள் 'K.C.T'யைக் காணும் பொழுதெல்லாம் தியாகராஜா என்றே அழைப்பார்.

### ஈழகேசரிக்குப்பின் ஈழநாடு

குரும்பசிட்டிக் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர் பெரியார் பொன்னையா அவர்கள். திருமகள் அச்சகத்தையும், அதன் பின்னர் 1930 களில் 'ஈழகேசரி' வாரப் பத்திரிகையையும் ஆரம்பித்தவர் அவர். சில காலத்தின் பின்னர் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்துகொண்ட ஒரேயொரு பத்திரிகையாகிய 'ஈழகேசரி' வெளிவராதிருந்ததை உற்றுக் கவனித்த அமரர் தங்கராஜா அவர்கள், ஒரு பத்திரிகையைத் தொடங்க வேண்டும் என்ற பெருவிருப்புடன் தனது, மிக நெருங்கிய நண்பர்களான கலைப்புலவர் நவரத்தினம், திருஏகாம்பர், ச.அம்பிகைபாகன், கா.வைரமுத்து, ஈழகேசரி பொன்னையா, ஹன்டி பேரின்பநாயகம், ஓரேற்றர் சி.சுப்பிரமணியம், தமது சகோதரன் வைத்திய கலாநிதி சண்முகரத்தினம் மற்றும் கொழும்பு நண்பர்களுடன் ஆலோசனை செய்து 'ஈழநாடு' பத்திரிகையை 11.02.1959ஆம் நாள் தொடக்கம் வாரஇதழாக வெளியிடுவதற்கு ஒழுங்குகளை மேற்கொண்டார். இதன் பின்னர் பல அன்பர்களின் வேண்டு கோளுக்கு இணங்க அதனைவாரம் இருமுறை வெளிவரும் பத்திரிகையாக 11.02.1960 இல் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டது பின்னர் 11.02.1961 தொடக்கம் 'ஈழநாடு' நாளேடாக' வெளிவந்தது.

தலைநகர் கொழும்புக்கு வெளியே இருந்து யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்து - வெளியிடப்பட்ட பத்திரிகை என்ற வகையில் ஈழநாடு பல சோதனைகளும் வேதனைகளும் நிறைந்த நிகழ்வுகளை 'ஈழநாடு' எதிர்கொண்டது. எதையும் கண்டு இலகுவில் மனம் தளராத அமரர் தங்கராஜா அவர்கள் அவற்றினை தனது நிர்வாகத்திறமையாலும் தமது சாதுரியத்தாலும் பெரியவர்களின் நல்லிணக்கத்தாலும் வெற்றிகண்டதில் வியப்பில்லை. அமரர் கல்வியைச்சிறப்புடன் முடித்த பின்னர் றப்பர் கட்டுப்பாட்டுத் திணைக்களத்திலும் "டைம்ஸ் ஒவ் சிலோன்" நிறுவனத்திலும் பணிபுரிந்தவர். அவரது நிர்வாகத் திறமையால் அத்துறைகள் மிக முன்னேற்றமடைந்தன.

(13ஆம் பக்கம் பார்க்க)




# வண். வடமேற்கு - ஆனைக்கோட்டை, கொக்குவில்


# அருள்மிகு ஸ்ரீ வீரமாபிடாரி அம்பாள் திருக்கோயில்

# தேர்த்திருவிழாச் சிறப்பு மலர்



## 20-07-2004







## இன்னல் போக்கியருளும் அன்னை

*அம்பிகை அடியார்களே!*

இலங்கையின் வடபால் சகல வளங்களும் பொருந்திய யாழ்ப்பாண மாநகரின் வண்.வடமேற்கு ஆனைக்கோட்டை 'கொக்குவில்' என்னும் திவ்ய கிராமத்தில் கோவில் கொண்டு எழுந்தருளி அடியார்களுக்கு இன்னல் போக்கி தன்னருள் பொழிந்து வரமளித்து நல்லாட்சி புரியும் உலக மாதாவாம் அன்னை ஸ்ரீ வீரமாபிடாரி அம்பாளுக்கு சைவஆசார விதி முறைப்படி பூசை விழாக்கள், வழிபாடுகள் இவ் ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

அம்பாளின் கிருபையால் இக்கிராம மக்கள் சீரும் சிறப்பும் மிக்கவர்களாக வாழ்ந்து வருகின்றார்கள். இந்த ஆலயத்தின் வழமையான வரலாற்றுப் புகழ்மிக்க வருடாந்த உற்சவம் 12.07.2004 கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 22-07-2004 பூங்காவனத் திருவிழாவோடு நிறைவேறவுள்ளது. இன்று தேரேறிவரும் எம்பெருமாட்டியின் வருடாந்த மஹோற்சவம் இனிது நிறைவேற எம்பெருமாட்டியின் ஆசிகளை வேண்டிநிற்கின்றோம்.

தர்மகர்த்தா சபையும்,
இந்து இளைஞர் மன்றமும்.

## ஆலயக் குருக்களின் ஆசி

திருவருள் மிகு ஸ்ரீ வீரமாபிடாரி அம்பாளின் மஹோற்சவம் ஒவ்வொரு வருடமும் மிகவும் பக்தி பூர்வமாகச் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டு வருகின்றது. இந்த வருடமும் ஆலய மஹோற்சவம் மிகவும் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டு வருகின்றது. இன்று (20.07.2004) செவ்வாய்க்கிழமை காலை தேர் உற்சவம் நடைபெறுகிறது.

அம்பாளின் திருவருளோடு இன்றைய தேர்த்திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெற அம்பாளைப் பிரார்த்தனை செய்து அருளாசி வழங்குகின்றோம்.

இவ்வாலயத்தில் மென்மேலும் பல திருப்பணி வேலைகள், நல்ல காரியங்கள் நடைபெறவேண்டுமென்று பிரார்த்தனை செய்து மேலும் ஆலய தர்மகர்த்தா சபை, உபயகாரர்கள், இந்து இளைஞர் மன்றம் மற்றும் பக்த அடியார்கள், பெரியோர்கள் எல்லோரும் நாட்டில் சாந்தி, சமாதானம் அடைந்து சீரும் சிறப்புமாக நீடூழி காலம் வாழவேண்டுமென்று வீரமாபிடாரி அம்பாளை வணங்கி எல்லோரும் இன்புற்றிருக்க என்னுடைய ஆசீர்வாதத்தையும் தந்தருள்கின்றேன்.

சிவப்பிரம்மஸ்ரீ இரங்க. வரதராஜக்குருக்கள்,
பிரதம குருக்கள் ஸ்ரீ வீரமாபிடாரி அம்பாள் தேவஸ்தானம்.

## விழாச் சிறப்புற வந்தனை செய்வோர்:

**கரன் வாச் அன் றேடியோ**
Tel. 021 2226807
Mobile 0777 567785
91, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**செல்வி நகை அகம்**
1/3, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**ஈஸ்வரன் ரேடர்ஸ்**
T.P.: 021 222 2813
69, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**கணேசா நகை மாடம்**
இல.194, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**பூரணி நகை மாடம்**
T.P.: 021 222 3121
1/4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**ஏசியன் இலத்திரனியல் நிலையம்**
இல.11/4, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 5446
0777-785549

**கீதா ரேடர்**
T.P.: 4590186
மானிப்பாய் வீதி,
ஆறுகால்மடம்.

**யாழ்ரன் மல்ரி சென்ரர்**
இல.48, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**சிறி மீனாட்சி தங்க மாளிகை**
இல.187, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**சானுகா நகை மாடம்**
T.P.: 021 3700
இல.200G, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**டாட் என்ரபிரைஸ்**
இல.11,12, புதிய சந்தை அருகில்,
யாழ்ப்பாணம்.
T.P.: 222 3098 222 7622

**சிறி நதியா நகை மாளிகை**
இல.01, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 021 2709

**பிடாரி களஞ்சியம்**
ஆடியபாதம் வீதி,
கொக்குவில்.

**கணேசா களஞ்சியம்**
59, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை.

**சிறி முருகன் வெதுப்பகம்**
ஆடியபாதம் வீதி,
கொக்குவில்.

**வெண்மதி ரெக்ஸ் ரைல்ஸ்**
258, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

**தயாளினி வீடியோ சென்ரர் அன் தயாளினி பான்சி ஹவுஸ்**
பிடாரி அம்மன் கோயிலடி,
கொக்குவில் மேற்கு.
T.P.: 021 4590172

**சங்கர் தொலைத்தொடர்பு நிலையம்**
கேணியடி,
கொக்குவில் மேற்கு.
T.P.: 0214590833.

**சிறி அம்பாள் எலெக்றிக்கல்ஸ் அன் வெல்டேர்ஸ்**
1039, கே.கே.எஸ். வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

**ஸ்ரீ கிருஷ்ணா வீடியோ ஓடியோ அன் றெக்கோடிங் சென்ரர்**
ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு.

**கவி வர்த்தக நிலையம்**
ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு.

**சந்திரா வர்த்தக நிலையம்**
மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை.
T.P.: 021 222 6045.

**பிடாரி அம்பாள் சனசமூக நிலையமும் இந்து இளைஞர் மன்றமும்**
பிடாரி அம்மன் கோயிலடி,
கொக்குவில் மேற்கு.

**ஸ்ரீ காமாட்சி நகைத் தொழிலகம்**
பிடாரி கோயிலடி,
கொக்குவில் மேற்கு.

(34292) (26-14-18)

# பலஸ்தீனப் பிரதமரின் இராஜினாமாவை ஏற்க மறுத்தார் அதிபர் யசீர் அரபாத்


யசீர் அரபாத்

காஸாவில் தலைதூக்கியுள்ள ஆர்ப்பாட்டங்களை அடுத்து பலஸ்தீனப் பிரதமர் அக்மத்கியூரி கடந்த சனிக்கிழமை தம் இராஜினாமாக் கடிதத்தை கையளித்துள்ளார்.

பாதுகாப்புப் படைகளுக்குள் ஊடுருவியுள்ள ஊழல்களுக்கு முடிவு கட்டுமாறு கோரிக்கை விடுத்து துப்பாக்கிதாரிகள் ஆர்ப்பாட்டங்களிலும் அதிகாரிகளைக்கடத்துவதிலும் ஈடுபட்டு வருகின்றார்கள்.

ஜனாதிபதி யசீர் அரபாத், பிரதமரின் பதவி துறப்புக்கடிதத்தை நிராகரித்து விட்டு, காஸாவிலுள்ள பாதுகாப்பு படைகள் மத்தியில் பகிரங்க விசாரணைகளுக்குக் கட்டளை பிறப்பித்துள்ளார்.

காஸாவிலிருந்து இஸ்ரேலிய குடியேற்றங்களை இஸ்ரேல் வாபஸ்பெற முன்வந்துள்ள இத்தருணத்தில் காஸா - பலஸ்தீனர் மத்தியில் இக்குளறுபடிகள் ஏற்பட்டுள்ளன.

இதேவேளை, பாதுகாப்புப்படைகளை மறுசீரமைப்பதற்கும், குற்றஞ்சுமத்தப்பட்டு வரும் அதிகாரிகளை நீக்குவதற்கும் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஜனாதிபதி அரபாத்திற்கு ஏற்பட்டுள்ளது.

அமைச்சரவைக் கூட்டத்திற்குப் பின்னர் பிரதமர் கியூரி தமது இராஜினாமாப் பற்றிக் குறிப்பிட்டார். அதில் அவர் எனது சேவைக்கு நான் எதிர்பார்க்கும் தேவைகள் கிட்டவேண்டும். அப்படியானால் எனது இராஜினாமாவை வாபஸ்பெற நான் தயாராகவுள்ளேன் எனத் தெரிவித்தார்.

அரபாத்தின் புதிய ஏற்பாடுகள் திருப்தியளிக்குமானால் நிலைமை சீரடையும் என அமைச்சரவை உறுப்பினர் அஸாம் அல்-அஹ்மத் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.


அக்மத்கியூரி

அதேவேளை, பலஸ்தீனப் போராளிகள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காஸாவிலுள்ள பலஸ்தீனப் பாதுகாப்பு நிலையம்மீது திடீர் தாக்குதலை மேற்கொண்டார்கள். பலஸ்தீனப் பாதுகாப்புப் படைக்குள் புரையோடிப் போயுள்ள ஊழல்களை ஒழிப்பதற்கு உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு அரபாத்தை வலியுறுத்துவதாக இத்தாக்குதல் அமைந்துள்ளது. இஸ்ரேலிய - பலஸ்தீனப் பிணக்கில் கடந்த நான்கு வருடங்களில் அரபாத்திற்கு உள்ளும் புறமுமிருந்தும் இத்தகைய அழுத்தங்கள் கொடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (8)

## புதன் கிரகத்துக்கு விண்கலம் அமெரிக்கா அனுப்புகிறது

சூரியனுக்கு அருகே உள்ள புதன்கிரகத்துக்கு முப்பது ஆண்டுகளுக்குப் பின்னர் முதன்முறையாக விண்கலம் ஒன்றை அமெரிக்கா அனுப்பவிருக்கிறது.


அடுத்தமாதம் ஓகஸ்ட் இரண்டாம் திகதி இந்த விண்கலம் விண்ணில் செலுத்தப்படும். இது பூமி, வெள்ளி ஆகிய கிரகங்களையும் கடந்து புதன்கிரகத்தை அடையும்.

ஏழு ஆண்டுகளில் 790 கோடி கிலோ மிற்றர் தூரத்துக்குப் பயணம்செய்து 2011 ஆம் ஆண்டு இந்த விண்கலம் கிரகத்தைச் சென்றடையும்.

கடந்த முறை 1974 - 1975 ஆம் ஆண்டு ஒரு விண்கலத்தை புதன் கிரகத்திற்கு அமெரிக்கா அனுப்பியது. அது மூன்று முறை இந்தக் கிரகத்திற்கு அருகே சென்று தகவல்களைச் சேகரித்து அனுப்பியது.

இப்போது அனுப்பப்படும் 'மெசஞ்சர்' விண்கலம் புகைப்படக் கருவி உட்பட ஏழு அறிவியல் கருவிகளை எடுத்துச்செல்கிறது. என்னவிதமான இரசாயனப்பொருள் அங்கே இருக்கிறது என்பதை கண்டறிய உதவும் ஸ்பெக்ட்ரோ மீற்றர் அல்டிமீற்றர் ஆகிய கருவிகளையும் எடுத்துச்செல்கிறது.

இந்த விண்கலம் புதன் கிரகத்தை, ஒரு ஆண்டு காலம் சுற்றிவரும் உறைநிலையில் தண்ணீர் கிடைக்கிறதா என்பதையும் கண்டறிய முயற்சி செய்யும். (8)


நீண்டகாலமாகத் தேடப்பட்டுவந்த தீவிரவாத அமைப்பு ஒன்றின் தலைவர் உள்ளிட்ட ஏழு பேரைப் பாகிஸ்தான் படையினர் நேற்றுமுன்தினம் சுட்டுக்கொன்றனர். பாகிஸ்தானின் தேரா இஸ்மாலிகான் நகரில் நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் இவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். தீவிரவாதிகளின் சடலங்களைக் கடந்து செல்கிறார் பாகிஸ்தான் இராணுவ வீரர் ஒருவர்.

## ஐ.நா.பாதுகாப்புக் கவுன்ஸிலில் ஜேர்மனியை இணைக்க எதிர்ப்பு

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு கவுன்சிலின் நிரந்தர உறுப்பினராக இந்தியா முயற்சி செய்து வருகிறது. இதேபோல் ஜேர்மனியும் ஐ.நா.பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர உறுப்பினராக்க வேண்டும் என்று வற்புறுத்திவருகிறது.

ஆனால் ஜேர்மனியை இப்போது நிரந்தர உறுப்பினராக்கக் கூடாது என்று அமெரிக்கா வற்புறுத்திவருகிறது. ஜேர்மனி இந்தக் கோரிக்கையை விடுக்க இது பொருத்தமான நேரம் அல்ல என்றும் அமெரிக்கா கூறியுள்ளது. ஐ.நா.சபையின் அமைதிப்படையில் இருந்து சமீபத்தில் ஜேர்மனி 2 படைப்பிரிவுகளை வாபஸ் வாங்கியுள்ளது. இது ஐ.நா.சபைக்கும் அமெரிக்காவுக்கும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. (8)

## 10ஆயிரம் பிளமிங்கோ பறவைகள் தன்சானியாவில் திடீரென இறந்தன!



ஆபிரிக்காவில் உள்ள தன்சானியா நாட்டின் வடக்குப் பகுதியில் மான்யரா என்று ஒரு ஏரியும் பறவைகள், விலங்குகள் சரணாலயமும் உள்ளது. இந்த ஏரிப்பகுதியில் லட்சக்கணக்கான பிளமிங்கோ பறவைகள் வாழ்ந்து வருகின்றன. இவை ஏரிப் பகுதியில் உள்ள மண்புழு, பூச்சிகளை இரையாக உட்கொள்கின்றன. 2 ஆண்டுக்கு ஒருமுறை முட்டையிடும் இந்தப் பறவைகள் வேகமாக இனப்பெருக்கம் செய்யும் தன்மை உடையது. கவர்ச்சியான வண்ணமுடைய இந்தப் பறவைகளைப் பார்ப்பதற்கு என்றே சுற்றுலாப் பயணிகள் கூட்டம் கூட்டமாக கூடுவர்.

ஆனால், சமீபத்தில் இங்குள்ள 10 ஆயிரம் பிளாமிங்கோ பறவைகள் திடீரென இறந்துவிட்டன. ஒரே நேரத்தில் இவ்வளவு பறவைகள் இறந்தது அங்குள்ள விலங்கியல் ஆய்வாளர்களிடையே கலக்கத்தை ஏற்படுத்தியது.

இது தொடர்பாக தற்போது தீவிர ஆய்வு நடந்து வருகிறது. ஆனாலும் எந்த நோயால் இவ்வளவு பறவைகள் இறந்தன என்பதை மட்டும் இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை. இது குறித்து மேல் ஆய்வுக்கு இறந்த பறவைகளின் உடல்பகுதிகள் ஜேர்மனிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (8)

# ஈராக் பொலீஸ் நிலையம் ஒன்றின் முன் நேற்றுக்காலை கார்க்குண்டுத் தாக்குதல்!

## 10 பேர் கொல்லப்பட்டனர்; 30 பேர் காயம்!

பக்தாத்,ஜுலை20

ஈராக்கின் பொலீஸ் நிலையமொன்றின் முன்பாக நிகழ்ந்த கார்க்குண்டு வெடிப்பின் காரணமாக குறைந்தது 10 பேர் கொல்லப்பட்டனர்; 30இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர் என்று ஈராக் பொலீஸார் அறிவித்துள்ளனர்.

பக்தாத்தின் தென் மேற்கே சீதியா மாவட்டத்தில் நிகழ்ந்த இந்தச் சம்பவத்தை அடுத்து அங்கு நின்ற பல கார்கள் தீப்பற்றி எரிந்ததாகவும் அதனால் அம்புலன்ஸ் வண்டிகளும் தீயணைக்கும் படையினரும் அவசரமாக அப்பகுதிக்கு விரைந்தனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அண்மைக் காலத்தில் இடம்பெற்றுள்ள பல தொடர் குண்டு வெடிப்புக்களில் இது கடைசியாக நடந்த சம்பவமாகும். கடந்த சனியன்று நீதியமைச்சர் சென்ற வாகனத் தொடர் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இருந்து அவர் மயிரிழையில் உயிர் தப்பியிருந்தார்.

நேற்றுக்காலை நடத்தப்பட்ட இந்தக் குண்டுத் தாக்குதலில் பொதுமக்களும் பொலீஸாருமாக 10 பேர் கொல்லப்பட்டதாக பொலீஸ் அதிகாரி ஹமாத் ஜெமா என்பவர் கூறினார். ஈராக்கின் வன்செயல்களை அடியோடு அழிப்பதற்கு பிரதமர் இயட் அல்லவி உறுதி எடுத்துக்கொண்டுள்ளார். பயங்கரவாதக்குழுக்களை அழித் தொழிப்பதற்காக புதிய உளவுத்துறைப்பிரிவு ஒன்றை அவர் கடந்த வியாழக்கிழமை அறிவித்தார்.

வன்செயல்களை ஒழிப்பதற்கென ஈராக்கின் புதிய அரசு இறுக்கமான சில புதிய சட்டங்களை அறிவித்துள்ளது. இச்சட்டங்களின்படி தேவையேற்படின் குறிக்கப்பட்ட சில பகுதிகளில் இராணுவச்சட்டத்தையும் அமுல் செயய முடியும். (ப-8)

## பறவைக் காய்ச்சல் நோய் குறித்து உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை


வாஷிங்ரன்,ஜுலை20

பறவைக் காய்ச்சல் நோய் மனிதர்களுக்கு பரவாதவாறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி உலக சுகாதார நிறுவனம் கேட்டுக்கொண்டுள்ளது.

பறவைகளிலிருந்து மனிதர்களுக்கு பரவக்கூடிய (புளூ) காய்ச்சல் கடந்த ஆண்டு சீனா, தென்கொரியா, தைவான், வியட்நாம், கம்போடியா, இந்தோனேஷியா, தாய்லாந்து போன்ற நாடுகளில் பரவியது. இந்த ஆண்டு தாய்லாந்தில் 15 மாகாணங்களில் இந்நோய் பரவியுள்ளது. எனவே, ஏராளமான கோழிகள் கொல்லப்பட்டு வருகின்றன. கோழிப் பண்ணைகளில் வேலை செய்பவர்களை எச்சரிக்கையுடன் இருக்கும்படி உலக சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது.

பாதுகாப்பான ஆடைகளை அணிந்து கொள்ளும்படியும், தடுப்பூசிகளைப் போட்டுக்கொள்ளும்படியும் உலக சுகாதார நிறுவனம் தாய்லாந்து உள்ளிட்ட நாடுகளுக்கு வற்புறுத்தியுள்ளது. காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களின் இரத்தம் உடனடியாகச் சோதிக்கப்பட்டு அவர்களுக்குத் தேவையான சிகிச்சையை மேற்கொள்ளும்படி இந்த நிறுவனம் கேட்டுக்கொண்டுள்ளது. (8)

## மிகப்பெரிய செயற்கைக்கோளை விண்வெளியில் செலுத்தியது கனடா



விண்வெளிக்கு ரொக்கெட்டுக்களை அனுப்புவதில் அமெரிக்கா, ரஷ்யா நாடுகளை போல் பிரான்ஸ நாடும் தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்குகிறது. இங்கு இந்தியா உட்பட பல நாடுகள் தங்கள் நாட்டில் தயாரிக்கப்பட்ட செயற்கை கோள்களை பிரான்ஸ் நாட்டு ரொக்கெட்டுக்கள் மூலம் விண்வெளியல் செலுத்துகின்றன.

தற்போது கனடா நாட்டைச் சேர்ந்த மிகப்பெரிய தொலைத்தொடர்பு செயற்கைக்கோள் ஒன்று கடல் கடந்து பிரான்ஸ் நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டது. இந்த செயற்கைக்கோள் ஏரியன்-5 என்ற ரொக்கெட் மூலம் விண்வெளிக்கு செலுத்தப்பட்டது. இந்தச் செயற்கைக்கோள் 6 'தொன் எடை உள்ளது. உலகிலேயே இதுவரை தயாரிக்கப்பட்ட செயற்கைகோள்களில் இதுதான் மிகப்பெரியது என்பது குறிப்பிடத்தக்கது.

கும்பகோணம் பள்ளியில் நடந்த தீ விபத்தில் இறந்த குழந்தைகளுக்கு மலர் அஞ்சலி செலுத்தும் நிகழ்வு கோவை நேரு ஸ்டேடியத்தில் நேற்றுமுன்தினம் மாலை நடந்தது. இதில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கலந்துகொண்டு இறந்த குழந்தைகளுக்கான கண்ணீர் விட்டு மலர் அஞ்சலி செலுத்தினார்கள்.



## தவறிவிட்டன

அ. ஜீ. ஜெயராஜா என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 572132246V), விசேட அடையாள அட்டை, வாகன சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவை யாழ். மா நகரசபை எல்லைக் குட்பட்ட பிரதேசத்தில் 16. 07. 2004 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஸ்ரான்லி வீதியிலுள்ள ரஜீவன் மோட்டோர்ஸில் தயவுசெய்து தந்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.

தொலைபேசி இல. 0777 888403.

(34296) (42-14-18)


# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூலை20

யாழ்.ஜெயப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 17ஆவது ஆண்டு நிறைவையொட்டி நிறுவனத்தின் பயனாளிகளுக்கென நடத்தும் விளையாட்டு விழா எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.15 மணிககு பழையபூங்கா வீதி, சுண் டுக்குழியிலும் பிற்பகல் 1.45 மணிக்கு சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்திலும் நடைபெறவுள்ளது.

நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக யு.எஸ். எய்ட் மிஷன் பணிப்பாளர் கலாநிதி கரல் போக கரும் கௌரவ விருந்தினராக இலங்கை மோட்டிவேசன் அறக்கொடை நிதியத்தின் உதவிப் பணிப்பாளர் திருமதி இராணி சாமுவேலும் கலந்துகொள்ளவுள்ளனர். (10)

★ ★ ★

கோப்பாய், ஜூலை20

கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தும் அமரர் தம்பிஐயா ஸ்ரீரங்கன் ஞாபகார்த்த கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி கூடைப பந்தாட்டத் திடலில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்கு பற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

★ மாலை 6.30 மணிக்கு - ஜொனியன்ஸ் வி.க. எதிர். உடுவில் வி.க.

★ மாலை 7.30 மணிக்கு பற்றீசியன் வி.க. எதிர் கோப்பாய் ஐக்கிய வி.க. (8-72)


# பிரதான அறிவித்தல்

## சாவகச்சேரி பல.நோ.கூ.சங்கம் (வ/து)

கடந்த 29.05.2004 ஆம் திகதிய உதயன் நாளிதழில் பிரசுரமான எமது விண்ணப்பத்துக்கு அமைவாக விண்ணப்பங்கள் அனுப்புவதற்கான - முடிவுதிகதி - கால எல்லை எதிர்வரும் 28-07-2004 புதன் வரை நீடிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட விளம்பரத்தில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும்.

ப. நோ. கூ. சங்கம்,
சாவகச்சேரி.

- தலைவர்.

(C/36075)(42-14-18)


# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 21 ~ 01 ~ 1935



இறப்பு 23 ~ 07 ~ 2001

## திருமதி சோதிப்பிள்ளை இராசதுரை

திதி : திருதியை

ஆண்டுகள் மூன்று ஆனாலும் ஆறவில்லை எம்மனம்
மாண்டு நீர் போனாலும் மாறுமோ உம்நினைவு
எப்போதும் உம் முகந்தான் கண்முன்னே தெரியுதம்மா
இப்போது உமை நினைத்து அஞ்சலி செலுத்துகின்றோம்.


மலைவேம்படி,
அளவெட்டி.

ஆருயிர்க் கணவர்,
அன்பு மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(C/36076)(43-14-18-42)

# ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்...

அன்னை மடியில் 08 12 1949



ஆண்டவன் அடியில் 15 07 1999

## அமரர் தம்பித்துரை-கமலநாதன்

(இயக்குனர்—நொதோன் மோட்டோர் வேக்ஸ்
ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்)

திதி—திருதியை

20-07-2004

ஆண்டுகள் ஐந்து ஆனதப்பா
ஆற்றுவார் யாரும் இல்லை
ஆறிடுமோ எம் நெஞ்சம்
ஆறுதல் சொல்லுமப்பா...

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்

மிஷன் பாடசாலை வீதி,
கோண்டாவில்.

உங்கள் பிரிவால்
துயருறும்,
மனைவி, பிள்ளைகள்,
பெற்றோர்,
சகோதரர்கள்

# தசாக கிருஹயக்ஞ அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் தாரண வருஷம் ஆனி மாதம் 28ஆம் நாள் (12-07-2004) திங்கட்கிழமை அபரபட்ஷ தசமித் திதியில் சிவபதமடைந்த முன்னாள் கோட்டுவாசல் அம்மன் கோவில் பிரதமகுரு ஐ. இராமலிங்க குருக்கள் அவர்களின் ஜேஷ்ட புத்திரனும் எமது தந்தையுமாகிய

## பிரம்மஸ்ரீ இரா.செந்திநாத சர்மா

(வாணி புத்தகசாலை உரிமையாளர், திருகோணமலை)

அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் எமது இல்லத்தில் நடைபெறும்

21~07~2004 ஆடி மாதம் 6ஆம் நாள் புதன்கிழமை ~ தசாகம் (காலை 10.00மணி)

22~07~2004 ஆடி மாதம் 7ஆம் நாள் வியாழக்கிழமை ~ ஏகோதிஷ்டம், மாசிகம்

23~07~2004 ஆடி மாதம் 8ஆம் நாள் வெள்ளிக்கிழமை ~ சபண்டீகரணம்

24~07~2004 ஆடி மாதம் 9ஆம் நாள் சனிக்கிழமை ~ கிருஹயக்ஞம்

அன்னாரின் ஆத்மசாந்திக் கிரியைகளில் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பங்குபற்றிப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

செ.கோபிநாதன்,
வாணி புத்தகசாலை,
69A, இராஜவரோதயம் வீதி,
திருகோணமலை.

தகவல
மனைவி, மகன்.

(34293)(42-14-18)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆங்கிலப் பாட ஆசிரியை
திருமதி மதிச்செல்வி அருள்குமார்
அவர்களின் அன்புக் கணவர்



## பரமாணந்தம் அருள்குமார்

(ஆசிரியர், யா/புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்த கல்லூரி)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்,
யா/அச்செழு சைவப்பிரகாசவித்தியாலயம்,
நீர்வேலி.

(34297)(42-14-18)


# மலிவு! மலிவு! மலிவு! மலிவு! மலிவு!

## மிகவும் மலிவு! ✪ மிக்க மலிவு!!

# ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

ஸ்தாபனத்தாரின் மலிவு விற்பனை

யாழ். மக்களே!

எமது நிறுவனத்தின் 46 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 19-07-2004 முதல் 20.08.2004 வரை மலிவு விலையில் விற்பளை நடைபெறும்.

வாருங்கள் வந்து பாருங்கள்

சகலருக்கும் இலங்கை நூல்களுக்கு 10% கழிவு

இந்திய வெளியீடுகளுக்கு 20% கழிவு (3மடங்கு)

பிறநாட்டு வெளியீடுகளுக்கு 20% கழிவு

பாடசாலைகள், பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரி, கல்வியியற்கல்லூரி, பொதுநிறுவனங்கள், நூலகங்கள் முதலானவற்றிற்குக் கடன் அடிப்படையில் புத்தகங்கள் வழங்கப்படும். அத்துடன், இலவச விநியோகமும் உண்டு.

பாடசாலைகளுக்கான தரமான உள்நாட்டுப்பொருள்கள், மூலதனப் பொருள்கள், அழிபொருள்கள் ஆகியனவற்றை ஒரே கூரையின்கீழ் பெற்றிட நாடுங்கள்:

## ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

212, கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P.:222 5542

(cl-36073)(32-14-18)



# வேலை ஆள்கள் தேவை

பின்வரும் பதவிகளுக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. மேற்பார்வையாளர்
2. பாதுகாப்பு உத்தியோகத்தர்
3. உணவு பரிமாறுவோர்
4. அருப்படி வேலையாள்களும் உதவியாளரும்
5. தேநீர் தயாரிப்பாளர் (ரீ மேக்கர்)

சம்பளம் பேசித்தீர்த்துக்கொள்ளப்படும். தங்குமிட வசதியும் செய்துதரப்படும்.

குறிப்பு : வேறு பல சலுகைகளும் உண்டு.
ஆர்வம் உள்ளோர் விண்ணப்பிக்கவும்.

தொடர்பு:

## மலாயன் கபே,

36,38, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

ரெலிபோன்: 021 222 2373

(34290)(42-14-18)

# பிந்துனுவெவப் படுகொலைகளுக்கு இன்ஸ்பெக்டரின் அசமந்தமே காரணம்

## உயர் நீதிமன்றத்தில் சொலிசிட்டர் ஜெனரல் வாதம்

கொழும்பு,ஜூலை20

பிந்துனுவெவ படுகொலையில் சம்பந்தப்பட்ட 4ஆவது எதிரியும் மேன்முறையீட்டு மனுதாரருமான இன்ஸ்பெக்டர் கருணசேன நினைத்திருந்தால் தடுப்பு முகாமில் ஏற்பட்ட படுகொலைகளைத் தடுத்திருக்கலாம், அவ்வாறு நடைபெறாமல் போனது துரதிஷ்டமாகும்.

இவ்வாறு பிந்துனுவெவ படுகொலை வழக்கில் குற்றவாளிகளாகக் காணப்பட்ட 4 எதிரிகளின் மேன்முறையீடு தொடர்பான விசாரணைகள் உயர் நீதிமன்றில் ஐந்து நீதியரசர்களின் முன்னிலையில் ஆரம்பமானது. சட்டமா அதிபரின் சார்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் சீ.ஆர்.டி.சில்வா (பிசி) தமது வாதங்களை முன்வைக்கையில் நீதியரசர்களிடம் எடுத்துரைத்தார்.

பண்டாரவளை பொலீஸ் நிலையத்தின் குற்றவியல் பிரிவு பொறுப்பதிகாரியாகவிருந்த 4ஆவது எதிரியுமான மனுதாரர் இன்ஸ்பெக்டர் கருணாசேன சம்பவ தினத்தன்று குழப்பத்தில் ஈடுபட்டிருந்த கும்பல்களை தம் விருப்பப்படி நடந்து கொள்ள அனுமதித்திருந்தார் என்பது மிகவும் துரதிஷ்டவசமான நிலைமையாகும் என்று சொலிசிட்டர் ஜெனரல் கூறினார்.

பிந்துனுவெவ படுகொலை வழக்கின் மேன்முறையீட்டை விசாரிப்பதற்காக விசேடமாக உருவாக்கப்பட்டுள்ள ஐந்து பேர்கொண்ட நீதியரசர்கள் குழுவின் முன் சொலிசிட்டர் ஜெனரல் தமது வாதத்தை தொடர்கையில் குறிப்பிட்டதாவது:-

நான்காவது எதிரியான மனுதாரர் செயற்படாமலிருந்தமையானது குற்றம் புரிவதற்கு வழிவகுத்துள்ளது. அது நியாயம் சம்பந்தப்பட்டதல்ல. அது சட்டபூர்வமான அவரது கடமையாகும். சட்டப்படி அவருக்கு ஒரு கடமை இருந்துள்ளது.

தடுப்பு முகாமில் இருந்தவர்களின் அறைகளில் இருந்து புகை வந்ததைப் பற்றி அவர் அறிந்திருந்தார் என்பது மட்டுமல்ல அதைக் கண்டுமிருக்கிறார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கேற்பட்ட துன்பங்களைத தடுக்கக்கூடிய வாய்ப்பு அவருக்கு இருந்துள்ளது.

முகாமில் இருந்தவர்களைக் காப்பாற்றுவது தான் அவருடைய பிரதான நோக்கமாக இருந்திருக்கவேண்டும். ஏனென்றால் அவர்கள் அரசின பாதுகாப்பில் இருந்தவர்கள். மனுதாரர் ரி-56ரக ரைபிள் வைத்திருநதுள்ளார். மேலும் சுமார் 60 பொலீஸாருக்கு பொறுப்பாகவும் இருந்துள்ளார். வெளியிலிருந்து பொலீஸாரை தருவிக்காமலேயே அவரால் முகாமில் இருந்தவர்களைக் காப்பாற்றியிருக்க முடியும். காடையர்கள் முகாமிற்குள் உடைத்துக் கொண்டு புகுந்து விட்டார்கள் என்று கண்டவுடனேயே கும்பலின் மது சுட்டிருந்தால் முகாமில் இருந்தவாகளைக் காப்பாற்றியிருக்கமுடியும்.

இந்தக்கட்டத்தில் நீதிபதிகள் குறுக்கிட்டு அங்கு வேறு பொலீஸாரும் இருந்துள்ள நிலையில் 4 ஆவது எதிரியை மட்டும் எவ்வாறு குற்றவாளியாகக் காண்பது? எனக் கேட்ட போது இன்ஸ்பெக்டர் கருணாசேன பொறுப்பதிகாரியாக இருந்துள்ளார். முழு நடவடிக்கைகளுக்கும் அவரே பொறுப்பாக இருந்துள்ளார் என்று சொலிசிட்டர் ஜெனரல் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்:-

4ஆவது எதிரி மனுதாரர், முகாமின் சுற்றாடலிலேயே இருந்துள்ளார். கும்பல் கட்டடதகிற்கு தீவைத்தபோது அங்கு விரைந்து போயிருக்க வேண்டும். அவர் அவ்வாறு போகாதிருந்ததால் அதற்கு அவர் விளக்கமளிக்க கடமைப்பட்டிருக்கிறார். அவர் தமது சாட்சியத்தில் இந்த விளக்கத்தைத தருவதற்கு தவறியிருக்கிறார் என்று கூறினார்.

முன்பதாக 5ஆவது எதிரியான மனுதாரர் ரி.ஆர்.ஆர்.ரட்ணநாயக்காவை நீதிபதிகள் விடுதலைசெய்தனர். சாட்சியம் போதாமையால அவர் மீதான குற்றச்சாட்டை சொலிசிட்டர் ஜெனரல் தொடர விரும்பவில்லை.

இந்த வழக்கில் எம்.ஏ.செமி, டி.எம்.எஸ். திஸநாயக்கா, எஸ்.டி.கருணாசேன மற்றும் எம்.ஆர்.ஆர்.ரட்ணநாயக்கா ஆகியவர்கள் ட்ரயல் அட்பார் நீதிமன்றினால் தமக்கு விதிக்கப்பட்டிருக்கும் மரணதண்டனையை எதிர்த்து உயர் நீதிமன்றத்துக்கு மேல் முறையீடு செய்துள்ளனர்.

பண்டாரவளை பிந்துனுவெவ தடுப்பு முகாமில் இருந்த 28பேர் கொலைசெய்யப்பட்டது, 14பேர் மீது கொலைமுயற்சி செய்தது போன்ற பல குற்றங்களின் மீது இவர்கள் ட்ரயல் அட்பாரில் விசாரிக்கப்பட்டு தண்டனை விதிக்கப்பட்டிருந்தனர். ஜூலை29ஆம் திகதி சொலிசிட்டர் ஜெனரல் தமது வாதத்தைத் தொடர்ந்து மேற்கொள்வார்.(ப)

# பௌத்த வழிபாட்டிடங்களில் புராதனப் பொருள்கள் திருட்டு

கொழும்பு,ஜூலை20

பொத்துவிலையடுத்து குமண வனாந்தரப் பிரதேசத்தில் திருட்டுக்கோஷ்டியொன்று பௌத்த வழிபாட்டிடங்களை நாசம்செய்து பலகோடி ரூபா பெறுமதியான புதையல்களைக் கடத்திச சென்றுள்ளது எனத்தெரிவிக்கப்படுகிறது.

குமண அடர்ந்த காட்டுப்பகுதியிலுள்ள பம்பரகஸ்தலாவ எனும் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றதாக பொத்துவில் பொலீஸ் பொறுப்பதிகாரி ஈ.எச்.எம்.கருணாரத்ன கூறினார்.

குமண வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் கொடுத்த தகவலையடுத்து பொலீஸார் அண்மையில் திட்டமிட்டு நடத்திய 7 மணிநேர முற்றுகையின் போது திருட்டுக் கும்பலைச் சேர்ந்த ஒருவர் கையும் மெய்யுமாகப் பிடிபட்டார். ஏனையோர் காட்டினுள் ஓடித் தப்பினர் என பொலீஸ் அதிகாரி தெரிவித்தார்.

மலைகளைக் குடைந்து 600 ஆண்டுகளுக்கு முன்னர் காவன் திஸ்ஸ மன்னனால் அந்த பௌத்த இருப்பிடங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

ஓர் இடத்தில் 50அடி நீளமான புத்தர் சயனிப்பது போன்று சிலை இன்றுமுள்ளது. அதன் தலைப்பகுதியைக் காணவில்லை. அதன கீழிருந்த புதையல் எடுக்கப்பட்டிருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது.

மேலும் மூன்று மலைகளில் அமைக்கப்பட்ட சைத்தியப் பகுதியில் தோண்டப்பட்டு புதையல் அகற்றப்பட்டமைக்கான பாரிய பள்ளங்கள தென்பட்டன. அருகில் அகல் விளக்குகள் சிலவும் காணப்பட்டன.

திருட்டுக் கோஷடியிடம் இருந்து ஒரு துப்பாக்கி, கத்தி, கோடரி, மண்வெட்டி, லாம்பு, ஜெலிக்னைட் வெடிபொருளகள், வயர்கள் மற்றும் தொல்பொருள்கள், இரு சைக்கிள்கள் என்பன கைப்பற்றப்பட்டு பொத்துவில் பொலீஸ நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன.

“விடுதலைப் புலிகள் குமண காட்டில் இருந்த 20வருடகாலத்தில் இப்படியான சம்பவங்கள் நடைபெற்றதில்லை. ஆனால் இப்போது எம்மவரே எமது கலாசார பொக்கிஷங்களை அழிக்கத் தலைப்பட்டுள்ளனர்” என்றார் ஒரு பொலீஸ் கான்ஸ்டபிள்.

புதையலின் பெறுமதி பலகோடி ரூபாவாக இருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது.

# கிண்ணியாவில் ஹர்த்தால்

கொழும்பு,ஜூலை20

கிண்ணியா - குரங்கு பாஞ்சான் பகுதியில் அமைந்துள்ள பள்ளிவாசல், முஸ்லிம் பாடசாலை ஆகியவற்றின் கட்டடத் தொகுதிகள் உடைத்துத் தரைமட்டமாக்கப்பட்டுள்ளமைக்கும், இப்பகுதியில் முஸ்லிம்கள் இருவர் இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்டதைக் கண்டித்தும் கிண்ணியாவில் நேற்று பூரண ஹர்த்தால அனுஷ்டிக்கப்பட்டதுடன், ஆர்ப்பாட்டம் ஒன்றும இடம்பெற்றது.

அதனால் கிண்ணியா - சீனக்குடாவுக்கான படகுச் சேவை இடம்பெறவில்லை. அரச திணைக்களங்கள், வங்கிகள், பாடசாலைகள் எதுவும் இயங்கவில்லை. போக்குவரத்துச் சேவைகளும் இடம்பெறவில்லை. வர்த்தக நிலையங்கள், கடைகள் யாவும் மூடப்பட்டிருந்தன. முஸ்லிம் இளைஞர்பேரவை இந்த ஹர்த்தாலுக்கான அழைப்பை விடுத்திருந்தது.

‘கிண்ணியாப் பகுதியில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான விவசாயக்காணிகளில் விவசாயம் செய்யவிடு!’, ‘குரங்குபாஞ்சான் பகுதி, முஸ்லிம்களுக்கு சொந்தமானது!’, ‘கப்பம் கோராதே!’ போன்ற வாசகங்களைக் கொண்ட பதாகைகளை ஏந்திய வண்ணம் நூற்றுக்கணக்கானோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆங்காங்கே கறுப்புக்கொடிகள் கட்டப்பட்டிருந்ததோடு கண்டனச் சுவரொட்டிகளும் காணப்பட்டன. எனினும், அசம்பாவிதங்கள் எதுவும் நிகழவில்லை என சீனக்குடா மற்றும் கிண்ணியா பொலீஸார் தெரிவித்தனர்.

இதேசமயம், கடந்த வார இறுதியில் மூதூர் பகுதியில் வைத்து இரண்டு வியாபாரிகள் சுட்டுக்கொல்லப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்றும் ஹர்த்தால் அனுஷ்டிக்க சில அமைப்புகள் திட்டமிட்டுள்ளன எனத் தெரியவருகின்றது.

(க)



பாங்கொக்கில் நடந்த எயிட்ஸ் தடுப்பு மாநாட்டில் கலந்து கொண்ட சேதனா பிரேமசிறி, யுனிசெவ் அலுவலர் திருமதி ஜஸ்மின் சமசுதீன், சமித் டினேஷ், பவித்திரா மாணிக்கவாசகம் ஆகியோர் படத்தில் காணப்படுகின்றனர்.

# பாங்கொக்கில் நடந்த எயிட்ஸ் தடுப்பு மாநாட்டில் இலங்கைப் பிரதிநிதிகள்

கொழும்பு,ஜூலை20

பாங்கொக் நகரில் நடைபெற்ற எயிட்ஸ் நோய் தொடர்பான உலக மாநாட்டில் இலங்கையின் சார்பில் மூன்று இளம் பிரதிநிதிகள் கலந்துகொண்டு இந்நாட்டில் இளம் சமூகத்தினர் எயிட்ஸ் நோய் தொடர்பாக எதிர் நோக்கும் பிரச்சினைகளை எடுத்துக் கூறினார்கள்.

சேதனா பிரேமசிறி (வயது18), பவித்திரா மாணிக்கவாசகம் (வயது15), சமித் தினேஸ் (வயது19) ஆகிய மூவருமே இந்த மாநாட்டில் கலந்துகொண்டவர்களாவர்.

உலகளாவிய ரீதியில் தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில் இடம்பெற்ற இந்த 15ஆவது சர்வதேச எயிட்ஸ் மாநாடு கடந்த 11ஆம் திகதியிலிருந்து 16ஆம் திகதிவரை நடைபெற்றது. சுமார் 15ஆயிரம்பேர் கலந்துகொண்ட இம்மாநாட்டில் இலங்கையிலிருந்து கலந்துகொண்ட இளம் சமூகத்தினர் மூவருக்கும் யுனிசெவ் நிறுவனம் ஆதரவளித்திருந்தது.

பாங்கொக் மாநாட்டில் கலந்துகொண்ட மூவரும் வேறுபல நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றதன் பின்னர் கடந்த சனிக் கிழமையன்று நாடு திரும்பினர்.

(ப)

## மாடுகளுக்கு தடுப்பூசி

மாடுகளுக்கு தொண்டை அடைப்பான் நோய்க்கான தடுப்பூசி வழங்கும் பணி இன்றும் நாளையும் புங்குடுதீவுக் கிராமத்தில் உள்ள 12 வட்டாரங்களில் நடைபெறவுள்ளது.

இரு தினங்களும் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் வரை தடுப்பூசி ஏற்றும் பணி நடைபெறும் (ஒ)

## மூவர் கைது

மிருசுவில் பகுதியில் போதைப் பொருள் வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைதான மூன்று இளைஞர்களை நேற்று சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான் செ.பாலகிருஷ்ணன் தலா 5 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதித்து வழக்கினை ஓகஸ்ட் மாதம 27 ஆம திகதிக்கு ஒத்தி வைத்தார்.

(ஒ-117)


## ரொட்டி மேக்கர் உடன் தேவை

யாழ்நகரிற்கு அண்மையில் உள்ள உணவுச் சாலை ஒன்றிற்கு றொட்டி மேக்கர் உடன் தேவை.

தொடர்பு:
சண் கபே,
664, கே.கே.எஸ். றோட்,
அரசடி சந்தி, யாழ்ப்பாணம்.
T.P: 3521

(34308)(36)



## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆங்கில ஆசிரியர் திரு.அ.கமலராஜா அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி அருளம்பலம் முத்தம்மா** அவர்கள்

19.07.2004 அன்று இறைவனடி சேர்ந்தமையையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்திக்கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்
பா.சிற்றூழியர்கள், மாணவர்கள்,
யா/கோப்பாய் [illegible] வித்தியாலயம்.

(34307)(36-13-17)



**ராஜா** யாழ்ப்பாணம்

சரத்குமார், சாக்ஷி, விஜயகுமார் நடித்த



**மானஸ்தன்**

புதியநேரம்: 10.30,2.30,6.30,9.30.

(சி-35994)

**நாகம்ஸ்** சுன்னாகம்

அர்ஜுன், அபிராமி, பிரகாஸ்ராஜ் நடித்த

**வானவில்**

காட்சிகள்: 11.00, 3.00, 7.00 (பு.நே.)

(C/35739) (36)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

சரத்குமார், சுகன்யா, ரகுவரன் நடித்த

**கேப்டன்** தினசரி: 11.00, 2.45, 6.00 (பு.நே)

வெள்ளி, சனி, ஞாயிறு

**Random Heargs** இரவு 8.45 (பு.நே.)

(C-36291)(36)



# மரண அறிவித்தல்கள்

## திருமதி திலகவதி கந்தசாமி

(கல்வத்தை, கரவெட்டி)



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் கரவெட்டி, கலவத்தையை வசிப்பிடமாகக் கொண்டிருந்தவருமான திருமதி திலகவதி கந்தசாமி 16.07.2004 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் ஓய்வு பெற்ற டாக்டர் கிருஷ்ணபிள்ளை கந்தசாமி(J.P.)யின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-பத்தினிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை - சின்னபிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் அமரசிங்கம், மனோகரசிங்கம், சிவராஜசிங்கம், பாமதி, சுமதி, மாலதி ஆகியோரின் அன்புத தாயாரும், தயாமதி, சாந்தநாயகி ,சுமதி, செந்தில்குமார், வசந்தன், சத்தியகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.07.2004)செவ்வாய்க்கிழமை காலை 8 மணிமுதல கொழும்பு பொரளை A.F.ரேமன் மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (21.07.2004) புதன்கிழமை மாலை 3 மணிக்கு இறுதிச்சடங்குகள் நடைபெற்று, பொரளை கனத்தை மயானத்தில் பூதவுடல் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

*6/2A E.A.Cooray Mawatha,*
*Colombo - 06*
*T.P.0777302226/0112580483*

தகவல்:
Dr.K.கந்தசாமி(J.P.) (கணவர்),
பிள்ளைகள், மருமக்கள்.
(சி-36083)(36-17-13)

## திருமதி அருளம்பலம் முத்தம்மா



செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்த திருமதி அருளம்பலம் முத்தம்மா (19.07.2004) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு -வள்ளியம்மை தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற அருளம்பலத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, கனகம்மா மற்றும் இராசம்மாவின் சகோதரியும், சண்முகராஜா (கனடா), தணிகாசலமூர்த்தி, கமலராஜா (ஆசிரியர், கோப்பாய் ம.வி.), பதுமைநாயகி, யோகரட்ணம் (முகாமையாளர், திருநெல்வேலி மக்கள் கடை) ஆகியோரின் தாயாரும் நலலம்மா, பிரான்சிஸ்கம்மா, குமுதினி, கந்தையா, சுசீலாதேவி ஆகியோரின் மாமியாரும் நல்லலிங்கம், மாணிக்கவாசகர், பாலசுப்பிரமணியம் ஆகியோரின் சிறிய தாயும் சிவானந்தமூர்த்தி, கௌரி,கௌரிஅம்மா, லோகநாயகி, தவராசா, கிருஷ்ணபாலராஜா, கருணேஸ்வரன், நந்தீஸ்வரன் ஆகியோரின் பெரிய தாயாரும், ரஜனி, அருள், கனிஸ்ரெலா, றீகன், ஜீன், பத்மரூபன், மீரா, புத்மப்பிரியா, சிறி, சுசிரேகா, சர்மிளா, விதுஷிகா ஆகியோரின் பேர்த்தியும் சுலோஷன், டெஷ்மின் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2004) செவ்வாய்க்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*செங்குந்தா வீதி,*
*திருநெல்வேலி கிழக்கு,*
*யாழ்ப்பாணம்.* (34309)(36-13-17)

தகவல்:
குடும்பத்தினர்.

# சமாதானப் பேச்சை மீண்டுட ஆரம்பிக்க புலிகளின் பதிலுக்குக் காத்திருக்கிறேன்

## ஜேர்மன் அமைச்சரிடம் ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை20

பேச்சை மீண்டும் ஆரம்பிப்பதற்கு விடுதலைப் புலிகளின் பதிலை எதிர்பார்த்து அரசாங்கம் காத்திருக்கின்றது.

-இப்படித் தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. ஜேர்மன் வெளிவிவகார அமைச்சர் ஜொஸ்கா பிஸ்கர் நேற்றுக்காலை ஜனாதிபதியைச் சந்தித்தார். அதன்போதே ஜனாதிபதி மேற்கண்டவறு தெரிவித்தார். - என ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

இலங்கை சமாதான முன்னெடுப்பு மற்றும் எதிர்காலத்தில் இலங்கையில் ஜேர்மனிய முதலீடு போன்ற விடயங்கள் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகாவும், ஜேர்மன் வெளிவிவகார அமைச்சர் பிஸ்கரும் கலந்துரையாடினர். அதன்போது ஜனாதிபதி இலங்கையில் உள்ள சகல சமூகத்தவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய சமாதான வழிமுறையிலான தீர்வை அடைந்து கொள்வதில் அரசாங்கம் காட்டிவரும் அர்ப்பணத்தை பிஸ்கருக்கு சுருக்கமாக விவரித்தார்.

இலங்கை அரசு பேச்சுக்கான நிகழ்ச்சி நிரலை ஏற்படுத்துவதில் முன்நோக்கி நகர்ந்து வருகின்றது. மீண்டும் பேச்சை ஆரம்பிக்க புலிகளின் பதிலை எதிர்பார்த்து அரசாங்கம் காத்திருக்கின்றது என்றார் ஜனாதிபதி

ஜேர்மன் மேலும் இலங்கையில் முதலீடு செய்ய விருப்பம் கொண்டுள்ளது. அதனால் தான் நாம் மிக ஆர்வத்துடன் சமாதான முயற்சிகளை உற்றுநோக்கி அவதானித்து வருகின்றோம் என்றார் ஜேர்மன் வெளிவிவகார அமைச்சர் பிஸ்கர்.

இந்தச் சந்திப்பின்போது, இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் சி.டி.கசிசெட்டி, வெளிவிவகார அமைச்சின் பதில் செயலாளர் எச்.கே. ஜே.ஆர். பண்டாரா ஆகியோரும் பிரசன்னமாகி இருந்தனர்.

தனது விஜயத்தை முடித்துக்கொண்டு ஜேர்மன் அமைச்சர் நேற்றே இங்கிருந்து புறப்பட்டார். (ஒ)

## டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை20

குடாநாட்டில் டெங்கு நோய் ஒழிப்பு நடவடிக்கை எதிர்வரும் 23ஆம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் இடம்பெறவுள்ளது.

இதன் கீழ் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை யாழ். செயலகத்தால் முன்னெடுக்கப்பட விருக்கின்றது. (ஒ-202-203)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம் நாளை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நடத்தும் கலந்துரையாடலில் டென்மார்க் பல்கலைக்கழகப் பேராசிரியர் கலாநிதி ந.சிறிஸ்கந்தராஜா 'பல்லைக்கழகம் ஒன்றின் இன்றைய நிலை பற்றிய ஓர் எண்ணகரு' என்னும் தலைப்பிலும் பேராசிரியர் கலாநிதி திருமதி சிறிஸ்கந்தராசா 'தாவர இன விருத்தியில புதிய அபிவிருத்திகளும் முன்னேற்றமும் - சில ஐரோப்பிய அனுபவங்கள்' என்னும் தலைப்பில் உரை நிகழ்த்தவுள்ளனர்.

## யுத்தத்தை அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கின்றது. அரச தரப்பில் இருந்து வருகின்ற செய்திகள் யாவும் போருக்கு ஆயத்தம் என்பது போலவும், யுத்தச் சூழலை நோக்கித் தள்ளப்படுவதாகவுமே வெளிவருகின்றன.

அண்மைய நாள்களில் கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்படல் வேண்டும் என்ற கருத்துக்களும் தென்னிலங்கையில் மேலோங்கி வருகின்றன.

இவையெல்லாம் இச்சமாதானச் சூழலை, குழப்புகின்ற நோக்கம் கொண்டவை என்றே கூறவேண்டும். சிங்களப் பெரும்பான்மை இனத்திடம் போய் பெரும்பான்மையினரால் ஒடுக்கப்பட்ட தமிழ்மக்களுக்கு என்ன கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கருத்துக்கணிப்பு நடத்துவது பொருத்தமில்லாத ஒன்று.

காலம் காலமாகத் தேர்தல் ஊடாக அதனையே அவர்கள் செய்து வருகின்றனர். சிங்களப் பெரும்பான்மை எப்பொழுதுமே தமிழ் மக்களை அடிமைப்படுத்தும் சிந்தனைப் போக்கிலும் அதற்கான செயற்பாடுகளிலும் இருந்தமையாலேயே இப்போராட்டம் இந்த ளவிற்கு வளர்ச்சி கண்டுள்ளது என்றார் தமிழ்செல்வன். (ஒ)

## இலங்கை அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர்கள் பலருடன் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பேச்சு நடத்தினார். இதன்போது இலங்கைக்கான கடனுதவியை அதிகரிப்பதற்கு இந்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் இணக்கம் தெரிவித்தார்.

கடந்தகால கோர யுத்தத்தினால் சீரழிந்து போயிருக்கின்ற வடக்கு - கிழக்குப் பகுதியை மீளக்கட்டியெழுப்புவதற்கு இந்திய அரசு நிதியுதவி வழங்கும் என அதன் வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங் உறுதியளித்தார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் வர்த்தக, நுகர்வோர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, விவசாயக் காணி, நீர்ப்பாசன அமைச்சரும் ஜே.வி.பி. பிரமுகருமான அநுர திஸநாயக்க மற்றும் பல அரச உயரதிகாரிகளும் இந்தியா சென்றிருந்தனர்.

பிரதமர் தலைமையிலான குழுவினர் நேற்றிரவு நாடு திரும்ப ஏற்பாடாகியிருந்தது.

## கிளிநொச்சிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுவார். அங்கு விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவுடன் அடுத்த கட்ட நகர்வு குறித்து அவர் பேச்சுக்கள் நடத்துவார்.

கிழக்கு நிலைமையால் நெருக்கடிக்குள்ளாகியுள்ள யுத்த நிறுத்த உடன்படிக்கை தொடர்பாகவே அவர் முக்கியமாகக் கலந்துரையாடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

விடுதலைப் புலிகளுடனான சந்திப்பை முடித்துக் கொண்டு கொழும்பு திரும்பியதும் அவர் அங்கு ஜனாதிபதியைச் சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஒ-3)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களும் போராளிகளும் வரவேற்றனர்.

வன்னியிலிருந்து கடல் மார்க்கமாகவே விடுதலைப் புலிகளின் தளபதிகள் திருகோணமலைக்கு வருவது வழக்கம்.

வன்னியிலிருந்து தளபதி ஒருவர் ஹெலி மூலம் திருகோணமலைக்கு வந்திருப்பது இதுவே முதற்தடவையாகும்.

கேணல் சொர்ணம் அங்கு தங்கிநின்று தமது பணிகளை இனிமேற்கொள்வார்.

விடுதலைப் புலிகளின் இப்பிரதேசத்தில் முதலமுறையாக ஹெலிகொப்டர் ஒன்று வந்திறங்கியதால், பொதுமக்கள் பெருமளவில் அங்கு குவிந்திருந்தனர். (க-3)

## இடைக்கால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமரசிங்க, ஆறுமுகம் தொண்டமான், முத்து சிவலிங்கம், ரவூப் ஹக்கீம், வி.இராதாகிருஷ்ணன், குழுக்களின் பிரதித் தலைவர் எம். சச்சிதானந்தன், ஜாதிக ஹெல உறுமயவின் வண. அத்துரெலிய ரத்ன தேரர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பியான மாவை சேனாதிராஜா ஆகிய எம்.பிக்களும் - கலந்துகொண்டனர். ஜூன் மாதம் நடை பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத் தின்போது ஜாதிக ஹெல உறுமயக் கட்சி, இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை தொடர்பான விவாதம் நடத்தப்படவேண்டும் என வலியுறுத்தியிருந்தது.

ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதனை ஆட்சேபித்ததுடன் இந்த விவாதத்திற்கு மேலும் கால அவகாசம் வேண்டும் என வாதிட்டிருந்தது.

ஆனால், ஹெல உறுமயவுடன், ஜே.வி.பியும் இந்த விவாதம் கட்டாயமாக நடத்தப்பட வேண்டும் என வலியுறுத்தின.

இதன்படி இன்றும், நாளையும், மறுதினமுமாக மூன்று நாள்கள் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை தொடர்பான விவாதத்தை நடத்துவதற்கு ஒரு யோசனை முன்வைக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்திலும் இவ்விடயம் ஆராயப்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்திலேயே இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை மீதான விவாதத்தை ஓகஸ்ட் மாதத்தில் நடத்துவது எனத் தீமானிக்கப்பட்டது. விவாதத்திற்கான திகதி தீமானிக்கப்படவில்லை.

## வேலூர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யடுததே தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்ட கருணாவின் ஆதரவாளர் கைதுசெய்யப்பட்டார்.

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த சிறிதரன் (வயது 30) என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டிருக்கிறார். கைதுசெய்யப்பட்டபோது அவரிடம் கடவுச்சீட்டு உட்பட ஆவணங்கள் எதுவும் இருக்கவில்லை. தமிழகப் பொலீஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

இந்த நபர் கைதுசெய்யப்பட்டதையடுத்து மேற்படி முகாமை வேலூர் சிறப்புப் புலனாய்வுப் பிரிவினர் கண்காணித்து வருகின்றனர்.

விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து கருணா வெளியேற்றப்பட்டதையடுத்து மட்டக்களப்பில் இடம்பெற்ற சண்டையின்போது அங்கிருந்து தப்பிச் சென்ற கருணாவின் சகாக்கள் பலர் இம்முகாமில் தஞ்சமடைந்திருக்கலாம் என விசாரணைகளிலிருந்து சந்தேகம் எழுந்துள்ளதாம்.

கைதுசெய்யப்பட்டவர் அடிக்கடி சென்னைக்குச் சென்று வந்தார் எனவும் -

ஒவ்வொரு முறையும் கட்டுக்கட்டாகப் பார்சல்களைக் கொண்டு வந்தார் எனவும் - தெரிய வந்திருக்கிறதாம்.

அதேவேளை, கொல்கத்தா மத்திய சிறையிலிருந்து விடுதலைப் புலிகள் சிலர் தப்பியுள்ளனர் என்றும் -

அவர்கள் மீண்டும் இலங்கைக்குச் செல்வதற்காக தமிழகத்திலுள்ள அகதி முகாம்களில் பணம் திரட்டி வருகின்றனர் என்றும் -

தமிழகப் பொலீஸாருக்குத் தகவல் கிடைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-3)

## நாடாளுமன்றில் மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறுபான்மைப் பலத்துடன் ஆட்சியமைத் துள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசு, தனது ஆட்சியைத் தொடர்வதற்கான தார்மீக உரிமையை நிலைநாட்டுவதற்குத் தேவையான பெரும்பான்மைப் பலத்தை இன்னும் நாடாளுமன்றத்தில் நிரூபிக்கவில்லை.

இந்நிலையில் இன்று நாடாளுமன்றத்தில் என்ன நடக் கப்போகிறது என்ற கேள்வி அரசியல் அவதானிகள் மற் றும் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

★ பெரும்பான்மைப் பலத்தை நிரூபித்துக் காட்டுவோம் என்று சூழுரைத்துள்ள ஆளும் தரப்பு [illegible] செய்வதற்கு நாடாளுமன்றில் என்ன மாயமா[illegible] காட்டப் போகின்றது? எதிர்க்கட்சிப் பலத்தை குறைப்பதற்கு யாரை விரட்டத் திட்டமிட்டுள்ளது.

★ 'சபாநாயகர் லொக்குபண்டார தாமாகத் தமது பதவியை இராஜினாமாச் செய்யாவிட்டால் தூக்கி எறிவோம்!' - என்று ஆளும் தரப்பின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. மார்தட்டியுள்ளது. அதைச் செய்வதற்கு ஜே.வி.பி. செய்யப்போகும் 'தகிடுதம்' என்னவாக இருக்கப் போகின்றது.?

★ பெரும்பான்மைப் பலம் இல்லாத இந்த அரசை நிம்மதியாக ஆட்சிசெய்ய விடமாட்டோம் எனக் கங்கணம் கட்டியுள்ள பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி இன்று நாடாளுமன்றத்தில் வகுக்கப்போகும் வியூகம் என்ன?

- இவை குறித்து பல்வேறு தரப்புக்களிலும் பல்வேறு ஊகங்கள் வெளியிடப்படுகின்றன.

ஆனால், அனைத்துத் தரப்பினருமே தங்கள் பக்கத்தை நிலைநிறுத்துவதற்காக சாம, பேத, தான, தண்ட வழிகள் நான்கையும் நாடாளுமன்றத்தில் பிரயோகிக்கத் தயாராக இருக்கின்றனர் என்பது மட்டும் உறுதியாகத் தெரிகின்றது.

"இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் ஸ்ரீ.ல.மு.காங்கிரஸும் இன்று அரசுடன் இணையும். அவர்களுடைய ஆதரவுடன் இன்று நாடாளுமனறத்தில் பெரும்பான்மையைக் காட்டுவோம்" - என ஸ்ரீல.சு.கட்சியின் மூத்த உறுப்பினரான அமைச்சர் டி.எம்.ஜயரத்ன அடித்துக்கூறுகின்றார்.

"இது தவறு அப்படி எந்த ஒரு முடிவையும் நாங்கள் எடுக்கவில்லை" என்கிறார் இ.தொ.கா. தேசிய அமைப்பாளரும் உபதலைவருமான இரா.யோகராஜன்.

"ஸ்ரீல.மு.காங்கிரஸில் இருந்து எம்மை நீக்கியதே தவறு. நாங்கள் சட்டப்படி முஸ்லிம் காங்கிரஸகாரர்கள்தான் என நிரூபிக்க நீதிமன்றத்துக்கே சென்றவர்கள்." என்று கூறும் ரிஷாத் பதியுதீனும், நஜீப் ஏ.மஜீத்தும், முட்டாள்தனமாக அரசுடன் சேர்ந்து, எங்களுடைய வழக்கு பலவனமடைய நாங்களே காரணமாகிவிட்டோம் தொடந்தும் நாங்கள் எதிர்க்கட்சி வரிசையில் தான்" என்கிறார்கள்.

இவர்களையும் இ.தொ.காவினரையும் நம்பியே பெரும்பான்மைப் பலத்தை காட்டுவோம் என அரசுத் தரப்பு சவால்விட்டது.

இப்போது சவாலை நிறைவேற்ற முடியாத நிலை ஏற்பட்டிருப்பதால், நிலைமையைச் சமாளிப்பதற்காக நாடாளுமன்ற அமர்வை மீண்டும் குழப்பியடித்துக் களேபரம் பண்ணும் தந்திரோபாயம் முன்னெடுக்கப்படலாம் என்று சந்தேகம் கிளப்பப்படுகின்றது.

சபாநாயகரின் பதவிக்கு வேட்டு வைக்க ஜே.வி.பி. வீசிய கயிறும் இற்றுவிட்டது போலத் தெரிகின்றது.

இதனால், இன்றைய நாடாளுமன்றக் கூட்டத்தொடர் அமைதியாக நடக்குமா? நடக்க விடுவார்களா? என்பது கேள்விக்குறியாகி உள்ளது.

இன்று நாடாளுமன்றம் கூடும்போது ஐ.தே. உறுப்பினர்கள் மூவரும் ஆளும் கட்சி உறுப்பினர்கள் மூவரும் புதிதாகப் பதவிப்பிரமாணம் செய்துகொள்ளவுள்ளனர்.

இவர்கள் பதவிப்பிரமாணம் செய்துகொண்ட பின்னரே வழமையான ஏனைய விடயங்கள் மேற்கொள்ளப்பட முடியும்.

கடந்த ஜூன் 8 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அமளி துமளிகளுக்கு மத்தியில் பதவிப்பிரமாணம் செய்துகொண்ட ஜாதிக ஹெல உறுமய உறுப்பினரான அக்மீமன தயாரத்ன தேரரின் விடயத்தை மீண்டும் கிளப்ப ஜே.வி.பியினர் திட்டமிட்டுள்ளனர் என நம்பப்படுகின்றது. அவர் அன்றைய தினம் செய்த பதவிப் பிரமாணம் செல்லாது என்று ஒரு புதிய பிரச்சினையே ஜே.வி.பியினர் இன்று கிளப்பினால் நாடாளுமன்றத்தில் இன்று குழப்பநிலை ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான எதிர்க்கட்சிகளின் கூட்டணி 'நாடாளுமன்றப் பயங்கரவாதம் ஒழிக்கப்படவேண்டும்' ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற மகஜர் ஒன்றை ஏற்கனவே சபாநாயகரிடம் சமர்ப்பித்துள்ளது. இவ்விடயம் தொடர்பாக சபாநாயகரின் அறிவித்தலும் இன்றைய அமர்வின்போது இடம்பெறலாம்.எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை கடந்த அமர்வின்போது நாடாளுமன்ற செங்கோலைத் தூக்கிக் கொண்டோடிய உறுப்பினருக்கும், நாடாளுமன்றத்தில் எம்பிகளான பௌத்த குருமாரைத் தாக்கி அவமானப்படுத்தியதில் சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கும் எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என எதிர்க்கட்சிகளும் வலியுறுத்தக் கங்கணம் கட்டியுள்ளன.

இதேசமயம், ஊடகச்சுதந்திரம் பாதுகாக்கப்படும் வகையில் புதிய திருத்தச் சட்டவரைபு ஒன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான முன்னறிவித்தல் ஒன்றும் எதிர்க்கட்சிகளால் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

நாடாளுமன்றக் கூட்டத்தொடர் அமைதியாக நடைபெற்றால் இவை அனைத்தும் ஒழுங்காக இடம்பெறும். நடக்க விடுவார்களா?

ஆளும் கட்சியினரின் கைகளிலேயே அது தங்கியுள்ளது என அரசியல் அவதானிகள் கூறுகின்றனர். (க)

பாடசாலை மாணவர்களுக்கான டொச் வகுப்புகள்
ஆரம்பம்
3, 4, 5, 6ஆம் வகுப்புகளுக்கு
BERN, ZURICH
ஆகிய பெரு நகரங்களில்
லிங்கம் மாஸ்ரரின் கற்பித்தலில்
தொடர்பு: 062 7974164 - 079 3344733
4665, OFTRINGEN, SWISS.
(33927)

COMPUTER EXPRESS
Institute of Information Technology
புதிய பிரிவுகள் ஆரம்பம்.
23-07-2004, 24-07-2004
அனைத்துக் கற்கை நெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன
குறிப்பு:- மானிப்பாய் Rotaract Club இனால் நடாத்தப்பட்ட கணினிக் கருத்தரங்கில் பங்கு பற்றிய மாணவர்களிற்கு 90% கட்டணக்குறைப்புச் செய்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.
Maniam's Building 15,சிராம்பையடி வீதி, யாழ்ப்பாணம். (off Stanly Road)

உடுவில் மகளிர் கல்லூரி
(FURTHER EDUCATION)
G.A.Q. புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
21.07.2004 (புதன் மாலை 3 மணிக்கு)
அனுமதிகளை அலுவலகத்தில் பெறலாம்.
மேலதிக விவரங்களுக்கு: இணைப்பாளர்
FURTHER EDUCATION
உடுவில் மகளிர் கல்லூரி.
உடுவில், சுன்னாகம்.
T.P: 222 3300 , 0773024252
(சி-36172)

உடுவில் மகளிர் கல்லூரி
(FURTHER EDUCATION)
G.A.Q. புதிய பிரிவு ஆரம்பம்
21.07.2004 புதன் மாலை 3.00
விரிவுரையாளர்கள்:
தமிழ்: திருமதி பவுசிக்கம்
மெய்யியல்: திரு.S.S.மனோகரன்
ஆங்கிலம்: திரு.சுப்பிரமணியம்
புவியியல்: திரு.ஜங்கரன்
நாடகம்: திரு.கணேஸ்
இ.நாகரிகம்: திரு.சிறீஸ்
கி.நாகரிகம்: திரு.ரங்கன்
பொருளியல்: திரு.ஜெயகுமார்
அரசியல்: திரு.அசோக்
கணிதம்: திரு.தவசேகர்
சூ.புவியியல்: திரு.ஜங்கரன்
உடுவில், சுன்னாகம் (C/36173)(35-12-16)

கலைவட்டம் நுண்கலைத்துறை
பிரெஞ்சு நட்புறவுக் கழகம்- யாழ்ப்பாணம்
முதுசம் X
13 யாழ்ப்பாணத்து ஓவியர்களின் ஓவியங்களின் காட்சி
An Exhibition of Painting by 13 Artists from Jaffna
இலவசம்
20 யூலை - 18 ஓகஸ்ட் 2004 வரை
காலை 10.00 மணி - மாலை 5.00 மணி
பிரெஞ்சு நட்புறவுக்கழகம், 83, பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணத்தில்
Millennium Fashion & Bombay Bazaar 10, Power house Rd, Jaffna.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.07.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.